22 JUL 1931

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌல்வீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 ஸபர் ௴ 1931௵ ஜுலை ௴	இதழ் 7

ஸூரத்துல் ஜில்ஜால்

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்).

(1) பூமி அடியோடு (பலமாக) அசைக்கப்படும்போது,

(2) மேலும் (அவ்வசைவினால்) பூமி தன்னுள் அடக்கி வைத்திருப்பவைகளை வெளிப்படுத்தும் போது,

(3) (அந்தப் பயங்கரக்காட்சியைக்காணும்) மனிதன் பூமிக்கென்ன நேரிட்டுவிட்டதெனச சொல்லும்போது,

(4) அந்த நாளில் அது(பூமியானது)தன் மீது நிகழ்ந்த) செய்திகளை அறிவிக்கும்.

(5) உம்முடைய நாயன் அதற்கு அறிவித்ததற்கேற்ப

(6) அந்நாளில் மானிடர்கள் தாம் செய்த காரியங்களைக் காண்பதற்காக (கப்றுகளிலிருந்து) தனித்தனிக் கூட்டமாக வெளிக்கிளம்புவார்கள்.

(7) ஆதலின் அணுவளவு நன்மை செய்திருப்பவன் அதை (அங்கு)கண்டுகொள்வான்.

(8) அணுவளவு தீமை செய்திருப்பவன் அதை (யும் அங்கு) கண்டு கொள்வான்.

[அதாவது:—பூமி அடியோடு பலமாக அசைக்கப்பட்டு அது அசைவுறும் போது அது தன்னுள் அடக்கி வைத்திருக்கும் வித்து தானியம், புதையங்கள் சவங்கள் முதலியவற்றை வெளிப்படுத்தும் இச்சம்பவத்தைக் கண்ணுறும் மனிதன் பூமிக்கு என்ன நேர்ந்து விட்டதோ வென வினவுவான். அதுகாலை பூமியானது ஆண்டவனது கட்டளைக்கேற்ப, மனிதன் உலகில் செய்துள்ள காரியங்களனைத்தையும் ஒன்று விடாமல் விவரமாக வெளிப்படுத்தும். இதுவன்றி மானிடர்கள் தாங்கள் உலகின் கண் செய்துள்ள வேலைகளை தத்தம் கர்மங்களுக்கேற்றவாறு காண்பதற்காக கூட்டம் கூட்டமாக (கப்று) புதை குழியிலிருந்து புறப்பட்டு வருவார்கள். அவ்வாறு வந்தவுடன் ஒவ்வொரு மனிதனும் தான் உலகில் செய்துள்ள நன்மையோ, தீமையோ அணுவளவே யாயினும் அதை அங்குக் கண்டு கொள்வான் என்பதே.]

இத்திரு அத்தியாயம் மக்கீயாம். இதில் மகத்தான சம்பவமாகிய மாபெரும் அசைதல் இறுதிநாளில் நிகழவிருக்கின்றதென தெளிவுபட அறிவிக்கப் பட்டிருப்பதால், இஃது "ஸூரத்துல் ஜில்ஜால்" அசைதலைப் பற்றி அறிவிக்கும் அத்தியாயம் என்ற பெயரோடு வழங்கப் பெறுகின்றது.

இவ்வாறு பூமிக்கு அசைவு ஏற்படுவதற்கு மூன்று காரணங்களுண்டு. முதலாவதாக, ஆண்டவனது தோற்றத்தின் மகத்துவம் பூமியின்மீது ஏற்படுவதனால் பூமி துண்டந் துண்டமாக உடைந்து தட்டழிகின்றது. இதுபோன்ற சம்பவம் ஹஜரத் மூஸா (அலை) அவர்கள் சம்மந்தமாக "தூர்ஸீனா" என்னும்பெரிய பருவதத்துக்கு நிகழ்ந்தது யாவருமறிந்ததே. இரண்டாவதாக, ஆண்டவனுக்குப் பாவிகள்மீது மிதமிஞ்சிய கோப மேற்பட்டு அவர்களைப் புதைகுழியிலிருந்து எழுப்பும்போது அவர்களுக்குத் தக்க தண்டனை அளிப்பதற்குள்ள மகிமையை வெளியாக்கிக் காண்பிப்பதாகும். இஃது பூமி அசையும்படி செய்து அதன்பயனாக இறந்தவர்களின் சரீரங்கள் ஒன்றாகச் சேர்ந்து வெளியாகும்படி செய்வதன்றி சாத்தியமாகாது. மூன்றாவதாக, மறுமுறை 'ஸூர்' ஊதுவதனாலேற்படும் பேரொலியானது பூமியிலுள்ள துவாரங்கள் மூலமாய் மிக வேகமாகச் செல்வதனாலும் பூமிக்குஅசைவு ஏற்படுகிறது. பூமிக்கு இவ்வித சலனம் ஏற்படுவதை கியாமத்தில் நிகழக்கூடிய சம்பவங்களின் துவக்கமாகக் கருதல் வேண்டும்.

கியாமக் (மறுமை) நாளென ஒரு நாள் கிடையாதென்று சொல்லிக்கொண்டும், அது எப்பொழுது வரப்போகிறதென்று பரிகசித்துக் கேட்டுக்கொண்டுமிருந்தவர்கள் விஷயமாய் இவ்வத்தியாயம் அருளப்பெற்றதாகும். இது இரவில் அருளப் பெற்றிருந்தும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பொழுது புலர்வதையும் கவனியாது அதே இரவில் தங்கள் வீட்டை விட்டு வெளிவந்து இந்த அத்தியாயத்தை மனிதர்கட்கு அறிவித்தார்களெனத் தப்ஸீர் என்னும் விரித்துரைக்கிரந்தங்களில் கூறப்பட்டிருத்தல் காண்க.

இவ் வத்தியாயத்தின் நான்காவது திருவாக்கியத்தில் 'பூமி தன்னுடைய செய்தியை அறிவிக்கும்' என்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. அஃதாவது, பூமியின்கண் செய்து
எல்லாக் காரியங்களையும் ஒன்று விடா
"இந்த மனிதன் என்மீது தொழுகையைநி
வேற்றினான், இவன் நோன்பு நோற்றான். இவ
பல நற்காரியங்கள் செய்தான், இவன் ப
உயிர்களை அநியாயமாகக் கொன்றா
இவன் அயலாரின் சொத்தை அபகரித்தா
இவன்பரஸ்திரீகமனஞ்செய்தான்" என்பதாதாக அது விபரமாகவெளியிட்டுக்கூறும் பூமி இவ்வாறுசெய்வதில்இரண்டுஇரகசியங்களிருக்கின்றன. ஒன்று, அது மனிதன் செய்யும் காரியாதிகளுக்குச் சாக்ஷியாக நின்று அவன் ஏதேனும் தான் ஒரு காரியம் செய்யவில்லையென்று கூறுவதற்குத் தடையாய் விளங்குவதாகும். பூமியைப்போன்றே வானம், நக்ஷத்திரங்கள், இரவு, பகல் முதலிய யாவும் மனிதன் நிகழ்த்தும்ஒவ்வொரு காரியத்துக்கும் சாக்ஷிகளாக விளங்குவதால் அவன் செய்தவை அனைத்தும் அந்நாளில் வெளியாய் விடும். இரண்டாவதாகப் பூமி சாக்ஷியாயிருப்பதன் பயனாய் நன்மை செய்தோர்க்கு மகிழ்ச்சியும் தீமை செய்தோர்க்கு சஞ்சலமும் ஏற்படுகின்றது.

"பூமி ஜடமானது; அறிவில்லாதது. அப்படியாயின் அது சாக்ஷி கூறுவதெங்ஙனம்?" என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படக்கூடும். அச்சந்தேகம் அடியிற் கூறப்பெற்றவைகளைக் கொண்டு நிவர்த்தியாய்விடும். அஃதாவது ஆண்டவனால் படைக்கப்பெற்றுள்ள ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆத்மா உண்டு. ஆனால் சில உயிர்ப்பிராணிகள் தம் சரீரங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், தம்மிஷ்டப்படி காரியங்களைச் செய்யவும் சக்தி பெற்றிருக்கின்றன. இச்சக்தியின் உதவியால் அவை வளர்தல், உசும்புதல், அசைதல் முதலிய காரியங்களில் பராக்காயிருக்கின்றன. சில சிருஷ்டி வர்க்கங்கள் தாம் நாடியவற்றைச் செய்யவும் சிந்தனை செய்யவும் சக்தியற்றனவாயிருக்கின்றன. ஆகவே அவை அசைதல், திரும்புதல் முதலிய காரியங்களைச் செய்ய மாட்டாதனவாயிருக்கின்றன. சலனமற்ற இத்தகைய சிருஷ்டி வர்க்கங்களில் ஆத்ம சம்பந்தமிருப்பது சர்மான்னிய மக்களுக்குப் புலனாகமாட்டாது. எனினும் ஓரோர் சமயம் ஜடப்பொருள்களிலும் நாம் எதிர்பார்க்க முடியாத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. உதாரணமாய், கற்கள் மரங்கள் முதலியன

பேசியதைப்பற்றியும், மரத்தினால் அமைக்கப்பட்ட மிம்பர் (பிரசங்க மேடை) தேம்பித் தேம்பி அழுததைப்பற்றியும் ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கின்றது. இதுவுமன்றி சகல வஸ்துக்களுக்கும் ஆத்மா உண்டென்று குர்ஆன் ஷரீபில் ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் இறக்குங்கால் பூமியும் அவன் தொழுகை நிறைவேற்றிவந்த இடங்களும் அழுகின்றன வென்று ஹதீது ஷரீபின் மூலம் தெரிய வருகின்றது. ஆதலின் பூமி பேசுவது இரண்டாவது கூறிய வகையைச் சேர்ந்ததாகும்.

இதன் ஐந்தாவது வாக்கியத்தில் "உம்முடைய நாயன் அறிவித்ததற்கேற்ப சாக்ஷியம் கூறும்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து மனிதன் பூமியின்மீது செய்த காரியங்களை யெல்லாம் பூமி வெளியாக்கி விடுவது அது மனிதன் பால் பகைமைபூண்டு செய்வதல்ல வென்றும், ஆண்டவனது கட்டளையை யேற்றே அவ்வாறு செய்கிறதென்பதும் தெரிய வருகின்றன. மனிதன் செய்யும் எல்லாக் காரியங்களும் பூமியால் வெளியாக்கப் பட்டு விடுவது கண்டு நற்கருமங்கள் செய்தோர் இன்பகரமாயும் தீய கருமங்கள் புரிந்தோர் நாணமடைந்தும் காணப்படுவர்.

இதன் ஏழாவது எட்டாவது வசனங்களில் "தர்ரா" என்று கூறப்பட்டிருக்கிறது. "தர்ரா" என்பதற்கு அணு என்று சொல்லப்படுகிறது. எனவே, ஒரு மனிதன் செய்துள்ள நன்மை, அணுவளவினது என்று சொல்லப்படத் தக்கதாயினும் அதை அங்கே கண்டு அதற்கேற்ற பிரதிபலனை அடைவான். அதேபோல் தான் தீமையான காரியம் செய்தபோதிலும் அதை அங்கே கண்டு அதற்கேற்ற தண்டனையை அனுபவிப்பான். ஆனால் காபிர்கள் செய்யும், நற்காரியங்களுக்கேற்ற சன்மானத்தை அவர்கள் பெறத் தகுதியற்றவர்களாயிருக்கும்போது அவர்கள் பூமியில் செய்துள்ள நற்காரியங்களை மறுமையில் பார்ப்பதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது என்ற ஒரு சந்தேகம் ஜனிக்கிறது. காபிர்களினது நற்காரியங்களினால் அவர்கள் நிரந்தரமாக விடுதலை அடைய முடியாற் போயினும், அவர்கள் செய்துள்ள நன்மை சிறியதே யாயினும் மறுமையில் அதற்குத் தக்கவாறு வேதனையில் ஒருவாறு இலேசாக்கப்படும். எனவே, மனிதன் ஒவ்வொருவனும் தான் இப்பூவுலகில் செய்த நன்மையான காரியங்களை மறுமையில் பார்ப்பதனால் அவசியம் பயனடைகின்றானென்றே கூறவேண்டும்.

ஒரு சமயம் ஒருவர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருச்சமுகம் வந்து தனக்குக் குர்ஆனைக் கற்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸரத் அலீ (ரலி) அவர்களை அந்த மனிதருக்குக் குர்ஆனைப் போதிக்கும்படி கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அம் மனிதருக்கு "இதா ஜுல் ஜிலத்" என்னும் அத்தியாயத்தைக் கற்பித்தார்கள். அம் மனிதர் அதன் இறுதி வசனத்தைக் கேட்டவுடன் அந்த ஒரு வாக்கியமே தனக்குப் போதுமானதென்றும், வேறு ஒன்றும் கற்றுக் கொள்ள வேண்டிய தவசிய மில்லை என்றும் கூறினார். இச்சம்பவத்தை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம் அறிவித்தபோது ரசூல் (ஸல்) அவர்கள் "அவரை அத்துடன் விட்டு விடுங்கள். அவர் புத்திசாலியாகவும் மார்க்கத்தை நன்கு விளங்கிக் கொண்டவராகவும் காணப்படுகின்றார்" எனக் கூறினார்களெனச் சிறப்புத் தங்கிய ஹதீதில் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வசனத்தை அறிந்ததன் பயனாக மதீனாவைச்சேர்ந்த இருவர் நல்ல வழியில் நடக்க முயன்றார்களென்பதைப் பற்றியும் ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. அவ்விருவருள் ஒருவர் சதகா (தானதர்மம்) செய்யாமலிருந்ததும் தவிர தான் செலவுந்தனல்ல வென்றும் தன்னிடமுள்ள சிறிய பொருள்களை ஆண்டவனது பாதையிற் செலவு செய்வது மரியாதைக் குறைவென்றும் சொல்லிக் கொண்டிருந்தவர். மற்றொருவர் வீண் பேச்சுப் பேசுவது, கெட்ட எண்ணங்களை நினைப்பது முதலிய குற்றங்களும் பாபங்களே யென நினையாமல் அக்குற்றங்களைப் புரிந்து கொண்டும் இருந்தவர். ஆனால் அவ்விருவரையும் நல்வழியில் திருப்ப இந்த அத்தியாயத்தின் இறுதி வசனங்களேபோதுமானதாயிருந்தன. (அல்லாஹு அஃலம்)

நாயக வாக்கியம்.

"எவனொருவன் குர்ஆன் ஷரீபைத் தானும் கற்றுக்கொண்டு மற்றவர்க்கும் கற்றுக்கொடுக்கின்றானோ அவன்தான் உங்களுள் மேலானவனாவான்."

இந்த நாயக வாக்கியமானது, குர் ஆன் ஷரீபைத் தானும் கற்றுப் பிறருக்கும் கற்பிப்பதனால் ஒரு மனிதன் மிக உயர்ந்த நிலைமையை அடைகிறானென்பதைத் தெளிவாகக் கூறுகின்றது. ஆனால் குர்ஆன் ஷரீபைத் தான் கற்றுப் பிறருக்கும் கற்பிப்பதென்பது அத்திருமறையிலுள்ள வாக்கியங்களை மட்டில் தானும் கற்று, பிறருக்கும் கற்பிப்பதென்பதல்ல. ஏனெனில், வெறும் வாக்கியங்களை மட்டில் ஏனைய மதஸ்தர்கள் எளிதிலேயே தெரிந்துகொண்டு விடுவார்கள். ஆகவே, முஸ்லிமல்லாத ஒருவன் குர்ஆன் ஷரீபின் வாக்கியங்களைத் தெரிந்துகொள்வதனால் மட்டும் மனிதர்களுள் மேலானவனாய்விட முடியாது. அவ்வாக்கியங்களின் கருத்துக்களையும், அவற்றில் பொதிந்து கிடக்கும் தத்துவார்த்த ரகசியங்களையும் அறிந்துகொண்டு, அவ்வாக்கியங்கள் போதிக்கும் ஏவல்களின்படி நடந்தும், விலக்கல்களைத் தவிர்த்தும், அவ்வாக்கியங்கள் மூலமாக ஆண்டவன் வெளியாக்கியுள்ள கட்டளைகளின்படி தன் வாணாள்முழுதும் நடந்தும் வருவதே உண்மையாகக் குர்ஆனைக் கற்றுக் கொள்வதாகும்.

சங்கை பொருந்திய குர் ஆன் ஷரீபானது, மானிடர்க்கு நேர்வழி காட்டி அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயனை யடையுமாறு ஆண்டவனால் அருளப்பெற்ற திருமறையாகும். அது மனிதனை ஆண்டவனது பாதையில் செலுத்தி வைப்பதல்லாமல், மனிதன் இவ்வுலகில் எந்த நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் படைக்கப்பட்டானோ, அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குள்ள உதவிகளைச் செய்வதாயிருக்கின்றது. எனவே, குர்ஆன் ஷரீபின் போதனைகளுக்கொப்பத் தன் வாழ்க்கையை நடத்தி வரும் எதந் மனிதனும் தான் இப்பூவுலகில் படைக்கப்பட்டதற்குள்ள அந்தரங்கத்தை அறிந்து கொள்வான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உத்தம குணாதிசயங்களைப்பற்றி ஹஜரத் ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்களைக் கேட்டபோது, நாயகத்தின் குணங்களெல்லாம் குர்ஆன் ஷரீபின் போதனைகளாகப் பரிணமித்திருந்தன வென விடை பகர்ந்தார்கள். அஃதாவது, குர்ஆனே கரீமில் மனித கோடிகளுக்குக் கற்பிக்கும் நற்குணங்களனைத்தும் நமது உலக ரக்ஷகராகிய நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம் பூரணமாய் அமைந்திருந்தன என்பதாகும்.

மேலே கூறியபடி குர்ஆன் ஷரீபின் கருத்துக்களை அறிந்தும், அதில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த இரகசியங்களை நன்குணர்ந்தும், அது கூறும் ஏவல் விலக்கல் விதிகளின்படி தான் நடந்து வருவதுடன், அவைகளை பிறருக்கும் போதிப்பதும் தான் குர்ஆன் ஷரீபைச் சிறந்த முறையில் தானுங் கற்றுக் கொண்டு இதரர்கட்கும் கற்பிப்பதாகும். ஆனால் அதன் வாக்கியங்களை மட்டும் கற்றுக் கொண்டு அவற்றைத் தான் ஓதி வருவதுடன் பிறருக்கும் கற்பிப்பது தாழ்ந்த முறையாகும். எனினும், வாக்கியத்தை மட்டும் கற்றுக்கொள்வதனால் பயனே ஏற்படுவதில்லையென்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் குர்ஆன் வாக்கியங்களைத் தெரிந்துகொள்வதும் ஒருவகையில் ஆண்டவனது திருவசனத்துடன் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதாயிருக்கிறது குர்ஆன் ஷரீபை ஓதுவதானது, நிச்சயமாகவே ஆண்டவனுடைய கிருபாகடாக்ஷம் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கிறது. ஆகவே, அதிலுள்ள வாக்கியங்களின் கருத்தை நன்கு அறிந்து ஓதுவதற்கு இயலாது போயினும் சாதாரணமாக வாக்கியங்களை மட்டுமாகிலும், ஓதுவதைத் தன்மீது

சட்டாயமாக்கிக் கொள்ளுதல் அத்தியாவசிய மாகும்.

ஆண்டவனுடைய திருச்சன்னிதானத்தில், வானம் பூமி இவைகளில் காணப்படும் சிருஷ்டிப் பொருள்கள் எல்லாவற்றைக்காட்டிலும் குர்ஆன் ஷரீபே மிக மேலானதாகும். அஃது ஆண்டவனது திருவசனமாகவும், மன்பதைகள் உய்வதற்கு வழிகாட்டியாகவுமிருக்கும்போது அதனினும் சிறப்புள்ளதொன்று எவ்வாறிருக்க முடியும்? ஆகவே, ஆண்டவனது திருச் சன்னிதானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாய் எல்லாவற்றினும் சிறப்புற்றதாய் விளங்கும் அத்திருமறையை நாம் போற்றி அதை நம் மனதில் இறுத்தி வைப்போமாயின், நிச்சயமாக ஆண்டவனது அனுக்கிரஹத்தைப் பெறுவோமென்பதில் ஐயமில்லை.

"குர்ஆன் ஷரீப் ஓதிவருவதை உங்கள் கடமை யாக்கிக்கொள்ளுங்கள். ஏனெனில் அது உங்களுக்கு இவ்வுலகில் கலங்கரை விளக்குப்போன்றும் மறு உலகில் கட்டிச் சாதம் போன்றும் விளங்குகின்றது. அஃதாவது, குர்ஆன் ஷரீப் இம்மையிலும் மறுமையிலும் முஸ்லிம்களை தூய்மை யடையச்செய்து ஆண்டவனது பாதையில் செலுத்தும் பொறுப்பை யேற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, குர்ஆன் ஷரீப் ஓதிவருவதை வழக்கத்துக்குக் கொண்டுவருதல் மிகவும் அத்தியாவசிய மாகும்.

"என்னுடைய உம்மத்தோர்களின் பெரிய வணக்கமாகிறது குர் ஆன்ஷரீபை ஓதுவதாகுமென நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறியதாக நுஃமான் பின் பஷீர் அவர்களைத் தொட்டும் ரிவாயத் செய்யப்பட்டிருக்கிறது.

குர்ஆன் ஓதுவதற்குரியஒழுங்குகள்.

குர்ஆன் ஷரீபை ஓதுவதற்குரிய ஒழுங்கான முறை யாதெனின்; குர்ஆன் ஓதவேணுமென்ற எண்ணத்துடன் ஒழுவுசெய்து கொண்டு சுத்தமான இடத்தில் உட்கார்ந்து ஓதத் தொடங்கவேண்டும். ஓத ஆரம்பிப்பதற்கு முன் "அஊது"ம் "பிஸ்மில்லா"வும் ஓதிக் கொள்ளல் வேண்டும். குர்ஆன் ஆரம்பிக்குங்கால் 'அஊது' ஓதுவது வாஜிபும், 'பிஸ்மில்லா' ஓதுவது சுன்னத்து மாகும்.

குர்ஆன் ஷரீபை ஆரம்பித்து தினமும் தொடர்ந்து ஓதிவந்து முடித்து கத்தம் செய்வது மகாப்புண்ணியமான காரியமாகும் இங்ஙனம் ஓதிவந்து உஷ்ணகாலத்தில் காலையிலும், குளிர்காலத்தில் இரவின் முற்பகுதியிலும் முடிப்பது மிக மேலானதாகும்.

குர்ஆன் ஷரீப் முழுமையையும் துரிதமாய் மூன்றுநாளைக்குள் ஓதி முடித்து விடுவது மேலான முறையாகாது. ஏனெனின், எவனொருவன் மூன்றுநாளைக்குக் குறைந்தகாலத்துள் குர்ஆனை ஓதி முடித்துவிடுகின்றானோ அன்னோன் அதனை ஒரு சிறிதும் உணர்ந்து கொண்டவனாகான் என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள்.

குர்ஆன் ஓதுவதற்கு பிரதானமாக வேண்டற்பாலது மனத்தூய்மையும் மனஓர்மையுமாகும். மேலும் குர்ஆன் ஷரீபைப் பாராமல் (மனப்பாடமாய்) ஓதுவதைப் பார்க்கினும் பார்த்துஓதுவது மேன்மையானதாகும் அசுத்தமான இடங்களில் குர்ஆன் ஷரீபை ஓதல் கூடாது.

மேலும் குர்ஆன் ஷரீப் சப்தமிட்டு ஓதப் படுமாயின் அருகிலிருப்போர்கள் அதனை செவிமடுத்துக் கேட்பது கடமையாகும். குர்ஆன் ஷரீப் ஓதுவதற்காகவென்றே கூட்டப் பட்ட சபையில் அங்கிருப்போ ரெல்லோரும் குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்கவேண்டும். ஒரேசபையில் பலபேர்கூடி ஏகமாக இரைந்து சப்தமிட்டு குர்ஆனை ஓதுவதுகூடாது. இங்ஙனம் ஓதப்படுவதில் மரியாதைக் குறைவு ஏற்படுகின்றது.

ஜனங்கள் தம்தம் காரியாதிகளில் ஆழ்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஸ்தலமான கடை வீதி, பொதுஸ்தலம் ஆகிய இடங்களில் குர்ஆனை இரைந்தோதுவதுகூடாது. அங்ஙனம் இத்தகைய இடத்தில் எவரேனும் சப்தமிட்டு ஓதி அதனை பிறர் கேட்காமல், தம்தம் வேலைகளில் பராக்கா யிருப்பவரேல் அதைக் கேட்காமல் உதாசினஞ் செய்த குற்றம் ஓதுபவரையே சாரும்.

குர்ஆன் ஷரீபை பிறிதொருவரும் ஓதுவதைக்காட்டினும், ஒருவர் ஓதுவதை மற்றோர் செவிதாழ்த்தி ஆழ்ந்துகேட்டுக்கொண்டிருப்பது சிறப்புடையதாகும்.

حفاظة الاسلام مدارس

இஸ்லாத்தில் அறிவின் சுதந்திரம்

இஸ்லாம் அறிவை இகழ்ந்து அதற்குச் சுதந்திரமில்லாமல் செய்துவிட்ட தென்றும், அதன் அடிப்படையான கொள்கைகள் மானிட அபிவிருத்திக்குத்தடை செய்வனவா யிருக்கின்றன வென்றும், ஆனால் கிறிஸ்து மார்க்கம் அவ்வாறு செய்யவில்லை யென்றும் கிறிஸ்தவர்களிடை ஒரு தவறான எண்ணம் பரவியுள்ளது. கிறிஸ்தவ உலகில் பரவியுள்ள இந்தத் தவறான அபிப்பிராயம் உண்மைக்கு முற்றிலும் மாறான தென்பது பின் கூறப் பட்ட விஷயங்களால் எளிதில் புலனாகும்.

தற்காலம் மேனாடு அடைந்துள்ள முன்னேற்றத்துக்குக் காரணம் அவர்கள் பின்பற்றி வரும் கிறிஸ்தவ மதமல்ல. ஏனெனில், இக் காலக் கிறிஸ்தவரைவிடப் பண்டைக்காலக் கிறிஸ்தவரே தம் மார்க்கத்தில் விசேஷப் பற்றும் சிரத்தையுமுள்ளவராக விருந்தனர். ஆனால் கிறிஸ்தவ மதம் தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வந்த அந்தக் காலத்திலோ மேனாடு அறியாமை யென்னும் அந்தகாரத்துள் ஆழ்ந்து கிடந்தது. காரணம், கிறிஸ்தவ மதம் அறிவின் சுதந்திரத்தை அடியோடு அபகரித்துவிட்டதேயாகும். ஆனால் கிறிஸ்தவர்கள் தமது மார்க்க போதனைகளை மீறி அறிவின் சுதந்திரத்தைப் பெற முயற்சித்த காலமுதல் அவர்களது அபிவிருத்தியும் பெருகலாயிற்று.

இஸ்லாம் மார்க்கமோ கிறிஸ்தவ மதத்தைப் போன்று அறிவின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவித்ததே இல்லை. இஸ்லாம் அது தோன்றிய காலமுதற்கொண்டே மனிதவர்க்கத்துக்கு அறிவின் சுதந்திரத்தைப் பூரணமாக அளித்திருப்பதன்றியும், அந்த அறிவை அடையும்படி முயற்சிக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றது. சீனா சென்றேனும் கல்வி அறிவு பெற வேண்டு மென்பது இஸ்லாம் மார்க்கத்தைப்போதித்த நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு இட்டுள்ள கட்டளையாகும். கல்வி அறிவைப் பெறுவது தான் மானிட வாழ்க்கையின் முக்கிய லக்ஷியமாகும். ஆகவே, அதைப் பெறுவதற்கு எவ்வளவு முயற்சித்த போதிலும் அதிகமான தாகாது. கல்வியும் அறிவும் பிற மதத்தவர்களிடமிருப்பினும் அவற்றை அடைய வேண்டியது அத்தியாவசியம். சிருஷ்டிப் பொருள்களையும் அவற்றின் அமைப்பைப் பற்றியும் ஒரு நாழிகை நேரம் கவனித்து ஆராய்ச்சி செய்வது ஒரு வருட காலம் வணக்கஞ் செய்து கொண்டிருப்பதை விட மேலானதாகும். ஆண்டவன் முதன் முதலாக மனித சிருஷ்டியில் அறிவையே படைத்துள்ளான். அவனுடைய சிருஷ்டிகளிலெல்லாம் அறிவிற் சிறந்தது பிறிதொன்றுமில்லை. மானிடர்களுக்கு அளிக்கும் பாக்கியங்களை யெல்லாம் அவன் அறிவின் மூலமாக அளித்து வருகின்றான். உலகத்திலுள்ள எவ்விஷயத்தையும் அறிவின் மூலமாகவே தெரிந்து கொள்ளும் மானிடன் அந்த அறிவைத் தவறான வழியில் உபயோகிப்பதால் ஆண்டவன் கோபத்துக் குள்ளாகிறான். தொழுகை, நோம்பு, ஜகாத், ஹஜ்ஜு முதலிய நற் கிரியைகளைச் செய்பவர்கள், அவற்றின் உட்பொருளை எவ்வளவுக் கெவ்வளவு அறிந்து

உணர்ந்துசெய்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்ல பலனை அடைகின்றார்கள். கல்வியறிவுள்ளவன் உபயோகிக்கும் மை ஷஹீதுகளுடைய இரத்தத்தை விட மேலானதாகும். கல்வி அறிவைப் பெறவிரும்பித் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்பவன் இறைவனை அடையும் வழியில் செல்பவனாவன். கல்வியே சுவர்க்கத்தின் வழியைக் காண்பிக்கின்றது; வனத்தில் துணைவனாக விளங்குகின்றது; தனித்த நேரத்தில் உற்ற தோழனாகின்றது: சுகவாழ்க்கையின் பக்கல் செலுத்துகின்றது கஷ்ட காலத்தில் பெரிய ஊன்றுகோலாயிருக்கிறது. நண்பர்கட்குள் ஆபரணம்போன்றும் பகைவர்முன் ஆயுதமாகவும் விளங்குகின்றது. கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டியது முஸ்லிமாகிய ஆண் பெண் ஒவ்வொருவர்மீதும் விதிக்கப்பட்ட கடமையாகும். இவ்வாறு நபிபெருமானார் (ஸல்.) கல்வியின் சிறப்பைப்பற்றித் திருவுளம்பற்றியுள்ளார்கள் "கல்விமானைக் கண்ணியப்படுத்துபவன் என்னைக் கண்ணியப்படுத்துபவனாவான்" என்று நபிபெருமானார் (ஸல்.) கூறியுள்ளதிலிருந்து கல்வியின்பெருமை அறியக்கிடக்கின்றது.

"உலக சரித்திரத்தைக் கவனித்துப் பாருங்கள். உலக நிகழ்ச்சிகளையும் சிருஷ்டிப்பொருள்களையும் ஆழ்ந்து கவனியுங்கள். பற்பல மதங்களின் தத்துவங்களைப் பரிசீலனை செய்து பாருங்கள். என்பதாக ஆண்டவன் திருக்குர்ஆன் மூலம் மானிடர்கட்கு அடிக்கடி வற்புறுத்திக் கூறியுள்ளான். "என் இறைவா! என் கல்வி அறிவை மேலும் மேலும் அதிகப் படுத்துவாயாக!" என்று பிரார்த்திக்குமாறே நபிபெருமானார் (ஸல்.) அவர்கட்கும் ஆண்டவன் கட்டளையிட்டிருக்கின்றான்.

கல்வி அறிவு சம்பந்தமாக மேலே கூறப்பட்டுள்ள ஆண்டவனது கட்டளை களையும் நபி பெருமானவர்களது (ஸல்.) திருவாக்கியங்களையும் கவனிக்குங்கால், மனிதன் எந்தெந்த விஷயங்களில் அறிவைச் செலுத்தக்கூடுமோ அந்தந்த விஷயங்களி லெல்லாம் அதை செலுத்தப் பூரண சுதந்திரம் அளிக்கப்பெற்றிருக்கிறானென்பது நன்கு புலனாகும்.

பண்டைய முஸ்லிம் நூலாசிரியர் ஒருவர் உலக சிருஷ்டியைப் பற்றி விவரிக்குங்கால் அறிவின்சிறப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார் :—

"இறைவன் உலகத்தை உற்பத்தி செய்து அறிவைச் சிருஷ்டித்தபோது அதைநோக்கி 'கல்வியைக் கற்றுக்கொள்!' எனக் கட்டளையிட்டான். அது அவ்வாறே கற்றுக்கொண்டது. பிறகு அதைநோக்கி "எவ்விஷயத்தையும் சீர்திருத்தி ஒழுங்கு படுத்தக்கூடிய ஆற்றலை அடைவாயாக!" என்றான். அது அந்த ஆற்றலையும் அடைந்தது. பின்னர் அதை நோக்கி "சிருஷ்டிகளுள் உன்னைத் தவிர மற்றெதையும் நான் விரும்பவில்லை. மனிதன் எவனுக்கேனும் நன்மைசெய்ய விரும்புவேனாயின் முதன்முதலாக உன்னை அளிப்பேன். யாதொரு பாக்கியத்தையும் நீக்கிவிட விரும்புவேனாயின் உன்னை அவர்களிட மிருந்து அப்புறப் படுத்தி விடுவேன். எந்த மனிதனையாவது தீமையினின்றும் பாதுகாக்க விரும்பினால் உன்னைத்தான் அவனுக்கு அளிப்பேன். ஒரு மனிதனுக்குத் தண்டனை யளிக்க விரும்புங்கால் உன்னை அவனிடமிருந்து நீக்கிவிடுவேன்." என கூறுகின்றான்.

கிறிஸ்தவமதம், கிறிஸ்தவமதக் குருவாய் விளங்கும் ஒரு போப்புக்கு என்னென்ன சுதந்திரங்களை அளித்திருக்கின்றதோ அச்சுதந்திரங்களை யெல்லாம் இஸ்லாம் மார்க்கம் ஒவ்வொரு சாதரண முஸ்லிமுக்கும் அளித்துள்ளது. உலகத்தில் இறைவனது பிரதிநிதியாக விளங்குவது அறிவு ஒன்றே. ஆகவே

எந்தெந்த விஷயத்தில் அறிவைச் செலுத்தக் கூடுமோ அந்தந்தவிஷயத்திலெல்லாம் அதை செலுத்த இஸ்லாம் எல்லா மனிதருக்கும் பூரண சுதந்திர மளித்திருக்கின்றது.

ஆண்டவனுடைய (தாத்) தன்மை எத் தகைய தென்பதை மாத்திரம் மனித அறிவு கொண்டு அறிந்துகொள்ளுதல் சாத்தியப் படா தாயினும்,இறைவன் ஒருவன் உளன் என்பதையும்,அவன் ஒருவனேஎன்பதையும், காரண காரியங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். எனவே, மனிதன் அறிவு கொண்டே தன்னையும் அறிந்து கொள்ளும் படி இறைவன் கட்டளை யிட்டிருக்கிறான்.

காரண காரியங்களை ஆராய்ச்சி செய்து அதன் பயனாக இறைவனை அறிந்து அவன் பால் பக்தி பூண்டொழுவதற்கு ஈமான் என்று வழங்கப்படுகின்றது. காரண காரி யங்களின் தொடர்பைப் பின்பற்றிச் சென்று சிருஷ்டிகளுக் கெல்லாம் மூலகாரணமான இறைவனை அறிந்தவன், அந்த இறைவன் படைப்பினங்களின் மீது கருணாநிதியாக விளங்குகிறா னென்பதை அறிந்துகொள்ளு வதுந் தவிர, சிருஷ்டிப் பொருட்களிடங் காணப்படும் குற்றங் குறைகள் எதுவும் அவ னிடமில்லை யென்பதையும் அறிந்துகொள்ளு கின்றான். எனவேதான் மனிதர்களுக்குள்ள குணாதிசயங்கள் ஆண்டவன்பாலும் அமைந் திருப்பதாக விக்கிரஹ ஆராதனைக்காரர் கூறு வது தவறெனவும் பாபமெனவும் ஒவ்வொரு முஸ்லிமும் கருதுகின்றான்.

காரண காரியங்களின் தொடர்பை ஆராய்ச்சி செய்து அதன் மூலமாக எல்லா வற்றிற்கும் ஆதி காரண கர்த்தாவாகிய இறைவன் ஒருவன் இருப்பதை அறிந்து கொண்ட மனிதன் அந்த இறைவன் ஒருவன் தான்—பலரல்ல என்பதையும் அறிந்துகொள்ளுகின்றான். எனவே, அவன் பல தெய்வக்கொள்கையை நிராகரிப்பதுடன் கிறிஸ்தவர்களின் திரித்துவக் கொள்கை யையும் நிராகரிக்க வேண்டியவனாகின்றான். திரித்துவக் கொள்கையை அங்கீகரிக்கும் கிறிஸ்தவர்களுங்கூட தாங்களும் ஏகதெய்வக் கொள்கையுடையவரே என்று கூறிக்கொள் ளுகின்றனர். எனினும், ஏக தெய்வக் கொள் கைக்கும் திரித்துவக் கொள்கைக்கும் உள்ள முரண்பாட்டுக்குத் தக்க சமாதானம் அவர் களால் இதுவரை கூறமுடியாமலே இருந்து வந்திருக்கிறது. ஒன்றுதான் மூன்று மூன்றுதான் ஒன்று என்றும், ஒன்றும்— மூன்றும் ஒன்றே என்றும் அவர்கள் நிரூ பிப்பார்களாயின், பின் திரித்துவக்கொள்கை யும் ஏகதெய்வக் கொள்கையும் ஒன்றே தான் என்று நிரூபித்துவிடலாம். ஆனால் அவர்களால் அப்படி நிரூபித்துக் காட்டுவது முடியாது. எனவே இதுவும் சாத்தியமில்லை.

இத்திரித்வக் கொள்கை இதுவரை இவ்வு லகில் எவருக்கும் நன்கு விளங்கியதில்லை. "உங்கள் அறிவிற்கு ஒரு சிறிதும் எட்டாத இவ்விஷயத்தைப்பற்றி வீணாக ஏன் குதர்க் கம் செய்கின்றீர்கள்?" என்று இறைவன் வினவுகின்றான்.

இவ்வுலகில் நாம் காணும் ஒவ்வொரு சிரு ஷ்டிப் பொருளும் தம் சிருஷ்டி கர்த்தாவின் அறிவையும் ஆற்றலையும் நன்கு அறிவித்து நிற்கும் கிரந்தங்களாகவே விளங்குகின்றன. சிருஷ்டிப் பொருள்களை எவ்வளவுக் கெவ் வளவு ஆழ்ந்து பரிசீலனை செய்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு ஆண்டவன்பால் நமக் குள்ள ஈமானும் அதிகரித்துக்கொண்டே போகும். ஸைன்ஸ் எனப்படும் விஞ்ஞானக் கல்வியைக் கற்பதனால் எந்த உண்மை முஸ் லிமின் ஈமானும் குறைந்துவிட மாட்டாது. சிருஷ்டிப் பொருளைப்பற்றி மேலும் மேலும் ஆராய்ச்சி செய்துகொண்டு போகும் ஒவ் வொரு உண்மை முஸ்லிமும் இறைவனது அளப்பரிய சக்தியையும் எல்லையற்ற அன்பை

யும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொள்வான். ஆகவே, ஒவ்வொரு முஸ்லிமும் இயற்கைப் பொருளாய்ச்சியில் ஈடுபடவேண்டியது அத்தியாவசியமென்பதை உணரவேண்டும். மார்க்க சம்பந்தமாகத் தெள்ளத் தெளியக் கூறப்பெற்றிராத விஷயங்களில் பண்டைக்கால முஸ்லிம்கள் செய்துள்ள வியாக்கியானங்களோ, அவர்களுடைய அபிப்பிராயங்களோ தவறெனத் தோன்றினல் அவற்றைப் புறக்கணித்துவிட்டு நமது ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் உண்மையானதாகத் தோன்றுவதை ஏற்பது குற்றமாகாது. இதற்கு ஓர் உதாரணங் கூறுகிறேன். முற்காலத்திய முஸ்லிம் ஒருவர் எழுதிய நூலொன்றில் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது:—

"இப்பூமியை ஒரு மலக்கு தம் தோள்மீது சுமந்துகொண்டிருக்கிறர். அவர் மரகதத்திலாய ஒரு மலைமீது நிற்கின்றர். அம்மலையை ஒரு பசு தன் கொம்புகள்மீது தாங்கிக்கொண்டிருக்கிறது. அப்பசு ஒரு மீன்மீது நிற்கின்றது. அந்த மீன் சமுத்திரத்தில் நீந்து அலைந்த வண்ணமாயிருக்கின்றது. அச்சமுத்திரத்தை காற்று சுமந்துகொண்டிருக்கிறது. காற்றை இருள் சூழ்ந்துகொண்டிருக்கிறது."

மேற்கூறிய விஷயம் நமது அறிவுக்கும் ஆராய்ச்சி முடிபுக்கும் ஒத்துவராதிருந்தபோதிலும், அது ஒரு முஸ்லிமால் எழுதப்பட்ட கிரந்தத்தில் காணப்படுகின்றதென்பதற்காக நாம் அதை அங்கீகரித்தே தீரவேண்டுமென்று இஸ்லாம் மார்க்கம் எவரையும் கட்டாயப்படுத்தவில்லை. பகுத்தறிவுக் கொவ்வாதாயும் ஆராய்ச்சி முடிவுக்கு ஒத்துவராததாயுமுள்ள விஷயங்களை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டுமென்பது இறைவனது திருவுள்ளமாயின், அறிவை உபயோகித்துச் சிருஷ்டிப்பொருள்களை யெல்லாம் பரிசீலனை செய்துபார்க்கும்படி ஆண்டவன் தன் திருக் குர்ஆனில் வற்புறுத்திக் கூறியிருக்கமாட்டான். மூடபக்தி காரணமாக யாராயிருந்தபோதிலும் அவரைப் பின்பற்றுவதைப் பற்றிக் கண்டித்துக் குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது:—

"அல்லாஹு தஆலா அருள் செய்திருக்கும் இவ்வேதத்தைப் பின்பற்றுங்களென்று காபிரீன்களுக்கு கூறினல், அவர்கள் அவ்வாறன்று, எங்கள் மூதாதைகள் எதைப் பின்பற்றினரோ அதையே நாங்களும் பின்பற்றுவோம், என்று கூறுகின்றனர். ஆகவே, அன்னுருடைய மூதாதைகள் எந்த விஷயத்தையும் அறிந்துகொள்ளாமலும் நேரான வழியில் இல்லாமலுமிருந்தாலும் அம்மூதாதைகளைப் பின்பற்றுவார்கள் என்று நபியே, நீர் கூறுவீராக!". இதைக் கவனிக்கும்போது மூதாதைகளும், பண்டைப் பெரியார்களும் கூறிச் சென்றுர்கள் என்ற காரணத்துக்காகவே பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்துவராத எதையும் பின்பற்றுவது தவறு என நன்கு புலனுகும். மேலும் "நாம் அறிவை உபயோகித்து நடந்து வந்திருப்போமாயின் இந்நரகத்துக்கு ஆளாயிருக்கமாட்டோம் என நரகவாசிகள் கூறுவார்கள்" என்றும் இறைவன் கூறியுள்ளான்.

மேற்கூறியவற்றிலிருந்து மனிதன் தன் அறிவை உபயோகித்துப் பார்த்தே எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று இஸ்லாம் வற்புறுத்துகின்றதென்பது தெரியவரும். அப்படியாயின் "இஸ்லாம் அறிவை உபயோகிப்பதற்குப் பூரண சுதந்திரம் அளிக்கவில்லை" யென்ற கிறிஸ்தவர்களின் கூற்று தவருனதல்லவா?

ஆதலால் மனிதன் எவ்விஷயத்தையும் தன் பகுத்தறிவுகொண்டே அறியவேண்டியது அவசியந்தான். ஆனல், தன் அறிவுக்கு எட்டியதைமட்டும் சரியென ஏற்றுத் தனக்கு நன்கு புலப்படாதனவற்றையெல்லாம் நிராகரித்துவிடவேண்டுமெனக் கொள்ளலாகாது. ஏனெ

னில் எத்தனையோ அறிஞர்கள் பலவிஷயங்களைப்பற்றிப் பரிசீலனைசெய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வறிஞர்களின் முடிபுகள் நமது சிற்றறிவுக் கெட்டவில்லையென்ற காரணத்துக்காக நாம் அவற்றை நிராகரித்து விடுதல் மதியீனமாகும். மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் முற்ற முற்றப் பொருத்தமானவையே யன்றி முரண்பாடு உடையனவல்ல. ஆகவே, மார்க்கத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கும் விஷயங்களுள் ஏதாவது நமக்கு நன்கு புலனாகாவிடில் நாம் அவ்விஷயத்தின் உண்மையை அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமேயன்றி புறக்கணித்து விடுதல் நியாயமாகாது. மார்க்கத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ள விஷயத்தைப்பற்றி நாம் அறிந்துகொள்ள முடியாவிட்டால் அது நமது அறிவின் குறைவென்று கருதவேண்டுமேயன்றி அவ்விஷயம் உண்மைக்கு மாற்றமானதெனக் கொள்ளலாகாது.

தற்காலக் கல்வியும், மார்க்கமும்.

மன்பதைகளின் முன்னேற்றத்துக்குக் கல்வியே உற்ற துணையா யமைந்துள்ள தெனவும், கல்வியை ஆண் பெண் இருபாலரும் கற்றுத் தேர்தல் இன்றியமையாத தெனவும் நாம் நன்கு தெரிந்துகொண்டி ருக்கின்றோம். ஆனால், இதுகாலை கல்வியானது எத்தகைய நிலை யெய்திவிட்ட தென்பதைப்பற்றிச் சிந்திக்குங்கால் நாம் வியப்புறாதிருத்தல் முடியாது. அறிவின் அபிவிருத்திக்கு அடிப்படையான தென்றும், வாழ்க்கையைத் தூய்மை செய்வதென்றும், மனிதனுக்கோர் அணிகலமாய் விளங்குவதென்றும், இகபர சாதனங்களை யடையச் செய்வதென்றும், மற்றும் பலவாறாகப் புகழப்படும் மாண்புமிக்க கல்வியைக் கற்றவரெனக் கருதப்படும் தற்காலக் கற்றறி மாக்களின் நடை உடை பாவனைகளையும், குணாதிசயங்களையும் மனப்பான்மையையுங் கவனிக்குங்கால், அஃது பெரும் விந்தைக்குரியதாய்க் காணப்படுகின்றது. எந்த உன்னதமான லக்ஷியத்தை அடைவதற்காக கல்வியைப்பெற முயற்சிக்கின்றோமோ, அந்த லக்ஷியத்தை அடைய மாட்டாதவர்களா யிருப்பதோடல்லாமல் கல்லாத மாந்தரினும் கடையரா யிருக்கின்றோம். அறிவு ஊறுவதற்குக்கேணியாய் அமையவேண்டிய கல்வி ஒரு சாண் வயிறு கழுவுதற்கேற்ற சாதனமாய் அமைந்துவிட்டது. இதுகாலை தம் மக்களைப் பள்ளிக்குக் கல்விகற்குமாறு அனுப்பும் பெற்றோர்கள் எவ்வித உணர்ச்சியால் தூண்டப்பட்டு எவ்விதப் பயனை எதிர்பார்த்து அவ்விதஞ் செய்கிறார்களென ஆராய்ந்து பார்த்தால் தற்காலம் கல்வி கற்போரின் கேவலமான நிலைமை நன்கு வெளியாகும். தம் மைந்தர் கல்வி கற்பதன் பயனாய் நல்ல கல்விமான்களாகவும், நற்குண சீலர்களாகவும், உத்தமோத்தமர்களாகவும், பரோபகாரிகளாகவும், தெய்வ பக்தியுடையவர்களாகவும் திகழவேண்டு மென்பது பெற்றோர்களின் முக்கியமான நோக்கமும் விருப்பமுமல்ல. தம் மக்கள் சர்வகலாசாலைப்பட்டம் பெற்று ஒரு மந்திரி அல்லது ஒரு கலெக்டர் பதவி பெற்றோ, அல்லது பெரிய வக்கீலாகவோ வைத்தியராகவோ, உபாத்தியாயராகவோ திகழ்ந்தோ ஏராளமான செல்வம் சம்பாதித்து கௌரவத்துடனும் செல்வாக்குடனும் விளங்கவேண்டு மென்பதே பெரும் பாலாரின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சிறுவர்கள் பள்ளியில் கல்வி பயில அனுப்பப் படுகின்றனர். பள்ளியில் சிறுவருக்குக் கல்வி கற்பிக்கப்படும் முறையைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. பண்டைக்காலத்திலோ வெனின் பெற்றதந்தையே ஆரம்ப ஆசிரியராய் விளங்கி அவர் தன்னாலியன்றவரை தன் மைந்தனுக்குக் கற்பித்துப் பிறகு நல்ல கல்வியறிவும் ஒழுக்கமும் வாய்ந்த ஓர் ஆசிரியரிடம் அனுப்பிவைப்பார். அவ்வாசிரியர் குருஸ்தானம் வசிப்பதற்குள்ள சகல லக்ஷணங்களும் வாய்ந்தவராய், கூலி ஒன்றைக் கருதியே போதிக்கும் தற்கால உபாத்தியாயராக

விளங்காது, தன் கீழுள்ள மாணவனை ஓர் உத்தம மானிடனாகச் செய்வது தனது தலையாய கடமையென உணர்ந்து கல்வி கற்பித்து வந்தார். மாணவரும் அத்தகைய சிறந்த ஆசிரியருடன் நெருங்கிப் பழகி வருவதன் காரணமாகத் தானும் நற்குண நற்செய்கைகளுடையவரானார். அக்காலப் பெற்றோர்கள் தம் மக்கள் உத்தியோகம் பார்ப்பதற்காகக் கல்விகற்க வேண்டுமென்று விரும்பவில்லை. மாணவனுக்கும் அத்தகைய நோக்கமில்லை. ஆசிரியரோ தன் கல்வியை வியாபாரஞ்செய்யாதவர். எனவே, பண்டைக்கால மாணவன் அறிவு அபிவிருத்தியாகவேண்டும், தெய்வபக்தி ஏற்படவேண்டுமென்ற நோக்கத்துடன் கல்வித்துறையில் இறங்கலானான். தற்கால மாணவனுக்குக் கல்வி கற்கப் பலவிதமான வசதிகளிருந்தும் கல்வி கற்பிக்கக் கையாளப்படும் இயற்கைக்கு மாறான முறைகளால் தக்க பலனை யடைய முடியாதவனா யிருக்கிறான். இக்காலத்தில் சிறுவர்களை மந்தைமந்தையாகச் சேர்த்து பள்ளிக்கூடம் என்ற சிறையில் வைத்துக் கல்வி கற்பிக்கின்றனர். இவ்விதம் போதிப்பதில் கற்றவன் கற்றவன், விட்டவன் விட்டவனே. கல்வி அபிவிருத்தியின் பயனாய் மாணவனது அறிவு விசாலப்பட்டு அவனது குணாதிசயங்கள் செம்மைப்பட்டு வருகின்றனவாவென்பதைப்பற்றி எவருக்குங் கவலை கிடையாது. பரீக்ஷையில் தேறுவானா? என்பதே பெற்றோரின் கவலை; பரீக்ஷையில் தேறுவோமோ? என்பதே மாணவனது கவலை. இந்நிலைமையிலுள்ள கல்விக்கும் அறிவு அபிவிருத்திக்கும் எவ்வளவு சம்பந்தமிருக்குமென்பதைப் பற்றி நாம் கூறவேண்டியதில்லை. தனது தாய்பாஷையல்லாத பிறிதொரு பாஷையில் கல்வி கற்கப்புகும் மாணவன் நாளடைவில் அப்பாஷையின் உதவிகொண்டே உயர்தரக் கல்வியென்பதைக் கற்கின்றான். பல வருட காலம் படித்த பிறகு அவன் கல்வியின் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டதைக் குறிக்கும் "எம். ஏ." போன்ற உயர்தர சர்வ கலாசாலைப் பட்டங்களைப் பெற்று வக்கீல் பரீக்ஷையோ, எஞ்சினீயர் பரீக்ஷையோ மற்றுமிதுபோன்ற பரீக்ஷைகளோ கொடுத்துப் பெரிய உத்தியோகங்களைப் பெறுகின்றான். அல்லது ஒரு வியாபாரத்தையோ, தொழிலையோ கைக்கொள்ளுகின்றான். இது தான் தற்கால மாணவன் கல்வி கற்றதனால் கண்ட பலனாகும். இவ்வாறு பெரிய சர்வ கலாசாலைப் பட்டங்களைப்பெற்று பெரிய வக்கீல்களாகவும், ராஜதந்திரிகளாகவும், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் விளங்குவோருள் எத்தனையோ பேரிடம் வஞ்சனை, பொறாமை, சுயநலம் முதலிய தீய குணங்கள் குடிகொண்டிருக்கக் காண்கிறோம். கல்வி உண்மையாகவே மனிதனை மேன்பதவியடையச் செய்வதாயிருக்க, கல்வி கற்றோருள் பெரும்பான்மையினர் இழிந்த குணமுடையவர்களாயிருப்பானேன்? இதற்குத் தற்காலக் கல்வி போதனாமுறை காரணமேயன்றி கல்வியல்ல. "இங்கிலாந்து நற்கதியடையவேண்டுமானால் ஆக்ஸ்போர்டு, காம்பிரிட்ஜ் முதலிய இடங்களிலுள்ள சர்வ கலாசாலைகளையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கவேண்டும்" என்று ஆங்கில அறிஞராகிய பெர்னார்டுஷா ஒரு சமயம் கூறினார். ஏன்? தற்காலம் அமைந்திருக்கும் முறையில் கலாசாலைகளால் நன்மையைவிடத் தீமையே அதிகம் விளைகின்றதென்பது அவரது ஆழ்ந்த அபிப்பிராயமாகும்.

மேலேகூறியதிலிருந்து, நாம் நவீனக்கல்வியையோ உயர்தரக் கல்வியையோ கற்பதை இகழ்கிறோமென்று எண்ண வேண்டாம். மனிதன் இவ்வுலகில் வாழ்வதற்கு லௌகிகக் கல்வியும் ஓரளவு அத்தியாவசியமென்றே வற்புறுத்திக் கூறுவோம். ஆனால், வெறும் லௌகிகக் கல்விஞானமும், நவீனக்கல்வி ஞானமும் மட்டும் வயிறு வளர்ப்பதற்கும், நவநாகரீக வாழ்வு வாழ்வதற்கும் உபயோகமாகுமேயன்றி மனிதன் ஈடேறுவதற்குப் பயனளிக்கா. மனிதன் எத்தகைய கல்விகற்றாலும், அவன் கற்றதனாலாய பயனையடைந்து தூய்மை யடையவேண்டுமானால் அவனிடம் மார்க்க உணர்ச்சி அமைந்திருத்தல் வேண்டும். மார்க்க உணர்ச்சித் தோன்றுவதற்குமார்க்கக்கல்வி அத்தியாவசியமாகும். மார்க்கக்கல்வியற்று உயர்தரக்கல்வியென்பதைக் கற்பாரும் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிமட்டும் செய்வாரும் நாளடைவில் நாஸ்திகர்களாகவும், உலகாயத தத்துவத்தை ஆதரிப்பவர்களாகவு மிருக்கக் காண்கிறோம். காரணம், இவர்கள் கண்டதே காட்சியென்ற தத்துவத்தைப் பின்பற்றித் தர்க்க வாதத்தில் இறங்குவதேயாம். நாஸ்திக மனப்பான்மை

யுற்றவர்கள் இவ்வுலகமும் இவ்வுலகத்தி லுள்ள பொருள்களுமே மெய்யென்றும், இவ்வுலகத்திற்குப் புறம்பாக மறுவுலக வாழ்க்கை யொன்று மில்லையென்றும் நம்பி யிருப்பவர்களாதலால், நன்மை தீமை இன்னவை யெனப் பாகுபாடு செய்துபார்த்து வாழ்க்கைநடத்தமாட்டார்கள். தமக்கு லாபம் தருவனவும் சுகந்தருவனவுமாகிய வெல்லாம் நற்காரியங்களே யெனநம்பி மனம்போன வாறு நடந்துவருவர். கல்வி ஏராளமாகக் கற்றும் இன்னோர் தவறானபாதையில்நடப்பதற்குக் காரணம் மார்க்கக்கல்விஇல்லாமையேயாகும். கல்வித்திட்டம் எத்தகையதாயினும் அதில் மார்க்கக்கல்வியும் ஓர் அம்சமாய் அமைந் திருத்தல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே இதை எழுதலானோம்.

முஃஜிஸா— அற்புத நிகழ்ச்சி.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கட்கு அற்புதங்கள் நிகழ்ந்ததாக கூறுவது தவறாம்!

பா. தாவூத்ஷாவின் மார்க்கப் புரட்டு.

(எம். வி. அப்துல் ஜப்பார் சாஹிப் வரைவது.)

கருப்பாட்டை வெள்ளாடென்றும், கொடிய விஷமுள்ள சர்ப்பத்தை நல்லபாம்பென்றும் கூறுவதைப்போன்று, இஸ்லாத்தின் அடிப்படையான தத்துவங்களை நிராகரித்து இஸ்லாத்தின் ஆசாரங்களை இழிவுபடுத்திக் கூறுவோரை இஸ்லாமியப் பிரசாரகரென்று தற்காலத்தில் கூறப்பட்டு வருகின்றது.

இத் தென்னிந்தியாவில் தாம் ஒருவர்தான் உண்மை இஸ்லாமியப் பிரசாரகரென்றும், இஸ்லாமியப் பிரசாரத்திற்காகவே தாம் வகித்திருந்த மேலான உத்தியோகப் பதவியையும் ராஜீநாமாச் செய்து விட்டதாகவும் பறைசாற்றிவரும் பா. தாவூதுசாஹிப் முன்னொருதடவை "இஸ்லாமென்பது தொழுகையு மன்று, நோன்பு மன்று, ஹஜ்ஜுமன்று ஜக்காத்து மன்று........" என்று கூறியபின்னர் அவருடைய இஸ்லாமியப் பிரசாரம் எத்தகைய நிலைமையுடைய தென்பதை முஸ்லிம் உலகம் நன்கறிந்துகொண்டு விட்டது.

அன்னாரின் இத்தகைய இஸ்லாமியப் பிரசாரத்துக்குத் "தாருல் இஸ்லாமின்" பதி மூன்றும் ஆண்டு ஹிஜ்ரிமலரில் மற்றோர் உதாரணமுங் காணப்படுகின்றது. இஸ்லாத்தின் கொள்கைகளையும் அநுஷ்டானங்களையும் இழிவுபடுத்திக் காண்பிக்க முயற்சிப்போர் தங்களது தீய நோக்கத்தை பாமரர்கள் அறிந்துகொள்ளாம லிருக்கும் பொருட்டு குழ்ச்சிப் புரிந்து தற்கால முஸ்லிம்களிடை பரவியிருக்கும் பல ஷிர்க்கு பித்அத்தான காரியங்களை அகற்றி உண்மை இஸ்லாம் இன்னதென்று அவர்களுக்கறிவிக்கவே தாம் உழைத்துவருவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, மெய்யான இஸ்லாமியத் தத்துவங்களைப் பரிகாசம் பண்ணிப் பாமரர்கள் அவைகளை கைவிடும்படிச் செய்துவருவது சகஜமாகவே யிருக்கிறது. பா. தாவூத்சாவின் சீர்திருத்தக் கொள்கையைப் பின்பற்றுவதாய்க் கூறுபவர்களே இதற்கு சிறந்த உதாரணமாவார்கள். அன்னாரின் நடையுடை பாவனைகளையும், மதவிஷயத்தில் அவர்கள் செய்யும் தர்க்கங்களையும் கவனிக்கும் எவரும், "இவர்களும் முஸ்லிம்கள்தாமா?," என்று சந்தேகிக்கவேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால், அவர்கள் இஸ்லாமியக் கொள்கைகளையும், இஸ்லாத்தின் சட்டதிட்டங்களையும் பரிகாசம்பண்ணி வருவதுடன், நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாக்களைப்பற்றியும், அவைகள் தங்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் முரண்பட்டனவாயிருக்கிறதென்று கூறி அவற்றை நிராகரித்துவிட முற்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் இஸ்லாமிய தத்துவங்களைப் பரிகாசஞ்

செய்து, நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாக்களை நிராகரிப்பதைக் கொண்டு அவர்களை நாம் குறை கூறுவதற்கில்லை. ஏனெனில், அவர்களுடைய குருவாகிய தாவூத்சாஹிப் செய்துவரும் பிரசாரத்தினால் மார்க்கமறியா அம்மாந்தர்களிடமிருந்து அதைத் தவிர்த்து வேறென்ன தான் எதிர்பார்க்கமுடியும்?

பா. தா. தமது தாருல் இஸ்லாம் என்னும் பத்திரிகையில் "நபிகள் நாயக மான்மியம்" என்ற தலையங்கத்தின்கீழ் தொடர்ச்சியாக பல வியாஸங்கள் எழுதிவருகின்றார். அவைகளில் தம்முடைய நோக்கத்திற்கேற்ப பல தப்பான விஷயங்களை இடையிடையே புகுத்தியும், பலதை இழிவுபடுத்தியும் எழுதிவருகின்றார். இவைகளில் நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாக்களை மறுத்து எழுதியிருக்கின்றதொரு வியாசத்தை மட்டிலுமே ஈண்டு சிறிது கூற விரும்புகின்றோம். பொதுவாகவே, நபிமார்களின் முஃஜிஸாக்களையும், சிறப்பாக நமது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸா (அற்புத நிகழ்ச்சி)க்களையும்பரிகசித்து மறுத்துக்கூறி நிராகரிக்கும் இவர், இதுவரையில் தாம் கூறிவந்துள்ள விஷயங்களை முஸ்லிம் உலகம் அங்கீகரிக்கவில்லை யென்பதை அறிந்து ஒரு சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தார். அஃதாவது தம்மைப் போலவே செய்யித் ஸுலைமான் நத்வீ அவர்களும் முஃஜிஸாக்களை முற்றிலும் நிராகரிக்கின்றனர் என்று அர்த்தப்படக்கூடிய விதத்தில் நீண்டதொரு வியாஸத்தை தாருல் இஸ்லாத்தின் பதின்மூன்றாவது ஆண்டு ஹிஜ்ரீ மலரில் வெளியிட்டிருக்கின்றார். ஆகவே, அவரின் புரட்டை அறிந்து கொள்வதற்கு, செய்யித் ஸுலைமான் நத்வீ என்பவர் யார்? என்பதைப்பற்றியும், அவரால் இயற்றப்பெற்றுள்ள "ஸீரத்துன்னபீ"யின் மூன்றாவது பாகத்தைப் பற்றியும் சிறிது கூறி அதில்கண்ட சிற்சில விஷயங்களைக் குறிப்பிடுவதே போதுமானதாகயிருக்கின்றது.

அஃதாவது:—நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் சரித்திர சம்பந்தமாக அன்னிய மதத்தினரால் எழுப்பப்பெறும் பல ஆக்ஷேபணைகட்கு விடையளித்து நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் உண்மைச் சரித்திரத்தைத் தெளிவாகவும், விரிவாகவும், தக்க ஆதாரத்தோடும் வெளியிடவேண்டுமென்ற நோக்கத்தின்மீது காலஞ்சென்ற அல்லாமா ஷிப்லீமர்ஹூம் அவர்களால் "ஸீரத்துன்னபீ" என்னும் பெயர்கொண்ட நாயக நிகழ்ச்சிச் சம்பவங்களடங்கிய நூலொன்றை வெளியிடும்பொருட்டு ஒரு கமிட்டி அமைக்கப்பெற்றுள்ளது. அக்கமிட்டியாரால் இதுவரை அதன் மூன்று பாகங்கள் வெளியிடப்பெற்றுள்ளன. அதன் முந்திய இரண்டு பாகங்களும் அல்லாமா ஷிப்லீ அவர்களால் வரையப்பெற்றனவாம். அவர்கள் காலஞ்சென்றபின்னர் அதன் மூன்றாவது பாகம் அவர்களுடைய ஸ்தானத்தை வகித்திருக்கும் செய்யித் ஸுலைமான் நத்வீ அவர்களால் எழுதி வெளியிடப்பெற்றுள்ளது. இம்மூன்றாவது பாகம் முற்றிலும் முஃஜிஸாக்களைப் பற்றியதேயாகும். அதாவது, பா. தா. வைப் போல் முஃஜிஸாக்களை நிராகரிப்பவர்கள் முஃஜிஸாக்களைப்பற்றி என்னென்ன ஆட்சேபணைகள் செய்திருக்கின்றனரோ அவ்வாட்சேபணைகளையும் குறிப்பிட்டு அதற்குத் தக்க விடைகளையும் மிக்க விரிவாகவும் தெளிவாகவும் தக்க ஆதாரங்களோடும் கூறி, நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாக்களை மூன்று வகைகளாகப் பிரித்து, அவைகளையும் மிக்க விரிவாகவும் தெளிவாகவும் கூறியிருக்கின்றார்கள். அதில் முதலாவது வகை, திருக்குர்ஆனின் ஆதாரங்களைக்கொண்டு ஸ்தா பிக்கப்பெற்றுள்ள முஃஜிஸாக்கள். இ[illegible] வது வகை,ஸஹீஹான ஹதீதுகளைக் [illegible] ஸ்தாபிக்கப் பெற்றுள்ள முஃஜி[illegible] மூன்றாவதுவகை, ஸியருடைய கிதா[illegible] காணப்பெற்ற முஃஜிஸாக்கள். இந்த [illegible] வது வகையைப்பின்னும் இரண்டு பாகங்களாகப்பிரித்து 1-வது ஸஹீஹான ஹதீதுகளில் இதற்கு தக்க ஆதாரம் காணப்படாவிடினும் இஸ்லாத்தின் அடிப்படையான தத்துவங்களுக்கு முரண்பாடில்லாதிருப்பதாகும், 2-வது ஸஹீஹானஹதீதுகளில் இதற்கு ஆதாரம் காணப்படாமலிருப்பதுடன் இஸ்லாமியத்தத்துவத்திற்கே முரண்பாடுள்ளவைகளாக யிருப்பதாகும். இவ்வாறாக ஒவ்வொருவகையிலுள்ள முஃஜிஸாக்களையும் விபரமாகக் குறிப்பிட்டு,இஸ்லாமியக் கொள்கைக்கு முறண்பாடாகயிருப்பவைகளை மறுத்துக்கூறி ஸஹீஹான ஹதீதின் ஆதாரமில்லாதவைகளை நாம் அங்கீகரிப்பது

அவசியமல்லவென்றும், ஸஹீஹான ஹதீதைக்கொண்டும், குர்ஆன் ஷரீபைக் கொண்டும் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள முஃஜிஸாக்களை அங்கீகரிப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதுள்ள அத்தியாவசியமான கடமையெனவும் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார்கள். எனவே, "ஸீரத்துன்னபீ"யின் மேற்படி மூன்றாவது பாகம் நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் முஃஜிஸாக்களை ஸ்தாபிப்பதற்காக வரையப்பெற்றதேயன்றி, பா. தா. கூறுவதைப்போல் முஃஜிஸாக்களை இல்லையென்று நிராகரிப்பதற்காக வரைப்பெற்றதல்ல.

இது இவ்வாறிருக்க, திருக்குர்ஆனின் ஆதாரத்தை கொண்டும், ஸஹீஹான ஹதீதின் ஆதாரத்தைக்கொண்டும் ஸ்தாபிக்கப்பட்டு, ஒவ்வொரு முஸ்லிமும் அத்தியா வசியமாய் அங்கிகரிக்கக் கடமையாகியுள்ள முஃஜிஸாக்களில் ஒன்றையுமே குறிப்பிடாமல் விட்டுவிட்டு, செய்யித் ஸுலைமான்நத்வீ யவர்கள் தம்மைப் போலவே பொதுவாகவே முஃஜிஸாக்கள் யாவையும் நிராகரிப்பவர்தான் என்று அர்த்தப்படக்கூடிய விதத்தில் புரட்டாக எழுதியிருப்பதுதான் கவனிக்கத்தக்கது.

செய்யித்ஸுலைமான் நத்வீயவர்களும் பா. தா. வைப்போல் முஃஜிஸாக்களை முற்றும் ...பவர்களாயிருந்தால், 'ஸீரத்துன்னபீ' ...ன்றாவது பாகத்தையே எழுத முற்...நர் ஆன் ஷரீபைக்கொண்டு ஸ்தாபிக்...ற்றுள்ள முஃஜிஸாக்கள் இன்னின்னயென்றும், ஸஹீஹான ஹதீதுகளை கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட முஃஜிஸாக்கள் இன்னின்னவையென்றும், அதில் விவரித்துக் கூறியிருக்க மாட்டார்கள்.

பா. தா. வின் கூற்று ஆதாரமற்றதும் மார்க்கப் புறட்டானதுமாகு மென்பதை நிரூபித்துக் காண்பிப்பதற்காக செய்யித் ஸுலைமான் நத்வி அவர்கள் தக்க மார்க்க ஆதாரங்களைக்கொண்டு மேற்படி நூலில் ஸ்தாபித்திருக்கும் முஃஜிஸாக்களில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவதுகொண்டு, பொதுவாக முஃஜிஸாக்களைப்பற்றி செய்யித் ஸுலைமான் நத்வீ அவர்களுடைய கொள்கையென்ன? பா. தா ஆது சாஹிபின் கொள்கையென்ன? என்பவைகளை நன்கு அறிந்து கொள்ளலாம்:—

நபிபெருமானின் தாயாரது கனவு.

நபிபெருமானார் (ஸல்) அவர்கள் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போது அவ்வம்மையார் தமது தேகத்திலிருந்து ஒரு ஒளி புறப்பட்டு அதன்பிரகாசம் ஷாம் தேசத்திலுள்ள மாளிகை வரையில் சென்றதாக ஒரு கனவுகண்டார்கள்.

விக்கிர காலயத்திலிருந்து உண்டான அசரீரி வாக்கு.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஜனனமான சமயத்தில், "மெய்யான நபியவர்கள் அவதரித்துவிட்டார்கள், விக்கிரகங்களுக்கு இனி அழிவு ஏற்பட்டுவிட்டது" என்பதாகப் பல விக்கிரஹ ஆலயங்களிலிருந்து சத்தம் பிறந்தது.

விக்கிரஹம் பேசியது.

"இஸ்லாத்துக்குமுன் யான் ஒரு நாளன்று ஒரு விக்கிரஹத்தின் சமீபமாக நித்திரை செய்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு மனிதன் ஒரு கன்றுக்குட்டியைக்கொண்டு வந்து அவ்விக்கிரஹத்துக்கு பலியிட்டான். அந்நேரத்தில் 'ஒய்ஜலீஹ்! சித்திபெறக்கூடிய ஒரு விஷயம் (என்னவென்றால்,) அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் எவனு மில்லையென்று நாகரீகமுடைய ஒருவர் கூறுகின்றார்' யென என்றுமே நான் கேட்டிராத அவ்வளவு பெரியதொனிகொண்ட ஒரு சப்தம் அந்த விக்கிரஹத்துக்குள்ளிருந்து வெளிப்பட்டதைக் கேட்டேன். இச்சப்தத்தைக்கேட்ட அங்கு கூடியிருந்த யாவரும் பயந்து ஓடிவிட்டனர். எனினும், யான் மட்டில் இதன் உண்மையையறிந்து கொள்ளாமல் இவ்விடத்தைவிட்டுச் செல்வதில்லை யென்பதாக அசையாது அவ்விடமே நின்றிருந்தேன். பின்னும் பின்னும் அதே சப்தத்தை இரண்டுமுறை கேள்விப்பட்டேன், இச் சம்பவம் நிகழ்ந்த சொற்பநாட்களுக்குள்ளாகவே நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் தம்மை நபியென்று கூறுவதாக மக்காவில் பிரஸ்தாபம் ஏற்பட்டது" என்று ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கூறுகின்றார்கள்.

கல் சலாம் சொல்லியது.

தங்கட்கு நுபுவ்வத் (நபிப்பட்டம்) வருவதற்கு முன் மக்காவிலிருந்த ஒருகல் தங்களுக்கு ஸலாம் கூறிக்கொண்டிருந்தது. அக்

கல்லை இன்றும் யான் அறிவேன், என்று நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

பேரீச்சந்தூண் தேம்பித் தேம்பி அழுதது.

மஸ்ஜிதெ நபவீயில் தூணாக வைக்கப்பெற்றிருந்த பேரீச்சமரத்தின்மீது நபிபெருமான் (ஸல்.) அவர்கள்சாய்ந்து அணைத்துகொண்டு குத்பா ஓதி வருவார்கள். மிம்பர்தயாரான தன்பின்னர் அவர்கள் மேற்படிபேரீத்த மரத்தின்மீதுசாயாது மிம்பர் (மேடை)மீதுநின்று குத்பா ஓத ஆரம்பித்தார்கள். அது சமயம் மேற்படி தூணிலிருந்து சிறு குழந்தை அழுவது போன்று தேம்பித்தேம்பி அழும் சப்தம் ஏற்பட்டது. இதைக் கண்ணுற்ற நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் மிம்பரைவிட்டிறங்கி அத்தூணை நெஞ்சோடணைத்துக் கொண்டார்கள். அதனால் அதன் சப்தம் அடங்கி சாந்தமாகயிருந்தது.

மிம்பர் ஆடியது.

நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று மிம்பரின்மீது நின்று குத்பா ஓதிக்கொண்டிருக்கும்பொழுது அல்லாஹுடைய மகத்துவத்தையும், பெருமையையும் பற்றி விவரித்துக் கூறிக்கொண் டிருந்தார்கள். கூறியவிஷயங்களைக்கொண்டு தாங்களே மிக்க உணர்ச்சி பெற்றவர்களாகத் தோற்றியதுடன், வலதுபுறமும் இடதுபுறமும் சாய்ந்தாடிக்கொண்டிருந்தார்கள். அதை கண்ணுற்ற யான் மிம்பரை நோக்க, மிம்பரும் அவ்வாறே அசைந்துகொண்டிருந்ததை கண்டேன், எனஇப்னுஉமர்(ரலி.) அவர்கள் கூறுகின்றார்கள்.

பாறைக்கல் தூள் தூளானது.

அகழ் யுத்தத்தின்பொழுது சஹாபாக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து மதீனத்தைச் சூழ்ந்து அகழ் தோண்டிக்கொண் டிருந்தார்கள். அவ்வாறு தோண்டும்போது அதன் ஒருபாகத்தில் பெரியதொரு பாறைக்கல் தென்பட்டது. அதனை உடைக்க சஹாபாக்கள் எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. கடைசியாக நபிபெருமானார் (ஸல்.) அவர்கட்கு இவ்விஷயத்தை அறிவிக்க, நபி பெருமானாரவர்கள் அங்குசென்று கோடாரியைத் தங்கள் கரத்தின்மீது தாங்கி அப்பாறைமீது ஓர் அடி அடித்தார்கள். உடனே அப்பாறை தூள் தூளாக நொருங்கிவிட்டது.

மரங்களும் மலைகளும் ஸலாம் செய்தன.

“மக்காவிலிருந்தபொழுதுநபிபெருமானார் (ஸல்.) அவர்களுடன் ஒரு இடத்திற்குச் சென்றேன். நாங்கள் சென்றவழியில் குறுக்கிட்ட ஒவ்வொரு மரத்திலிருந்தும் மலையிலிருந்தும் “அஸ்ஸலாமு அலைக்க யாரஸூலல்லாஹ்!” என்ற சப்தம்வரக் கேட்டேன்” என்று அலீ (ரலி.) கூறுகின்றார்கள்.

மலை அசைந்தது.

ஒரு நாள் நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரு மலையின்மீது ஏறினார்கள். அவர்களுடன் ஹஜ்ரத் அபூபக்கர், ஹஜ்ரத் உமர், ஹஜ்ரத் உதுமான் (ரலி) ஆகியோருமிருந்தார்கள். அம்மலை அசைய ஆரம்பித்தது. அதனைக் கண்ணுற்ற நபிபெருமானார் (ஸல்.) அவர்கள், அம்மலையைத் தங்கள் காலால்தட்டி “அசையாதிரு! உன்முதுகின் மீதிருப்பதெல்லாம் ஒரு நபியும், ஒரு ஸித்தீகும்,ஒரு ஷஹீதும்தான்” என்பதாகக் கூறினார்கள். உடனே அது அசைவற்று நின்றுவிட்டது.

விக்கிரகங்கள் தலைகீழாய்ப் புரண்டன.

கஃபாவில் 360-விக்கிரஹங்கள் இருந்தன. நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் மக்காவை ஜயித்து கஃபாவினுள் சென்ற பொழுது நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் கையில் ஒரு பிரம்பை யெடுத்து அங்கிருந்த புத்துகளைக் கவிழ்த்துவிட அப்பிரம்பை நீட்டினார்கள். அப்பிரம்பு அப்புத்துகளின்மீது படுவதற்கு முன்னதாகவே அப்புத்துகள் தலைகீழாக புரண்டு விழுந்துவந்தன.

விருக்ஷங்கள் நடந்தது.

ஒரு சமயம் நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் யாத்திரையில் இருந்தபொழுது மலவிசர்ஜனத்துக்குச் செல்ல நேர்ந்தது. அது சமயம் ஹஜ்ரத் ஜாபிர் (ரலி.) அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு உடன் சென்றார்கள். அவ்விடம் நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் மறைவாக இருக்க எவ்வித சாதனமுமில்லாமல் நாலாபுறமும் ஒரே வெட்டவெளியாக இருந்தது. எனினும், அம்மைதானத்தில் இரண்டு விருக்ஷங்கள் இருந்தன. நபிபெருமானாரவர்கள் (ஸல்.) அதிலொரு விருக்ஷத்தின் சமீபமாகச்சென்று அம் மரத்தின் கிளையைப்பிடித்து, இறைவனின் கட்டளைக்கேற்ப

எனக்கு வழிப்படு! என்பதாகக்கூறி இழுத்துக்கொண்டு மற்றொரு மரத்தின் சமீபமாகச் சென்றார்கள். அம்மரம் ஒட்டகைப்போல் அவர்கள் பின் சென்றது. பின்னர் மற்றொரு மரத்தையும் பிடித்திழுத்து ஒன்றாகச் சேர்த்து இறைவனுடைய கட்டளையை கொண்டு நீங்களிருவரும் ஒன்றுசேர்ந்து விடுங்கள்! என்று கூறினார்கள். அம்மரங்கள் இரண்டும் ஒன்றாக சேர்ந்து அதனால் அவர்கட்கு மறைவு ஏற்படவே, அம்மறைவில் நபிபெருமானாரவர்கள் மலவிசர்ஜனம் செய்தார்கள். பின்னர் அம்மரங்கள் வெவ்வேறாகப் பிரிந்து முன்னர் இருந்த ஸ்தானத்துக்கே சென்றுவிட்டன.

இத்தகைய சம்பவம் வேறு யாத்திரைகளின்போதும் நிகழ்ந்ததாகவும், அவைகளைத் தாங்கள் கண்ணுற்றதாகவும் ஹஜ்ரத் உஸாமத் இப்னுஜைது, இப்னு மஸ்ஊது, யஃலா இப்னுமுர்ரா முதலிய சஹாபாக்கள் கூறுகின்றனர்.

பேரீச்சங்குலை தானாகவேவந்தது.

ஒருநாள் ஒரு "பத்து" (அரபிய கிராமவாசி) நபிபெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து தாங்கள் நபியென்பதை நான் எவ்வாறு உறுதியாகக் கொள்ளமுடியும்? எனக் கேட்டார். அதற்கு நபிபெருமானாரவர்கள் இம்மரத்திலிருக்கும் பேரீச்சங்குலையை நான் வரவழைக்கும் பக்ஷத்தில் நீர் என்னை நபியென்று அங்கீகரிப்பீரா? என்று வினவினார்கள். அதற்கவர் அங்கீகரித்துக் கொள்வதாகக் கூறவே, அக்குலையை நபிபெருமானாரவர்கள் (ஸல்) அழைத்தார்கள். அக்குலை மரத்திலிருந்து இறங்கி நபிபெருமானார் (ஸல்.) அவர்களது சமூகம்வந்து விடைபெற்றுக்கொண்டு பின்னும் தானிருந்த இடத்திற்குச்சென்றுவிட்டது. இதனைக் கண்ணுற்ற அந்த பத்து நபிபெருமானாரை மெய்யான நபியென்று அங்கீகரித்து ஈமான் கொண்டார்.

இவ்வாறாகவே நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் கட்டளையின்பேரில் விருக்ஷங்கள் நடந்து வந்ததும், அவைகளிலிருந்து சப்தம் கிளம்பியதும், வரட்டாடுபால்கொடுத்ததும், மிருகங்கள் அடிபணிந்ததும், மிருகங்கள் மரியாதை செய்ததும், ஹஜ்ரத்அலீ (ரலி) அவர்களின் கண்ணோய் சொஸ்தமானதும், ஒடிந்துபோன எலும்பு சீர்பட்டதும், குருடருக்கு பார்வை ஏற்பட்டதும், ஊமைப் பேசியதும், நெருப்பில் வெந்தவர் உடனே குணமானதும், ஸுராக்கா என்பவன் தங்களைக் கொலைசெய்ய நாடி ஏறிவந்த குதிரையின்கால் பூமியில் பதிந்துவிட்டதும், சொற்ப ஆகாரத்தை எழுபது - எண்பது பேர்கள் பசிதீரப் புசித்ததும், மற்று மிவைபோன்ற அநேக முஃஜிஸாக்கள் தெளிவாகவும் விவரமாகவும் கூறப்பட்டு, இவைகள்யாவும் தக்கஆதாரங்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்பதாக செய்யித் ஸுலைமான் நத்வீயவர்கள் "ஸீரத்துன்னபீ" யின் மூன்றாவது வால்யத்தில் வரைந்திருக்கின்றார்கள்.

அவர்கள் வரைந்திருக்கும் விஷயங்களை கவனிக்கும் எவரும், நபிபெருமானார் (ஸல்) அவர்களால் நிகழ்வுற்ற அற்புத நிகழ்ச்சிகள் யாவையும் நத்வி அவர்கள் அங்கிகரிக்கின்றாரேயன்றி நிராகரிக்கவில்லை என்பதைத் தெளிவாய் அறிந்துகொள்வர். உண்மை இவ்வாறிருக்க, ஸையத் சுலைமான் நத்வி அவர்களும் தம்மைப்போல் பொதுவாகவே முஃஜிஜாக்கள் யாவையும் நிராகரிப்பவர்தானென்று அர்த்தம் கொள்ளக்கூடிய விதத்தில் பா. தா. தம் வியாசத்தில் வரைந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும். இவ்வாறே இவர் மார்க்க சம்பந்தமான மற்ற கொள்கைகள் விஷயமாகவும் நம்மார்க்கக் கிரந்தங்களிலுள்ள மார்க்க ஆதாரங்களை புரட்டிக் கூறுவதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றார். இனியேனும் அவர் அவைகளை விட்டொழித்து சீரான பாதையில் நேராகச் செல்வாரென்று எதிர்பார்க்கின்றோம்.

எவனிடம் கீழ்காணும் மூன்று விஷயங்களிருக்குமோ அவன்மீது அல்லாஹ் தன்னுடைய நிழலைப் பரப்பி அவனை சொர்க்கத்தில் புகவைப்பான்

அவையாவன :—(1) பலவீனர்க்கு உதவி செய்தல். (2) தாய் தகப்பனிடம் அன்புடனிருத்தல். (3) அடிமைகளிடம் கிருபை காட்டுதல்.

இஸ்லாமிய வாழ்க்கை.

இவ்வியாஸத்தில் காணப்படும் கருத்துக்கள் அல்லாமா ஷிப்லீ மர்ஹூமவர்களால் இயற்றப்பெற்றுள்ள "அல்பாரூக்" என்னும் நூலினின்று திரட்டப்பட்டனவாகும். இவ்வுரையில் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நற்குண நல்லொழுக்கங்களின் மனம் கவரத்தக்க சம்பவங்கள் எடுத்தோதப்படுகின்றன. இவற்றால், முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதாரும் "இஸ்லாமிய வாழ்க்கை"யின் உண்மைப் பெருமை இன்னதென நன்குணர்ந்து கொள்வார்களாக.

வணக்கம்.

புனிதமான (பண்டைக்) காலத்தில் ஒவ்வொரு முஸ்லிமுடைய உள்ளத்திலும் மார்க்கக் கட்டளைகளுக்கு முற்றும் அடிபணியுந் தன்மையின் பேருணர்ச்சி நிரம்பியிருந்தது. தெய்வ தியானமே ஒவ்வொருவருடையவும் வாழ்க்கையின் ஆபரணமாய் விளங்கியது. அன்னோர் தொழுகை, குர்ஆன் பாராயணம், தெய்வத் தியானம் ஆகியவற்றை ஓர் ஆசாரமென்று மட்டு மெண்ணிவிடாமல், அவையே தங்கள் இகபர முன்னேற்றத்துக்குரிய நற்சாதனங்களென்றும், வெற்றி பாக்கியத்தின் திறவுகோலென்றும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அக்காலத்திய கலீபாக்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும் தவறாமல் ஐந்து நேரமும் மஸ்ஜிதுக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுகையை நடாத்தி வைப்பார்கள். தவிரவும் வெள்ளி தினத்தன்று குத்பா ஓதுவார்கள். கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கட்குப் பகற்காலத்தில் ஏராளமான வேலைகள் ஓயாமலிருந்துவரும். எனவே இவர்கள் இரவுகாலங்களில் கண்விழித்து அல்லாஹு தஆலாவை அபரிமிதமாக வணங்குவார்கள். அதிகமாக நபில்தொழுவார்கள். தம் மனைவி மக்களையும் சுப்ஹு (காலை) தொழுகைக்காக முன்னேரத்திலேயே எழுப்புவார்கள். வருடந்தோறும் ஹஜ்ஜுக்குச் சென்றுவருவார்கள். அங்கு செல்லும் காபிலாக் கூட்டங்களுக்குத் தலைமைவகித்துச் செல்வார்கள்

ஆக்ஷியின் நோக்கம்.

குலபாயெ ராஷிதீன்களுடைய காலத்தில் எண்டிசையிலும் சமத்துவம், சகோதரத்துவம், நியாயம் ஆகியவைகளே சிறந்தோங்கி நிலவியிருந்தன. எவர்மீதும் அதிகாரம் புரியும் பாத்தியதை ஆண்டவன் ஒருவனுக்கே தான் தகுமென்பது அக்காலப் பெரியார்களின் சித்தாந்தம். எனவே அன்னோர் பிரஜைகளுக்கு ஊழியம் புரிவதற்குரிய ஒரு நற்சாதனமென்று கருதியே கிலாபத் பதவியை வகித்து வந்தார்கள். ஆதலால் கிலாபத் ஆக்ஷியின் வருவாயான பொக்கிஷங்கள், பொதுநிதிகள் ஆகிய யாவற்றையும் பொது ஜனங்களுடையதென்றே பாவித்து வந்தார்கள். தாங்கள் ஜெயித்த ஊர்களிலிருக்கும் நிலம் புலங்களைச் சிப்பாய்கட்கோ, உத்தியோகஸ்தர்கட்கோ பங்கிட்டுக்கொடுக்கமாட்டார்கள். ஆனால், அந்நிலங்களைப் பொதுச் சொத்தாகப் (வக்பாக) பாவித்து அதில் கிடைக்கும் வருவாயை அதன் பாத்தியஸ்தர்கட்கு விநியோகிப்பார்கள்.

வாழ்க்கை.

அக்காலத்திய ரோமாபுரி ஆக்ஷியினரும், ஈரானிய அரசாங்கத்தினரும் சகலவித இன்பங்களிலும், சுகபோகங்களிலும், ஆழ்ந்து வீண்பெருமை பாராட்டிக்கொண்டு காலங் கழித்து வந்தனர். ஆனால் அக்கால முஸ்லிம்களது உள்ளங்களில் அவ்வித வீணாடம்பங்கள் ஒரு சிறிதும் இடம் பெற்றிருக்கவில்லை. கண்ணியம் வாய்ந்த சஹாபாக்களுடைய இல்லங்கள் அநேகமாய் மண்சுவர் வைக்கப் பெற்று எளிய முறையில் கட்டப் பெற்றனவாயிருந்தன. ஜாமிஃ மஸ்ஜிதுங்கூட எளிதான நிலையில்தானிருந்தது.

அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிக மிக எளிய, சாதாரணமான உடைகளையே அணிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அணிந்துள்ள அங்கியில் எவ்வளவு ஒட்டுகள் போட்டுத் தைத்து உபயோகிக்க

முடியுமோ அதுவரை தைத்து உபயோகித்து அதன்பின்பே அதை எடுத்துவிடுவார்கள்.

சில சமயங்களில் கலீபா அவர்களுடைய அங்கியில் பன்னிரண்டு ஒட்டுகளிருந்தனவாம். கலீபா அவர்கள் தம் தோள்மீது தண்ணீர் எடுக்கும் தோல் பையைத் தூக்கிக்கொண்டுபோய் விதவா ஸ்திரீகட்கு ஜலம் கொண்டுவந்து கொடுத்து சகாயம் புரிவார்கள். அதிகமாக வேலைசெய்வதன் பயனாய்க் களைத்துப் போய்விடுவார்களாயின், மஸ்ஜிதின் ஒரு மூலையில் தரையின்மீது படுத்துக் களைப்பாறுவார்கள். கலீபா அவர்கள் அநேக சமயங்களில் கூடாரமோ, நிழலாதாரமோ இல்லாமல் பிரயாணஞ் செய்வார்கள். அத்தகைய சமயங்களில் மரத்தடியில் தம் போர்வையை விரித்து அவ்விடமே படுத்துத் தூங்குவார்கள். அவர்களது வீட்டுக்குடித்தனச்செலவு நாளொன்றுக்கு சுமார் பத்து அணுவுக்குமேல் போகாமலிருக்கும். சாதாரணமான கோதுமை ரொட்டி, ஜைத்தூன் எண்ணெய் ஆகியவற்றை உபயோகித்துத் திருப்தியடைவார்கள்.

ஒருமுறை பைத்துல் மால்—பொதுச்சொத்தைச் சேர்ந்த ஒட்டகமொன்று ஒடிவிட்டது. கலீபா உமர் (ரலி) அவர்கள் கைச்சட்டையை மடக்கிக் கொண்டு அதைத் தேடிப் பிடித்து வர பலவிடங்களிலும் அலைந்து திரிந்தார்கள். அச்சமயம் ஒரு நண்பர் குறுக்கிட்டு, "கலீபா அவர்களே! இச்சாதாரண வேலையைத் தாங்கள் ஏன் செய்யவேண்டும்? ஓர் அடிமைக்குக் கட்டளையிடக்கூடாதா?" என்று வினவினர். அதற்குக் கலீபா அவர்கள் "என்னைவிடப் பெரிய அடிமை இத்தரணியில் யார் இருக்கின்றனர்?" என்று தாழ்மையாய்ப் பதிலிறுத்திச் சென்றார்கள்.

சமத்துவம்.

அக்காலை பரிபாலன விஷயமாய் தர்பார் கூடுவதற்கு 'மஸ்ஜிதுநபவீ'யைத் தவிர்த்து வேறிட மிருக்கவில்லை. அவ்விடத்திற்றான் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் உட்கார்ந்து அரசியல் பரிபாலன விவகாரங்களை இனிது பரிசீலனை செய்து முடிவுக்குக்கொண்டு வருவார்கள். மேலும், "அனாதைகளைச் சம்ரக்ஷிப்பவர்க்கு அவ்வனாதையின் சொத்தில் எத்துணை பாத்தியதையிருக்கின்றதோ, அத்துணை பாத்தியதை தான் எனக்கும் முஸ்லிம்களுடைய பைத்துல் மால் பொதுச்சொத்தில் இருக்கின்றது." என்று ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கூறுவார்கள்.

மேலும், கலீபா அவர்களுடைய காரியாதிகளில் ஏதேனுமொரு குறை காணப்பட்டால் உடனே ஒரு சிறியவருங்கூட எழுந்து கேட்க பாத்தியமளிக்கப்பட்டிருந்தது. கலீபாவுடைய பிரதிநிதிகள் (கவர்னர்கள்) துருக்கிக் குதிரைகள்மீது ஏறிச்செல்லலாகாதென்றும், உயர்ந்த மெல்லிய ஆடைகளை அணிந்து கொள்ளலாகாதென்றும், சலித்தமாவின் ரொட்டி புசிக்கலாகாதென்றும், வாயிற்படியில் காவற்காரனை நியமித்தலாகாதென்றும், விண்ணப்பம் செய்துகொள்வோரும் துன்பமிழைக்கப்பட்டோரும் தாராளமாய் வந்து முறையிட்டுக் கொள்ளுமாறு எந்நேரமும் கதவு திறந்தேயிருக்கவேண்டுமென்றும், அப்பிரதிநிதிகளிடமிருந்து பிரமாணம் வாங்கப்பெற்று வந்தது. எந்தப் பிரதிநிதியேனும் வியாதியஸ்தர்பால் சென்று க்ஷேமம் விசாரிக்கவில்லையென்றோ, ஏழைகள் அவரது தர்பாருக்கு வந்து முறையிட்டுக்கொள்ள வசதியளிக்கப்படவில்லையென்றோ தெரியவந்தால் உடனே அப்பிரதிநிதியை உத்தியோகத்தை விட்டும் நீக்கிவிடுவார்கள்.

அக்காலை எகிப்திற்கு அதிபதியாக நியமிக்கப்பெற்றிருந்த 'இயாள் பின் கனம்' என்பவர் மெல்லிய உடைஉடுத்துகிறாரென்றும், வாயிற்படியில் காவற்காரனை நிற்க வைக்கின்றாரென்றும், தகவல் தெரியவந்தது. இத்தகவல் உண்மையென்று நிரூபிக்கப்பட்டு விடவே, கலீபா ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள், இயாளை மதீனாவுக்கு அழைத்து அவர் வகித்து வந்த உயர்பதவியை விட்டும் நீக்கி, கம்பளியாலான சட்டையொன்றை அவருக்கு அணிவித்து ஓர் ஆட்டு மந்தைக்கு பொறுப்பாளியாக்கி அதை வனத்தில் மேய்த்துத் திரியும்படி கட்டளை பிறப்பித்து விட்டார்கள்.

ஹஜ்ரத் ஸஅத் வக்காஸ் (ரலி.) அவர்கள் தமக்கென்று ஒரு மாளிகையை கட்டிக்கொண்டனர். அம்மாளிகையுள் பிரவேசிப்பதற்காக அழகிய வாயிலொன்று இருந்தது. கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் உத்தரவுப்படி முஹம்மத் பின் முஸ்லிமா என்பவர் ஆங்குசென்று அப்பிரவேச வாயலுக்குத் தீ வைத்து நாசமாக்கி விட்டனர். இவ்வாறு

செய்ததற்குக் காரணம், ஜனங்களுள் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வாக யிராமல் சமமாக யிருக்கவேண்டு மென்பதேயாம்.

ஒரு முறை உபைய் யிப்னு கஅப் (ரலி.) அவர்கள் ஏதோ ஒரு பிரசினையை யொட்டி ஜைத் பின் தாபித் (ரலி.) அவர்களுடைய நீதி ஸ்தலத்தில் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் மீது ஒரு வழக்குத் தொடுத்திருந்தனர். நீதி முறைப்படி கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் நீதி ஸ்தலத்தில் ஆஜரானதும் ஜைத்பின் தாபித் (ரலி.) அவர்கள் எழுந்து கலீபாவுக்கு மரியாதை புரிந்தனர். இதை ஆக்ஷேபித்துக் கலீபா உமர் (ரலி.) அவர்கள் ஜைதை நோக்கி, "தாங்கள் இப்படிச் செய்வது முதலாவது தவறாகும். எதுவரை உமரையும், (தன்னை) சாதாரண பிரஜையையும் ஒரே அந்தஸ்தினராய் பாவிக்க மாட்டீர்களோ அதுவரை தாங்கள் நியாயாதிபதி ஸ்தானம் வகிக்க தகுதியுடையவராய் கருதப்படமாட்டீர்கள்" என்று மொழிந்தனர்.

மேலும், அக்காலே கூபாவின் ஜாமிஃ மஸ்ஜிதில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தூண்கள் நவ்ஷேர்வானுடை புராதன மாளிகைகளினின்று எடுத்து உபயோகிக்கப் பெற்றவைகளாயிருந்தன. அது சமயம் கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் நவ்ஷேர்வானியர்களுடைய சிம்மாசனம் முதலியவற்றிற்கு அதிபதியாயிருந்துங் கூட, மேற்படி தூண்களுக்குரிய கிரயத்தை மஜூஸியர்கட்குகொடுத்து விட்டார்கள்.

இஸ்லாமியப் பிரசார முறை.

ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களுடைய காலத்தில் இஸ்லாம் அபிவிருத்தியடைந்ததைப்போல், அதற்குப் பின்னைய காலங்களில் நிகழ்வுற்றது கிடையாது. அக்காலே இஸ்லாம் மதப் பிரசாரம் புரியப்பட்ட முறையானது இதர சமூகத்தினர்க்கு இஸ்லாத்தின் தத்துவங்களை இனியதோரணையில் எடுத்தோதுவதாயிருந்து வந்தது. இந்த இனிய பிரசாரத்தின் பயனாக ஜனங்கள் தாமாகவே இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டு வந்தனர். அக்காலத்தில் ஏனைய வர்க்கங்களைச் சேர்ந்த இலக்ஷக்கணக்கான முஸ்லிமல்லாதோர் மனப்பூர்வமாக இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். இவை யெல்லாம் அப்பண்டைய முஸ்லிம்களின் உயரிய வாழ்க்கையின் மகிமையால் உண்டான பிரயோஜனங்களாகும்.

அக்கால முஸ்லிம் பெரியார்கள் நற்குண நல்லொழுக்கங்களில் சிறந்து விளங்கிய காரணத்தால் உலக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டிருந்தார்கள். உதாரணமாக, அக்காலே எகிப்து கவர்னராயிருந்தவருடைய மகன் ஒரு மனிதரை அகாரணமாக அடித்து விட்டார். இச்செய்தி ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கட்குத் தெரிய வந்தது. ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அக்கவர்னருடைய முன்னிலையில் அவருடைய மகனை நிற்க வைத்து அவ்வெளிய மனிதருடைய கரத்தால் பதிலுக்குப் பதிலாய்ச் சாட்டையடி கொடுக்குமாறு செய்தார்கள்.

ஹஜ்ரத் அம்ரு பின் ஆஸ் அவர்கள் எகிப்தின் ஜாமிஃ மஸ்ஜிதில்(தமக்கென்று)மேடையொன்றை ஏற்படுத்தினர். இதைக் கேள்வியுற்று "இதர முஸ்லிம்களெல்லாம் கீழே உட்கார்ந்து கொண்டிருக்கையில் தாங்கள் மாத்திரம்மேலே உட்கார்ந்து கொண்டிருக்க விரும்புகிறீர்களா?" யென்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அன்னாருக்கு நிருபமொன்று வரைந்தனுப்பினார்கள்.

ஸிரியா தேசத்தில் ரோமர்களுடைய அரசாங்கம் நிலைக்காமல் போய், முஸ்லிம்களுடையதர்மராஜ்யம் இனிதுநிலைபெற்றபோது, முஸ்லிம் ராஜ்யத்தின் சீரிய முறையை யுணர்ந்த அந்நாட்டு ஜனங்கள் எல்லோரும், "எங்கட்கு ரோமர்களுடைய ஆதிக்கத்தை விட முஸ்லிம்களுடைய தர்ம ராஜ்ஜியம் தான் மிகவும் திருப்தி யளிப்பதாக இருக்கின்றது" என்று பன்முறை வலியுறுத்திக் கூறிவந்தார்கள்.

யர்மூக் போர் நிகழ்ந்த சமயம் ஹிமஸ் பிரதேசம் காலி செய்யப்பட்டபொழுது கிறிஸ்துவர்களிடமிருந்து இதற்குமுன் வசூல் செய்யப்பட்டிருந்த ஜிஸ்யா - வரிப்பணமும் திரும்ப அவர்கட்கே கொடுக்கப்பட்டது. முஸ்லிம்கள் இங்ஙனம் பெருந்தன்மையுடன் நடந்துக் கொண்டதனால் கிறிஸ்துவர்களும் யூதர்களும் அம் முஸ்லிம்களது சகவாசத்தை விட்டுப் பிரிய நேரிட்டமைக்கு அழுது புலம்பினார்கள். தவிர அவர்கள் மிக உற்சாகத்துடன் "முஸ்லிம்களே ! இறைவன் உங்களை எங்கள்பால் திருப்பக் கொண்டுவந்து சேர்ப்

பாஞக!'' என்றுவாழ்த்தினர்கள். இச்சம்பவத்தினல் யூதர்களுடைய உள்ளங்களில் பெருந்தன்மையான உணர்ச்சி உதயமாயிற்று. எனவே, இவர்கள் பிரமாணஞ் செய்து 'எதுவரை நாங்கள் ஜீவித்திருப்போமோ, அதுவரை கெய்ஸர் மன்னர் ஹிமஸ்மீது ஆதிக்கங் கொள்ள முடியாதென தைரியமொழி கூறினர்கள்.

தாக்ஷிண்ய மில்லா நீதி.

அக்கால முஸ்லிம்களுடைய நியாயம், உயர்ந்த மனப்பான்மை, சத்குணம் ஆகியவற்றை எடுத்து விளக்க இவ் வுலகமனைத்தி லுள்ள சரித்திரங்கள் போதா. ஆயினும் இதையொட்டிய சம்பவ மொன்றை ஈண்டுக்கூறுவோம்.

ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களின் புதல்வரான அபூஷஹ்மா என்பவர் ஒருமுறை கட்குடித்துவிட்டார். இஸ்லாமியக்கட்டளைப்படி தந்தை உமர் (ரலி.) அவர்கள் தாக்ஷண்ணியம்பாராமல் தம் கரத்தாலேயே தம்புதல்வர் மீது 80 சவுக்கடி அடித்தார்கள். இவ்வடிகள் தாங்கொணது அவர் மரணித்து விட்டார்.

கலீபாவின் நீதிபரிபாலனத்தில் பிரஜைகளிடமிருந்து மிகமிகக் குறைந்த தொகையே வரி வசூல் செய்யப்பட்டுவந்தது. இராக் தேசத்துக் குடிகளிடமிருந்து வரிப்பணம் வசூல் செய்யப்பட்டு கலீபா அவர்களிடம் வரும்போது கூபாவாசிகளில் 10 பேரும், பஸ்ராவாசிகளில் 10 பேரும், ஹஜ்ரத்உமர் அவர்களிடம் வந்து வரிகள் வசூல் செய்யப்பட்டதில் கடுமை செய்யப்படவில்லை யென நான்கு முறைபிரமாணம்செய்து கூறும்வரை அந்த வரிப்பணத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பொறுப்பின் உணர்ச்சி.

பண்டைய கலீபாக்கள் தங்கள் பொறுப்பை எம்மட்டும் உணர்ந்து நடந்துகொண்டார்களென்பதையும், அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவு தூரம் ஜவாப்தாரித்தனத்துடன் நடந்து கொண்டார்களென்பதையும் எவராலும் வரையறுத்துக் கூறுதல் முடியாது.

ஹஜ்ரத் உமர்(ரலி.) அவர்கள் மரணிப்பதற்குச் சொற்பகால முன்னர், ஷாம் தேசத்துக்குச் சுற்றுப்பிரயாணஞ் செல்லவேண்டிய அவசிய மேற்பட்டது. இப்பிரயாணத்திடையே ஒரு ஜில்லாவில் தங்கினர்கள். இச்சமயத்திலுங்கூட ஹஜ்ரத் அவர்கள் எளிய பிரஜைகளுடைய முறையீடுகளையும், குறைகளையும் விசாரித்து நியாயம் வழங்கினர்கள். இப்பிரயாணத்தின்போது ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கிழவியைக்கண்டு "மாதே! உமரைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கின்ருய்?'' என்று வினவினர்கள். உமர் (ரலி.) அவர்களை நேரில் கண்டறியாதிருந்த அக்கிழவி "ஆண்டவன் உமரை நாசப்படுத்தட்டும்! அன்னவர் இதுவரை எனக்கு ஒரு தான்யம்கூட கொடுக்கவில்லை'' என்று குறைகூறினள். அதற்கு உமர் (ரலி), "எவ்வளவோ தூரத்திலிருக்கும் உமர் உன்னுடைய ஏழ்மையை எங்ஙனம் தெரிந்துகொள்ள முடியும்?'' என்று கிழவியை நோக்கிக்கேட்டார்கள். இதற்குக்கிழவி, "இந்த விஷயத்தை தெரிந்து கொள்ளமுடி யாதவர் எதற்காக கிலாபத் பதவியை வகிக்கவேண்டும்?'' என்று விடையிறுத்தனள். இது கேட்டு ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் மனமிளகி மெய் சோர்ந்தனர், தன் நாட்டமில்லாமலே அவர்கட்கு அழுகையும் ஏற்பட்டுவிட்டது.

ஹஜ்ரத் ஹுதைபா பின் யமான் (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து பல ரகசியங்களைத் தெரிந்துகொண்டிருந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் இவரிடமணுகி, "நண்பரே! முனபிக்கீன் (நயவஞ்சகர்)களுடைய கூட்டத்தினரிருந்தனரே, அவர்களுள் எவனேனும் ஒருவன் என் உத்தியோகஸ்தரில் இருக்கின்றனு?'' என்று வினவினர். அதற்கு ஹுதைபா (ரலி) "ஆம்! ஒருவன் இருக்கிறான்'' என்று விடையிறுத்தனர், எனினும், அன்னவன் இன்னன் என்று பெயர்கூற மறுத்துவிட்டனர். இங்ஙனமிருக்க, சின்னட்கட்குப்பின்னர் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் தாமே, ஹுதைபா கூற மறுத்த பேர்வழியை உத்தியோகத்தைவிட்டு நீக்கிவிட்டார்கள். இதை அறிந்த ஹுதைபா (ரலி.) அவர்கள் பேராச்சரியமுற்று தான் கூருமலிருக்கும் நிலைமையில் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அப்பேர்வழியை எப்படித்தெரிந்துகொண்டனரோ வென்று வியப்படைந்தனர்.

முன்னேற்ற மடைந்த காரணம்.

இவ்வாறாக நியாயம், தூய வாழ்க்கை, கடமை, பொறுப்பை உணர்தல், பரோபகாரம் புரிதல், எளியோரின் குறைகளை விசாரித்தல் முதலிய நல்லொழுக்கங்கள் தாம் நம் முஸ்லிம் சமூகத்துக்குக் கீர்த்திப் பிரதாபத்தைதையும், வெற்றியையும் அளிக்கும் நற்சாதனங்களாயிருந்தன. இத்தரணியின்கண் எந்த ஒரு சமூகம் மேல்கூறப்பெற்றுள்ள நல்லொழுக்கங்களைப் பின்பற்றி நடக்குமோ அச்சமூகம் தான் எல்லாவற்றினும் தலைசிறந்து விளங்கும். ஆகவே, முஸ்லிம்காள்! உங்கள் உள்ளங்களை விஸ்தீரணப்படுத்திநம்பெரியார்களின் நற்குண நல்லொழுக்கச் சம்பவங்களையெல்லாம் உள்ளத்தில் கொண்டு அதினின்று படிப்பினை பெறுங்கள்! அச்சீரிய தன்மைகளை கடைப்பிடித்து, அப்பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்லுங்கள்! அப்படிச் செய்து புனித வாழ்க்கையை நீங்கள் மேற்கொள்வீர்களாயின், உங்களைப் பீடித்துள்ள இழிவு, க்ஷீணநிலை முதலியவைகளெல்லாம் தொலைந்து, கண்ணியமும் கீர்த்திப் பிரதாபமும் கிடைத்து விடுமென்பது திண்ணம்.

சமூக சீர்திருத்தம்.

இஸ்லாமிய சமூகப்புனருத்தாரணத்துக்கும், இதரச மூகப் புனருத்தாரணத்துக்குமிடையே பெருத்த வித்தியாஸமுண்டு ஹிந்து சங்கடனப் பிரசாரமும், சீக்கிய ஜதபந்திப் பிரசாரமும் உலக விவகார திட்டத்தில்இதம் பெறுவதை யொட்டியனவா யிருக்கின்றன. இவ்விதப் பிரசாரத்தின் சட்ட திட்டங்கள் அப்பிற சமயத்தினரால் சுயமே ஏற்படுத்தப் பெற்றனவாகும். கால நிலையின் அவசியத்தால் நிர்ப்பந்தப்பட்டே அன்னோர் இவ்வியக்கத்தை உண்டாக்கிக் கொண்டன ரென்பது துணிபு.

ஆனால், இஸ்லாமிய சமூகப் புனருத்தாரணம் அவ்வாறு சுயமே ஏற்படுத்தப் பெற்ற தன்று. இஸ்லாமியப் பிரசாரத்தைத் தேவையானால் ஏற்றுக்கொள்வது, இல்லாவிடின்நிராகரித்து விடுவது என்னும் எதேச்சாதிகாரம் நம்மில் கிடையாது. குர் ஆனுடையவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையவும் போதனைகளையும், எம்பெருமானார் நபிகணுதர் (ஸல்) அவர்களது திவ்விய வாணாள் திருச்சரிதையையும் உற்று நோக்குமிடத்து, (தன்ஜீம்) சமூக சீர்திருத்தஞ் செய்வது முஸ்லிம்களது மதக்கடமைகளில் பிரதானமானதென வலியுறுத்தப்பட்டிருப்பது நன்கு தெரியவரும்.

முஸ்லிம்கள் மீது எங்ஙனம் தொழுகை நிறைவேற்றல், நோன்பு நோற்றல் ஆகியவை கடமைகளாயுள்ளனவோ அங்ஙனமே இஸ்லாம் பாதுகாப்பும், பிரசாரமும், தன்ஜீமும் கடமைகளாகுமென்று கூறுவது மிகையாகாது.

சமூக சீர்திருத்தம், சமூக ஐக்கியம், மதப் பாதுகாப்பு ஆகியவை இஸ்லாத்தின் அம்சங்களேயாகும். எவ்வாறு இலை, பூ, காய், பழம், கிளை, அடி, வேர், யாவும் சேர்ந்தே ஒரு மரம் என்று சொல்லப்படுகிறதோ, அவ்வாறே ஈமான், தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத், குர்பானி, ஜிஹாத், நற்குணம், நல்லொழுக்கம், இஸ்லாம் பாதுகாப்பு, சமூக ஒற்றுமை, சமூக சீர்திருத்தம், சமூகப் புனருத்தாரணம் முதலியன யாவும் சேர்ந்ததையே இஸ்லாமிய தன்ஸீம்'' எனக் கூறப்படுகின்றது. ஆகவே, சமூக சீர்திருத்தம் இஸ்லாமிய வாழ்க்கைக்குரிய ஓர் அத்தியாவசியமான அம்சமாகும்.

சமூகச் சீர்திருத்தமும் குர்ஆன் கட்டளையும்.

சமூக ஒற்றுமை, அல்லா - ரஸூலுக்கு அடிபணிந்து நடத்தல், அன்பு, சமரஸம் ஆகிய புனருத்தாரணச் சேவைகளைப்பற்றி குர்ஆன் ஷரீபில் கட்டளையிடப் பெற்றுள்ளவைகளில் சிலவற்றை இதன்கீழ்க் குறிப்பிடுகின்றோம்:—

(1) நன்னம்பிக்கைக் கொண்டவர்காள்! நீங்கள் ஏகமாய்ச் சேர்ந்து ஆண்டவனது

(கட்டளை என்னும்) வடத்தைப்பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.'' (குர்ஆன்)

இத் திருவாக்கியத்தில் முஸ்லிம்சோதரர்களெல்லோரும் ஏகமாய்ச் சேர்ந்து சமரஸத்துடன் ஒற்று வாழ்தல் அத்தியா அவசியமென கட்டளையிடப் பெற்றுள்ளது.

(2) 'ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! அல்லாஹ்வுக்கு அடிபணிந் தொழுகுங்கள். (அவனது) திருத்தூதருக்கும் வழிப்பட்டொழுகுங்கள், உங்களது அதிகாரிகட்கும் கீழ்பணிந்து ஒழுகுங்கள்.' (குர்ஆன்)

இத் திருவசனத்தில், முதலில் ஏக பராபரனாகிய அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குட்பட்டு நடக்கவேண்டுமென்றும், அவனது திருத்தூதர் நபிகள்நாதர் (ஸல்.) அவர்களது போதனைகளை ஏற்று, அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கவேண்டு மென்றும், முஸ்லிம் அரசர்கள், தலைவர்கள், பெரியோர்கள், அதிகாரிகள் முதலியோருக்கும் கட்டுப்பட்டுச் சீரானவழியில் நடக்கவேண்டு மென்றும் போதிக்கப்பட்டிருக்கிறது.

(3) 'ஆண்டவன் (முஸ்லிம்களாகிய) உங்கள் உள்ளங்களில் அன்பை நிலவச்செய்துள்ளான். மேலும் அவன் தன் அருட்கொடை கொண்டு உங்களைச் சகோதரர்களாகப் பரிணமிக்கச் செய்துள்ளான்.' (குர்ஆன்)

இத்திருவசனத்தில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அன்பு பரஸ்பரநேசம் இவைகள் நிலவி யிருக்கவேண்டு மென்றும், ஆண்டவனுடைய அருட்பாக்கியம் அடையப்பெற்ற முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்களே போல் அன்னியோன்யமாய் வாழவேண்டு மென்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(4) 'நன்னம்பிக்கைக் கொண்டவர்காள்! ஆண்டவனுக்கும் அவனது திருத்தூதருக்கும் வழிப்பட்டொழுங்கள்! உங்களுக்குள் சச்சரவு புரிந்துகொள்ளாதீர்கள்! இன்றேல் பிரிவினைப்பட்டுப் போவீர்கள். (அப்படியானால்) உங்களுடைய கண்ணியம் எடுபட்டுப் போய்விடும்.' (குர்ஆன்)

இத் திருவாக்கியத்தில், முஸ்லிம்கள் தங்களுக்குள் அபிப்பிராயபேதம், பிணக்கு, பிரிவினை, கலகம் முதலியன புரிந்துகொள்ளக் கூடாதென்றும், பிற்போக்குக்கும் இழிவுக்கும் காரணம் பிரிவினையாகவே யிருக்கிறதென்றும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

ஈண்டு எடுத்தோதப்பட்ட குர்ஆன் ஆயத்துகளின் கருத்துகளினின்று சமூகப்புனருத்தாரணம் சீர்திருத்தம் ஐக்கியம் சமரஸம் ஆகியவை இஸ்லாத்தின் அம்சங்களென்பது விளக்கமாகிவிட்டன. எனவே முஸ்லிம்கள் மதப் பிரசாரம் சமூகத்தொண்டு மதப்பாதுகாப்புச் சேவை முதலியன புரிவது மார்க்கக் காரியங்களாகும்.

பண்டைய இஸ்லாமிய மக்கள் ஆண்டவனது கட்டளைக்கும், நபிகள் நாயகத்தின் அரும் போதனைகட்கும் முற்றும் சிரம்பணிந்து நடந்து வந்தனர். ஸஹாபாக்கள் ஒவ்வொருவரும் அல்லாஹ்-ரஸூலின் கட்டளைக்கிணங்கித் தொண்டுப் புரிவதற்கென்றே தங்கள் உடல், பொருள், ஆவியாவையும் அர்ப்பணஞ் செய்திருந்தனர். எனவே, அவர்கள் உலகத்தாரில் சிரேஷ்டர்களாய் விளங்கினர். இஸ்லாமிய தன்ஜீமும் பிரசார வேலைகளும் அவர்களால் இனிது நடைபெற்று ஓங்கி வளர்ந்தன. இதன் காரணமாய் அன்னோர் சொற்ப காலத்துக்குள் பரிசுத்த இஸ்லாம் மதத்தை உலகமெங்கும் இனிது பரவச்செய்தார்கள். அன்னோரின் நற்குண நல்லொழுக்கப் பெருந்தன்மையைக் கண்ணாரக்கண்ட பிற மதவாதிகளில் பல்லோர் தம் மனப்பூர்வமாய்ச் சுயமே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டனர். சுருங்கக்கூறுமிடத்து, தன்ஜீம் வேலை, இஸ்லாம் பிரசாரச் சேவை, மதப்பாதுகாப்புத் தொண்டு ஆகியவற்றைப் புரிவதற்குப் பண்டைப் பெரியார்களுடைய ''உஸ்வயெ-ஹஸனா''வாகிய நற்குண நல்லொழுக்க உத்தமத் தன்மைகளை இக்கால முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையின் பூஷணமாய்க் கொள்ளல்வேண்டும். ஏனெனின், இஸ்லாம் மதமானது ஒரு பொழுதும் பலாத்காரத்தால் பரவியது கிடையாது. ஆனால், முஸ்லிம் மக்களின் பரிசுத்த குணாதிசயம், நல்லொழுக்கம், பரஸ்பர அன்பு, சகோதரத்துவம், சத்திய போதனைகள் ஆகியவற்றால் தான் இஸ்லாம் இவ்வுலகில் பரவி வியாபித்தது.

நஞ்சமூகத்தில் தோன்றியுள்ள இக்கால மாந்தர்களில் பலர், பண்டைப் பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றாது மனம் போனபடி உழல்வதனால் தான், இதுகாலை

நம்முஸ்லிம் சமூகத்துக்குப் பல தொல்லைகள் நேரிட்டுள்ளன. உயர்த்திரு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், சங்கைவான்களான சஹாபாக்கள் (ரலி) முதலான பெரியோர்கள் புரிந்துவந்த தன்ஜீம், மதப்பிரசாரம், சத்திய போதனை முதலியவற்றின் இனிய முறையை நம்மவர் கைவிட்டதனாலேயே இக்காலை முஸ்லிம் சமூகம் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. தற்கால முஸ்லிம்கள் ஊக்கங்குன்றி, தைரியமிழந்து, ஏழ்மையுற்று, மதப்பற்றற்று, செல்வாக்கிழந்து உழல்வதற்கு இஃதே காரணமாகும்.

இஸ்லாமிய விரோதிகளின் எதிர்ப்பிரயாசை.

பரிசுத்த குர்ஆனின் நற்போதனைகள் இவ்வாறிருக்க, இதற்கு முற்றும் மாற்றமாய் முஸ்லிம்கள் நடக்கவேண்டுமென்று இஸ்லாத்தின் விரோதிகள் எதிர்பார்க்கின்றனர். அதனால் நம் முஸ்லிம்கள் தமக்குள் ஐக்கியப்பட்டு, சமூக சீர்திருத்தம் புரிந்துகொள்வதைப்பார்த்து அப்பகைவர்கள் பெரிதும் அழுக்காறு கொள்கின்றனர். மேலும், முஸ்லிம்கள் தங்களுக்குள் பிரிவுபட்டு-வேற்றுமையுற்று பகைமை,குரோதம் கொண்டொழுகுவதில்தான் தங்களுக்கு பெரும் நலமுண்டென்று அவ்விரோதிகள் எண்ணியுள்ளனர்.

முஸ்லிம்காள்! தற்காலமுள்ள நம்மவர் நிலை எங்ஙனமிருக்கிறதென்று ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள்! தற்காலம் நாமடைந்திருக்கும் பரிதாபகரமான நிலைமையை ஈண்டு சிறிது கூறுவோம்:—அதிகார வர்க்கத்தினர் நம்மில் சுயநலம் படைத்த சில முஸ்லிம்களை தங்கள் சார்பில் சேர்த்துக்கொண்டு (இஸ்லாத்துக்கு முரணான) ஏதேனும் ஒரு சட்டத்தை ஏற்படுத்தி விடுகின்றனர். இச்சட்டத்துக்கு எல்லா இந்திய முஸ்லிம்களுடைய ஆதரவும் அனுமதியும் கிடைத்திருக்கிறதென்று பகிரங்கப்படுத்துகின்றனர். (உண்மையில் அம்முரணான சட்டத்தை ஆமோதித்துக்கொள்பவர் சுயநலங் கொண்ட ஒரு சிலரேயாவர்)

இதுவன்றி,மற்றொருபக்கல் ஹிந்து நண்பர்களும் இவ்வாறே சூழ்ச்சிப்புரிகின்றனர். இன்னோரும் சுயநலங்கொண்ட ஒரு சில முஸ்லிம்களைத் தம்பக்கல் சேர்த்துக்கொண்டு, (முஸ்லிம் சமூகத்துக்குப்பாதகமான ஏதேனும் தீர்மானங்களை நிறைவேற்றி விடுகின்றனர். அத்துடன் அத்தீர்மானத்துக்கு இந்திய முஸ்லிம்களெல்லோரின் ஆதரவும் இருப்பதாகப்பறையறைந்தும் விடுகின்றனர். உண்மை நிலைமையை யுன்னுங்கால், நம்மிந்திய முஸ்லிம் சமூகத்தினரை அரசாங்கத்தார் இலக்ஷியஞ்செய்வதுமில்லை யென்பதும், ஒரு பொருட்டாக மதிப்பதுமில்லை யென்பதும், ஹிந்துக்களுங்கூட நம் முஸ்லிம்களை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை யென்பதும் நன்கு விளங்குகின்றன. இன்னிலைமையில் அச்சாரார்க்கு முஸ்லிம்களின் உதவி எப்போதேனும் தேவைப்படும் போது, அவர்கள் கோரிக்கைநிறைவேறுவதற்காக தங்கள் சொற்படி ஆடும் சில சுயநலகொண்ட முஸ்லிம்கள் அவர்கட்குக் கிடைத்து விடுகின்றனர். சில சமயம் சிநேகிதப் பான்மையிலும், சிலசமயம் லீக் சபையின் மாரலாகவும் சிலசமயம் கிலாபத் கமிட்டியினரின் மூலமும் அத்தகையோர் (கூலிக்காக) கிடைத்து விடுகின்றனர். இவ்வாறு கிடைத்தவர்களின் சகாயத்தைக்கொண்டு தாம் விரும்பியதை செய்துமுடிப்பதில் ஹிந்துகட்கு சிறிதும் சங்கடம் ஏற்படுவது கிடையாது.

உண்மை முஸ்லிம்களே! இதை நீங்கள் கண்டுணர்ந்து விழித்தெழுந்து சிதறியுள்ள நம் முஸ்லிம்களை ஒன்றுசேர்த்து, ஐக்கியப்படுத்தி நமது சொந்த சமூக உரிமைகளையும் கோரிக்கைகளையும் பெறுவதற்குப் பெரும் பிரயத்தனம் எடுத்துக்கொள்ள வேண்டாமா! இங்ஙனம் நாம் புத்துணர்ச்சிப்பெற்று சுயமுயற்சியால் நமதுகோரிக்கைகளை அடைந்துவிடுவோமாயின், இனி இதர வர்க்கத்தினர் நம் முஸ்லிம்களுடைய பாத்தியதைகளை அபகரித்துக் கொள்ளத் துணியமாட்டார்களென்பது திண்ணம்.

எதிரிகளின் சுயநலப் பிரயத்தனம்.

எந்நிலையிலும், சகல விவகாரங்களிலும் முஸ்லிம்களெல்லோரும் ஏகமாய் ஐக்கியத்தோடு வேலைசெய்வதே இஸ்லாத்தின் சித்தாந்தமாகும். நம் முஸ்லிம்கள் இவ்வாறு ஒற்றுமைப்பட்டு சமூக சீர்திருத்தம் புரிவதைப்பார்க்கும் இஸ்லாமிய விரோதிகள் குரோதங்கொள்கின்றனர். இஸ்லாமிய ஒற்றுமையையும் சமூகப் புனருத்தாரணத்தையும், இழிவுபடுத்திக் கூறுவதுடன் அதை ஒழித்துவிடுவதற்கும் முயற்சிக்கின்றனர். எனவே

"இஸ்லாமிய சர்வதேச ஐக்கிய வாழ்க்கையானது ஒரு பயங்கரமான புரட்சி இயக்கமாயிருக்கிறதென்று" அவ்வெதிரிகள் கூறித்திரிகின்றனர். இன்னும், "இந்திய முஸ்லிம்கள் அப்கனிஸ்தான், அரேபியா, முதலிய இஸ்லாமிய நாடுகளுக்கேற்படும் சுகதுக்கங்களில் கலந்துகொள்வது இந்திய சுதேசாபிமானத்தைக் கெடுத்துவிடக் கூடியதாக யிருக்கிறதெனவும் கூறுகின்றனர். சிலசமயம், மத விஷயத்தை இராஜீய விவகாரங்களைவிட்டு பிரித்துவிடவேண்டுமென்றும் கூறுகின்றனர்.

சிலகால் அவ்விரோதிகள், தேச விடுதலை என்னும் பெயரைச் சொல்லிக்கொண்டு உலமாக்களையும், இஸ்லாமிய அனுஷ்டானங்களையும் இழிவுபடுத்தி தூஷிக்க முற்படுகின்றனர். இதுவன்றி முஸ்லிம்களுக்குள் குரோதத்தையும் பிரிவினையையும் உண்டுபண்ணுவதற்குள்ள வித்தை விதைத்தும் விடுகின்றனர்.

இன்னும் இஸ்லாமியப் பிரசாரம், சமூகப் புனருத்தாரணம், ஐக்கியப்படுத்துதல் ஆகிய இயக்கங்கள் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் மெய்யான சுதேசாபி மானத்துக்குமுள்ள அனுகூலமான பாதையில் செல்வதற்குப் பெருந்தடையை உண்டு பண்ணுவதாயிருக்கின்றன" என்றும் அவ்வெதிரிகள் வீண் உரையாடுகின்றனர்.

ஆகவே, என் அன்பார்ந்த முஸ்லிம் சமூகத்தினர்காள்! மேலே கூறப்பெற்றுள்ள அபவாதங்களும், இன்னும் இதுபோலொற்ற அநேக நயவஞ்சக வார்த்தைகளும், ஐரோப்பியரும் இந்தியர்களுள் சூழ்ச்சிபுரிவோரும் நம்மவர்களில் கிளர்ச்சிச்செய்து எவ்வாறுனும் முஸ்லிம்களுக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணிவைக்க கையாண்டுவரும் தந்திரங்களேயன்றி வேறில்லையென்பதை உணருங்கள்.

குதர்க்கங்கட்கு பதில்.

ராஜீயத் தந்திரங்களைக்கொண்டு ஏமாற்றுகின்றவர்களிடம் சில கேள்வி கேட்போம்:— ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் தங்கள் சமுதாயம் தேசீயம் ராஜீயம் ஆகியவற்றுடன் அபரிமிதமான அபிமானங்கொள்வதில்லையோ? இத்துடன் அன்னோர் கீழ்நாடுகட்கு விரோதமாக—ஐரோப்பியநாட்டின் அனுகூலத்திற்கு தியாகங்கள் புரிவதில்லையோ? மேலும் அன்னோர் இஸ்லாத்துக்கு விரோதமாக கிறிஸ்துவக்கோட்பாடுகளிலும் பிரசாரத்திலும் மதாபிவிருத்தியிலும் கலந்துகொள்வதில்லையோ? இவ் வினாக்களுக்குவிடை, 'ஆம்! உண்மைதான்' என்பார்களாயின், இந்தியாவின்கண்வதியும் முஸ்லிம்கள் சுய சுதேயத்தின்மீது அன்புபூண்டு, இஸ்லாமிய சகோதரர்களுடைய அனு கூலத்துக்காக வேண்டிப் பாடுபடுவதும், இஸ்லாமியமதப் பிரசாரம் புரிவதும், சமூகப் புனர்த்தாரணம் செய்வதும் எவ்வாறு தவறானதாகும்?

மேலும், முஸ்லிம்கள் புரியும் மதப் பிரசாரம் சமூகச் சீர்திருத்தம் இவைகள் தேசீயத்துக்கு பாதகம் விளைவிக்கூடியதாகயிருப்பின் நந்தேய ஹிந்து நண்பர்கள் சுத்தி, சங்கட்டன் இயக்கங்களை தீவிரமாய் பரப்பிவருவது மட்டும் பாதகம் விளைவிப்பதாக யில்லாமல் போவதேனோ? இன்னமும் அவர்கள் தங்கள் பூர்வீக பாஷையான மரித்த சம்ஸ்கிருதத்தை இக் காலை தீவிரமாய் முன்னேற்றத்துக்குக் கொண்டுவருவது எதற்காகவோ?

நிற்க, ஹிந்துக்களும் ஆங்கிலேயர்களும் தம்தம் சுதேசத்தின்மீது அன்புகொண்டிருக்கின்றனர். அவ்வாறு அன்புபூண்டிருக்கும் காரணத்தால் அன்னோர் தம்தம் மதங்களைப் பிரசாரம் புரிவதற்கும், தம் ஆசாரங்களை ஒழுங்குபடுத்தி சீர்திருத்தம் புரிந்து அபிவிருத்தி செய்வதற்கும், தங்கள் பாஷையை சகலரும் ஒப்புக்கொள்ளும் பொதுப் பாஷையாக ஆக்கிவிட முயற்சிப்பதற்கும், நிறம், ஜாதி, நாட்டு வித்தியாசம் ஆகியவைகளை களைந்து சர்வ தேசநேச சம்பந்தங்களை ஏற்படுத்துவதற்கும் பாத்தியபுடையவர்களாக யிருக்கும் நிலைமையில், முஸ்லிம்கள்மட்டில் தேசாபிமானங்கொண்டு மார்க்கப்பிரசாரம், சமூக சீர்திருத்தம் முதலிய காரியங்களில் ஏன் சம்பந்தப்படக்கூடாது? முஸ்லிம்கள் இதர இஸ்லாமிய நாட்டார்களுடன் எதற்காக நேச சம்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளல் கூடாது? இன்னும் ஏன் எம் முஸ்லிம்கள் நிரந்தரமான சத்திய சன்மார்க்க வாழ்விலிருந்துகொண்டு தேசீயம் சமுதாயம் ஆகிய துறைகளில் சம்பந்தப்பட்டுழைக்கலாகாது? நேயர்காள்! எதிரிகளின் குதர்க் வாதங்களையும் நமது நியாயமொழிகளையும் சிறிதே சீர்தூக்கிப் பாருங்கள்.

சமரஸ அழைப்பு.

விரோதிகள் எப்போதும் தங்களது சுய நலங் கருதி இஸ்லாமிய ஒற்றுமைக்குத் தீங்கு

விளைவித்துக்கொண்டு தானிருப்பர். அன்னோர் புரியும் சுத்தி இயக்கம், சங்கடனக் காரியமெல்லாம் தேசியமென்றுதான் கூறப்படும். சமஸ்கிருதப் பாஷையின் பிரசாரமும் தேசசேவை யென்றுதான் கூறப்படும். ஆனால் முஸ்லிம்கள் தம்மதப் தப்லீக் பிரசாரம் புரிவது, சமூக சீர்திருத்தம் செய்வது, உர்தூ அரபிபாஷையை அபிவிர்த்திக்குக் கொண்டுவருவது, முதலியவைகள் மட்டில் சமூக வேற்றுமையை உண்டுபண்ணக் கூடியதாகவும் தேசாபிமானமற்ற தாயும் ஆய்விடுகிறது. இஃது பெரும் வியப்பைத் தரத்தக்க கூற்றுமன்றோ?

ஆகவே, முஸ்லிம்காள்! நெருக்கடியான காலம் வந்துவிட்டது. இக்கால முஸ்லிம்களெல்லோரும் இதர வர்க்கத்தினர் புரியும் சூழ்ச்சிகளைக்கண்டு உணர்ச்சிபெற முற்படுங்கள். இஸ்லாமியக் கட்டளைகட்கும்; குர்ஆனின் போதனைகட்கும் சிரம்பணிந்து நடக்க ஆயத்தமாகுங்கள். முஸ்லிம்கள் கண்ணியமாய் வாழ்வதும்; சமூகம் சீர்கேடுறாமல் இருப்பதும், அவர்கள் சமூகப் புனருத்தாரணம் மார்க்கப் பிரசாரம் இவைகளில் ஈடுபெற்று வெற்றியடைவதில் தான் அமைந்திருக்கிறது.

அன்பர்காள்! ஆழ்ந்த உறக்கத்தைவிட்டு விழித்தெழுந்து காலத்தின் நெருக்கடியான நிலைமையை உற்றுநோக்குங்கள்! இக்கால நமக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பகை; வேற்றுமைப் பிணக்கு ஆகியவற்றின் காரணத்தால் தான் இத்துணை வீழ்ச்சி யடைந்திருக்கிறோம் என்பதை உய்த்துணர்ந்து பாருங்கள். உடனே சகோதரத்துவம், பரஸ்பர விசுவாசம் ஆகிய நல்லம்சங்களை உங்களிடம் அபிவிருத்திசெய்து கொள்ளுங்கள். ஒருவர்க்கொருவர் உற்ற சகோதரர்களாகி விடுங்கள்! அன்னியர்களுடைய கைபொம்மையாக ஆய்விடாதீர்கள்; அல்லும் பகலும் அனவரதமும் இஸ்லாத்துடையவும், முஸ்லிம்களுடையவும் அனுகூலத்தையே வாழ்க்கையின் நோக்கமாய்க் கொள்ளுங்கள். அதிலும் முக்கியமாய் சமூக நிர்மாண வேலைகளின் பக்கல் கவனத்தைச் செலுத்துங்கள். பாமர எளிய முஸ்லிம்களை ஏழ்மையினின்றும், அவிவேகத்தினின்றும் விடுதலை செய்வதற்கு முயற்சி புரியுங்கள்! முடிவாக, இவ்விந்திய நாட்டின் கண் உங்களுடைய கண்ணியம், பாத்தியதைகள் உங்கள் சன்மார்க்க வாழ்வு ஆகியயாவும் நீங்கள் பிரிவினைப்படாமல் "ஸமரஸமென்னும் அல்லாஹ்வுடைய வடத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்ற குர்ஆன் திருக்கட்டளையைப் பின்பற்றி நடப்பதில்தான் மிளிர்ந்திருக்கிறதென்பதை உணருங்கள்.

காதியானி மிர்ஜாவின் முரண்பட்ட வாதம்.

காதியானிக் கோஷ்டியின் தலைவரான மிர்ஜா குலாம் அஹ்மத் என்பவர் தம்மை இயேசுவென்றும் மஹ்தியென்றும் முஜத்திதென்றும் பறைசாற்றிக் கொண்டிருந்தார். இவர் தம்மை "மஸீஹே மவ்ஊது" (பிற்காலத்தில் தோன்றுபவரென வாக்களிக்கப்பட்ட ஈஸா) என்று பறையறைந்து கொண்டிருந்ததோடல்லாமல் இயேசுவுக்குரிய அம்சங்கள் யாவும் தம்மிடம் அமைந்திருக்கின்றனவென்றும் வாதாடிக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் தோன்றுவாரென முன்னறிக்கை செய்யப்பட்டிருந்த "மஸீஹே மவ்ஊது" விஷயமாய் ஹதீது ஷரீபில் கூறப்பட்டுள்ள அடையாளங்கள் பலவற்றுள் ஒன்றுகூடத் தம்மிடம் அமைய பெறுதிருந்தும் அவையனைத்தையும் தாம் பெற்றிருப்பதாகவும், அவற்றின் கருத்தே வேறென்றும் விதண்டா வாதம் புரிந்து, குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாய் விளங்கித் தான் கெட்டதோடல்லாமல் வேறு பலரையும் கெடுத்துவிட்டு இத்தரணியை விட்டுச் சென்றார். ஆனால், இப்பொழுதும் இஸ்லாத்துக்கு முரண்பட்ட அவரது கொள்கைகளையும் குருட்டு வாதங்களையும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றும் ஒரு கோஷ்டியினர் இல்லாமலில்லை. இந்த மிர்ஜா குலாம் அஹ்மதை ஒரு

மஸீஹென்றும், மஹ்தியென்றும், முஜத்தி தென்றும் கூறிக்கொண்டு மிருக்கும் கோஷ்டியார்தான் காதியானிகளென்றும் மிர்ஜாயீகளென்றும் அஹ்மதிய்யாக்களென்றும் அழைக்கப்படுகின்றனர். இந்தக் கோஷ்டியார் பல சூட்சிகள் செய்து தமது தீய கொள்கைகளை முஸ்லிம்களிடையே பரப்பி அவர்களைக் கெடுத்து வருகின்றனர். அவர்களது தீய பிரசாரம்சில காலமாகத் தென்னாட்டிலும் பரவத் தொடங்கி யிருக்கின்றது. அன்னாரது மாயப் பிரசாரத்தின் பயனாய் இஸ்லாமிய மார்க்க ஞானம்போதிய அளவில்லாத இளைஞர்கள் அவர்கள் வலையில் சிக்குண்டு உழல்கின்றனர். காதியானிகளது தீய பிரசாரத்தை அறிந்து கொண்ட பின்னரேனும் நஞ் சகோதரர்கள் அவர்கள்தீயபோதனையினால்ஏமார்ந்துபோகாதிருக்குமாறு எச்சரிக்கை செய்யவே இதை எழுதலானோம். மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானி என்பார், அவரது சிஷ்யர்கள் கூறுவதே போல் மஸீஹாகவோ,மஹ்தீயாகவோ ஒருபொழுதும் விளங்கியதே இல்லை. அத்தகைய பதவிக்குள்ள அம்ஸங்களில் ஒரு சிறிதுங்கூட அவர் தன்மையில் இல்லாதிருந்தும், அவர் பல பொய்யான பசப்பு வார்த்தைகளையும் வதந்திகளையும் கூறித் தம்மைப்பற்றிப் பிரகடனப்படுத்திச் சென்றார் ஆனால் அவர் விஷயங்களைத்திரித்திக்கூறி, பொய் புகன்று ஜனங்களை ஏமாற்றி வந்ததனால் பல சமயம் மார்க்க அறிஞர்களிடமும் கிறிஸ்தவப் பாதிரி -ளிடமும் அகப்பட்டு விழித்திருக்கிறார். ...தமாக அவர் அகப்பட்டுக்கொண்டு ...டிய சில சம்பவங்கள் வருமாறு:—

...குலாம் அஹ்மது ஹதீதுகளைப் புரட்டிக்கூறல்.

பிற்காலத்தில் வருவார்களென்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (ஈஸா) அலைஹிஸ்ஸலாம் இத்தரணியில் விஜயம் செய்யவிருக்கும் வரலாற்றைப்பற்றி ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருப்பதாவது.—

"ஈஸா (அலை) அவர்கள் திமிஷ்க் நகரின் மஸ்ஜிதின் கிழக்குப் பகுதியிலுள்ள மினரா (ஸ்தூபி)மேல் இருவான தூதர்களின் (மலக்குகளின்) புயத்தின்மீது கை வைத்தவர்களாக இறங்குவார்கள். அதுகாலை அவர்கள் மஞ்சள் நிறமுடைய உடை அணிந்திருப்பார்கள். அவர்கள் திருமுகத்தின்மீது வியர்வை வடிந்து கொண்டிருக்கும்."

இவ்வித அம்சங்கள் தம்மிடம் எதுவும் காணாமற்போகவே மிர்ஜா சாஹிப் இந்த ஹதீதைத் திரித்துக்கூறி வியாக்கியானஞ் செய்ய முற்பட்டார். அஃதாவது:—

"திமிஷ்கு என்பது யான் வசிக்கும் காதியான் என்னும் ஊராகும். (இஜாலத்—பக்கம் 135)

"மஞ்சள் உடை இருக்கும் என்பதன் தாத்பரியமாவது அவருடைய தேகாரோக்கியம் நன்றாயிராதென்பதாகும். இருமலக்குகளின் மீது (வான தூதர்களின்மீது) கை வைத்துக் கொண்டிருப்பாரென்பதன் கருத்து, அவருக்கு இரு மனிதர்கள் பேருதவி புரிவர் என்பதாகும்." (இஜாலத் பக்கம் 219).

இவ்வாறாக மிர்ஜா சாஹிப் தவறாக வியாக்கியானஞ் செய்யத் தொடங்கினர். மினரா மேல் இறங்குவதைப்பற்றி மட்டும் அவரால் திரித்துக் கூறமுடியவில்லை. எனவே, அதை அவர் ஒப்புக்கொண்டு "அல்ஹிக்கம்" என்ற தமது பத்திரிகையில் மினராவின் அழகிய படமொன்றைப் போட்டு அதுதான் ஈஸா (அலை) இறங்குவார்களென்று ஹதீதில் கூறப்பட்டுள்ள மினராவென்பதாகக் கூறி விஷயத்தை மழுப்பிவிட்டார்.

ஹதீது ஷரீபிலோ திமிஷ்கு தேச (மஸ்ஜிதின்)மினராவெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மிர்ஜா சாகிபோ திமிஷ்கு என்பதைப் புரட்டிக் கூறமுடியாது, மினராவை மட்டும் தம் பத்திரிகையில் பிரசுரித்திருப்பது பெரும் விசித்திர விநோதமாகவே இருக்கிறது. ஊரும் மஸ்ஜிதுமில்லாமல் மினராவை மட்டில் எவ்வாறு கிரஹித்தல் சாலும்? இவ்வாறாக மிர்ஜா சாஹிப் ஒரே ஹதீஸிலுள்ள பல வாக்கியங்கட்கும் பலவாறு போலிச் சாரணங்களாய்ச் சமாதானங் கூறிவிட்டு, மினராவைப்பற்றிய வாக்கியத்துக்கு மட்டும் படம் போட்டுவிட்டு மௌனமாயிருந்து விட்டது, முழுப் பூஷணிக்காயைச் சோற்றில் மறைத்த கதையாகவல்லவோ இருக்கிறது?

மஸீஹின் ஏனைய அம்சங்கள்.

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இத்தரணிக்கு மீண்டும் விஜயஞ் செய்வார்களென்னும் விஷயம் இஸ்லாத்தின் ஒரு முக்கிய சம்பவமாகும். எனவே, எம்பெருமானார் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களும்

ஈஸா(அலை)அவர்களது தன்மையையும்,குணாதிசயங்களையும், அவர்கள் வந்திறங்கு மிடத்தையும் விளக்கமாய்க் கூறியுள்ளவைகள் ஹதீதுஷரிபில் விளக்கமாய்க் கூறப் பெற்றிருக்கின்றன.

நமது நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பல அடையாளங்களுள் இரண்டை மட்டுமே அந்தக் காதியானி மிர்ஜா சாஹிப் ஒப்புக்கொண்டு அவற்றைத் திருத்தியும் கூறியுள்ளார்: அவற்றில் ஒன்று மினாராவாகும்; மற்றொன்று நிறத்தைப் பற்றியதாகும். மினாராவைப்பற்றி திரித்துக்கூற முடியாததால் அவர் அவ்விஷயமாய் ஒன்றும் கூறாது படம்போட்டு விட்டார் போலும்! தெய்வாதீனமாய் ஹதீதில் கூறப்பெற்றிருந்த உடையின் நிறத்தை தம்மில் பெற்றிருந்தார். ஏனைய அம்சங்கள் ஒன்றும் அவரிடம் காணப்பெறாமையால் அவர் அவற்றுக்குத் தவறான வியாக்கியானங்கள் செய்வதைத் தவிற வேறு வழி யில்லை.

வாறின்றி,அவர் தமக்கு நபித்துவங் கிடையாதென்று கூறுவாராயின், அவர் ஒருபோதும் மஸீஹெ மவ்ஊதாக இருக்க முடியாது. ஆகவே மிர்ஜா சாஹிப் இவ்வாறான சங்கடத்தில் அகப்பட்டுழல்பவராயினர். இவ்வாறு சங்கடங்களுக்காளான மிர்ஜா சாஹிப் தன் சந்தேகம் எதுவும் ஏற்படாமலிருப்பதற்காக அடிக்கடி பின்வருமாறு கூறிகொண்டிருந்தார். அதாவது:—

“யானும் உங்களைப்போலொரு முஸ்லிமாகவேயிருக்கின்றேன். நம் முஸ்லிம்களுக்காக குர்ஆனைத் தவிர வேறொரு வேதம் கிடையாது. மேலும் நமக்கு கத்முல் முர்ஸலீன்-அஹ்மது அரபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் களைத்தவிர்த்து வேறு யாரும் வழிகாட்டியாகவோ பின்பற்றத் தகுந்தவராகவோ இருக்கவில்லை என்று இத்தாழ்மையானவன் அடிக்கடி கூறுகின்றான்” (இஜாலத் பக்கம் 182.)

இன்னமும், “என்னை (ஜனங்கள்) பின்பற்றி நடப்பதனால் சன்மார்க்கத்துக்கு எவ்வாறு தீங்கு நேரிடக்கூடுமேன்பதை யான் விளங்கிக் கொள்ளக்கூடவில்லை. ஏனெனின் இத் தாழ்மையானவன் இஸ்லாமியப் போதனைகட்கு மாறாக ஏதேனு மொருபுதியவழியை ஜனங்கள் பின்பற்றி நடக்க வேண்டுமென்று வற்புறுத்தினாலல்லவோ தீங்கு நேரிடும்? (இஜாலத், பக்கம் 181.)

மிர்ஜாவின் மற்றொரு வாதம்.

சில சமயங்களில் மிர்ஜா சாஹிப் “யான் ஈஸாவைப் போன்றவனாக இருக்கின்றேன்” என்று கூறிக்கொண்டிருந்தார். இதற்கு ஆதாரமாக “எனது உம்மத்தின் ஆலிம்கள் இஸ்ரவேல் வர்க்கத்தின் நபியைப் போலிருக்கின்றனர்” என்று ஹதீது ஷரீபில் கூறப்பெற்றுள்ள வாக்கியத்தை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார்.

மற்றுஞ் சில சமயங்களில் அவர் “என்னுடைய பெயரைத்தான் ஆண்டவன் ஈஸப்னு மரியம், (மர்யமின் புதல்வன் ஈஸா) என்று கூறியுள்ளான்” என்றும் பிதற்றிக் கொண்டிருந்தார்.

வரப்போகும் ஈஸா அலைஹிஸ்ஸலாமைப் பற்றி எம்பெருமானார் நபிகள் நாயகம்(ஸல்), “அந்த மஸீஹ் நபியாகவும் ரஸூலாகவும் மிருந்தார்கள்” என்று கூறியிருந்தும் மிர்ஜா சாஹிப் தம்மை நபியென்று கூறிக்கொள்ள வழியில்லாதவராகி விட்டார்.

அங்ஙனம் மிர்ஜா சாஹிப் தமக்கு நபித்துவம் உண்டென்று வாதாடிமட்டு மிருந்திருப்பாராயின், நிச்சயமாக அவர் முப்பது பொய்யர்களான தஜ்ஜால்களினின்று ஒரு தஜ்ஜாலாக கணிக்கப்பட்டே தானிருப்பார். அவ்

மிர்ஜா சாஹிப் தம்மை தஜ்ஜாலென்று எவரும் அழைக்காம லிருப்பதற்காக ‘யான் நபித்துவத்தைப் பற்றியோ, தீர்க்க தரிசனத்தைப்பற்றியோ வாதாடவில்லை, என்று மழுப்பிக் கூறியிருக்கின்றான்.

நிற்க, ஹதீதுகளில் ஈஸாநபியை யொட்டி “அல்லாஹ்வின்நபி,அல்லாஹ்வின் ரஸூல்” என்று அறிவிக்கப்பட்டிருப்பதை யேனும் விளக்கமாய் மிர்ஜாசாஹிப் மறுக்கின்றாரோ வெனின் அதுவுமில்லை.

மேலும் ‘அகாயிதெ மிர்ஜா’ என்னும் நூலில் மிர்ஜாசாஹிப் ‘யான் அல்லாஹ்வின் நபியாகவும், அவனது ரஸூலாகவுமிருக்கின்றேன். என்னை நிராகரிப்பவன் காபிராவான்’ என்று பறையறைந்துள்ளார்.

நேயர்காள்! காதியானி மிர்ஜா குலாம் அஹ்மதின் புரட்டான கூற்றுகளையும் பாதக

மான முரண்பட்ட வாதங்களையும் சமயசஞ்சீவித்தனமான நடத்தைகளையும் பேச்சுகளையும் ஈண்டு அறிந்தபின்னரேனும் காதியானிகள்-அஹ்மதியாக்களுடைய தீய பிரசார மாய வலையில் சிக்காமல் ஒதுங்கி, சீரான சுன்னத்துவல் ஜமாஅத்தை பின்பற்றி நடந்துய்வீர்களாக!

இஸ்லாம் என்பதென்ன?

'நிச்சயமாக சன்மார்க்கமாகிறது அல்லாஹ்வினிடத்தில் இஸ்லாமாகும்.'

தற்காலம் உலகின்கண் பரவியுள்ள சகல மதங்களிலும் அல்லாஹு தஆலாயிடத்தில் அதிகம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், மிகவும் ஒப்புக்கொள்ளப்பட்டதுமான மதம் இஸ்லாம் மதமாகும். இஸ்லாம் என்பதற்கு அகராதியில் 'உள்ளச்சப்பாடு, வழிபட்டு நடப்பது' என்பதாக பொருள் காணப்படுகிறது. அதற்கு நடைமுறையில், வழிப்பட்டு சிரம் பணிவது என்று பொருள் கூறுகின்றனர். அதாவது, மிகவுந் தாழ்மையாகவும், விநயமாகவும் அடிபணிந்து நடப்பதாகும். இஸ்லாத்தின் அடிப்படையாகிய ஐந்து கடமைகளின்படி அனுஷ்டானம் புரிவதற்கு ஷரீஅத்தில் இஸ்லாமென வியாக்கியானம் செய்கின்றனர். அவ்வைந்து கடமைகளாவன:— முதலாவது, 'வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வை தவிர யாருமில்லை, முஹம்மத்(ஸல்.) அல்லாஹ் உடைய திருத்தூதராவார்கள், என்று சொல்வது; இரண்டாவது தொழுகையை நேமமாய்த் தொழுதுவருதல்; மூன்றாவது, ஜக்காத்து கொடுத்தல்; நான்காவது ரமலானில் நோன்பு நோற்பது; ஐந்தாவது, சக்தியுள்ளவர்கள் மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு செய்வது.

எவனொருவன் மேற்கூறப்பட்ட ஐந்து கடமைகளையும் சிரமேற்கொண்டு நடக்கின்றானோ அன்னவனே முஸ்லிம் என கூறப்படுவதற்கு அருகதை யுடையவனாவன்.

அன்புக்குரிய வாசகர்காள்! உண்மையில் இஸ்லாம் என்னும் வார்த்தை ஒருசிறிய பதமா யிருப்பினும், அதன் அர்த்தத்தை கவனிக்குமிடத்து அது சகலவித நன்மைகளும் ஒருங்கே அமையப்பெற்றதா யிருக்கின்றது. மேலும் இஃது எதிர்பாராது கிடைத்த ஓர் அருட்பாக்கியமாகவு மிருக்கின்றது. தவிர இஸ்லாம் மார்க்கமானது வளர்ந்து அடர்ந்து பூத்துப் பழுத்து நிழல் நிறைந்த ஒரு விருக்ஷமாகவு மிருக்கின்றது. அவ் விருக்ஷத்தின் நிழலில் ஒருபெருஞ் சமூகத்தினர் க்ஷேமமாய் வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். ஒருவன் தனது பிரதான நோக்கத்தை அடைவதற்கு இத் தரணியில் ஒரு சீரான மார்க்கமாயமைந்திருப்பது இஸ்லாம் மதமே யாகும். மேலும் மனிதனது விமோசனத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அனுகூலமா யிருப்பதும் இஸ்லாம்மதமே யாகும். உலகின்கண் சத்தியவாழ்வு நடத்தி தூய்மை பெறுவதற் கியைந்த பரிபூரண மதா யிருப்பது இஸ்லாமே யாகும். உலகமக்களுக்குள் நாகரிகம் சற்குணம் நுண்ணறிவின் தன்மை சீரிய அரசியல்முறை ஆகியவற்றை தோற்றுவித் துதவியதும் இஸ்லாம் மதமே யாகும்.

இவ்வாறுள்ள இஸ்லாம் மதம் தான் உலகத்தவர்பால் பரிசுத்தமும் தூய்மையுமான தத்துவங்களை போதித்திருக்கிறது. இதன் அரிய தூய பரிசுத்த தத்துவங்களில் பத்தில் ஒருபாகங்கூட இதர மதங்களில் காண்பதரிது. மேலும் இவ்வுலகின் நேர்மையான சுபாவத்துக்கும் மனித இயற்கைக்கும் ஒத்தமைந்ததாயுள்ள மதம் இஸ்லாம் ஒன்றைத் தவிர்த்து வேறெதுவு மில்லையென்று திண்ணமாய்க் கூறலாம். அகில லோக சிருஷ்டிகர்த்தனாகிய ஆண்டவன் தன் அடியார்கள் சன்மார்க்கராகி நேர்வழியில் நடப்பதற்குதவுவதற்காக அனுப்பியுள்ள சட்டதிட்டங்கள், சென்ற பதின்மூன்றரை நூற்றாண்டு

களாக இத்தரணியில் சிறந்து விளங்கிவரும் இஸ்லாமிய சட்டதிட்டங்களே யல்லாது வேறெச்சட்டமுமன்று. நிற்க இவ்விஸ்லாமிய சட்டதிட்டங்களில் தூய்மையான தத்துவங்கள் நிரம்பியிருப்பதோடு, மானிடர்களுக்கு மிகப் பிரயோஜனகரமான கல்வி ஞானங்களும் நிரம்பியிருக்கின்றன. இஸ்லாத்தில் ஏற்பட்டுள்ளதுபோன்ற சிறப்புகளையும் மேன்மைகளையும் இதர எந்த மதங்களிலும் காண முடியாது.

பரிசுத்த இஸ்லாம் மார்க்கமானது இத்தரணியில் தோன்றிய சொற்பகாலத்தில் எத்துணை துரிதமாக உலக மானிடர்களிடையே பரவி தன் சத்தியத்தை நிலைநிறுத்திக்கொண்டதோ, அதற்கு நிகராக எந்தமதமும் உலகில் பரவியது கிடையாது. இவ்வாறு இஸ்லாத்தின் கீர்த்தியை சிறப்புற்றோங்கச் செய்தவைகளுள்ளும், இஸ்லாத்தின் சத்தியத்தை நன்குவிளங்கச் செய்தவைகளுள்ளும் இரண்டு அம்சங்கள் மிகவும் முக்கியமானவை. முதலாவது தேசவெற்றிகள்; இரண்டாவது மதப்பிரசாரம். நியாயசுபாவமும்,உண்மையுணர்ச்சியுமுள்ளவர்கள் மேற்கூறப்பெற்றுள்ள இரு அம்சங்களையும் சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பார்களாயின், அன்னோர் இஸ்லாத்தின் உண்மை சத்தியத்தை ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது. தேசங்களின் வெற்றிகளோவெனின் பண்டைக்காலத்திய ஜனங்களிடை வேரூன்றிவிட்ட மூடக் கொள்கைகளையும் துர்பழக்க வழக்கங்களையும் சிலநாளைக்குள் தலைகீழாய்ப் புரட்டி, எங்கும் இஸ்லாத்தின் நல்லாசாரத்தையும் நன்னாகரிகத்தையும் புதிதாய்ப் பரப்பி ஒளிபெறச்செய்து பெரியதோர் மாறுதலை யுண்டுபண்ணிவிட்டது. மதப்பிரசாரமோவெனின், அதுவும் சூரிய ஜோதியேபோன்று சிறிதுகாலத்துள் உலக முழுமையும் ஒளிபரவச்செய்து தனது சத்தியம், உண்மை ஆகியவற்றின் மகிமையினால் மின்சாரத்தைப்போல் பயன்தந்து, காரிருள் சூழ்ந்திருந்த உள்ளங்களையும் ஊடுருவிப் பிரகாசப்படுத்திவிட்டது.

மேலும் தற்காலம் உலகத்தின்கண் விஞ்ஞானக் கலையானது பெரியதோர் மாறுதலை உண்டுபண்ணி யிருக்கிறதென்பது பிரத்தியக்ஷம். அவ்விஞ்ஞான அறிவின் பயனாய்க் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நூதன சாமான்களும், இயந்திரங்களும் மக்களை ஆச்சரியமடையும்படி செய்துவிடுவதா யிருக்கின்றன. இன்னும் அதின் அதியற்புதமான அபிவிருத்தியானது உலகத்தோரின் நேத்திரங்களை மங்கச் செய்துவிடத் தக்கதாயுமிருக்கிறது. இன்னும் அவ்விஞ்ஞான அறிவானது உலகமதங்களின் தராதரத்தை சீர்குலைத்து, நாஸ்திகத்தைப்புகுத்தி விடுவதாகவு மிருக்கின்றது.

விஞ்ஞானஆராய்ச்சி அபிவிருத்தியடைந்து உலகமதங்மளின் அடிப்படையான கோட்பாடுகள் பலமாகத் தாக்கப்பட்டுத் தத்தளிக்குமிப்போது இஸ்லாம் மார்க்கந்தான் அதற்குத்தக்க விடையளித்து ஸ்திரமாய் நின்று விஞ்ஞான எதிர்ப்பை அகற்றிவருகின்றது.

சைன்ஸின் தற்கால அபிவிருத்தியால் இஸ்லாத்தைத்தவிர ஏனைய எல்லா மதங்களும் வீணானவையெனவும், பிரயோஜனமற்றவையெனவும் நிரூபிக்கப்பட்டுவருகின்றன. அதனால் இஸ்லாத்தின் வதனம் மிக்க வனப்பாகயிருப்பதுடன் சைன்ஸுடையவும், தத்துவக்கலைகளுடையவும் நூற்றுக்கணக்கான வல்லுனர்களுக்குதனது அந்தரங்கபகிரங்கஉண்மைகளின் ஜோதியைக் காட்டி தன் பக்கல் ஈர்த்து அவர்களைத் தனது அடியார்களாகச் செய்துகொண்டு வருகின்றது. இவ்வுண்மையை நிரூபிப்பதற்கு தற்கால நாகரிகம் மிகைத்துள்ள ஐரோப்பாவிலேயே நூற்றுக்கணக்கான உதாரணங்கள் சாக்ஷிகளாகயிருக்கின்றன. சுயமே இஸ்லாம் பரவிய அந்த இடங்கட்கு ஆதியில் இஸ்லாமிய வாதிகளோ, பிரசாரகர்களோ, போதர்களோ சென்றது கிடையாது. ஆனால் இஸ்லாம் மதமானது தனது தெய்வீக உன்னதத்தை வெளிப்படுத்தியே மக்களை தனது பக்தர்களாகச் செய்துகொண்டது. இன்னும் இஸ்லாமானது தத்துவக்கலைகளில் கியாதிபெற்று விளங்கிய நூற்றுக்கணக்கான வல்லுனர்களையும் தன் தாசர்களாகச் செய்துகொண்டது. இத்தகைய அறிஞர்கள் எத்தகையவர்களெனின், தங்கள் வாழ்நாளின் பெரும்பாகத்தினை விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே செலவிட்டவர்களும், தங்கள் அரிய காலத்தை அவ்விஞ்ஞான சிக்கல்களை துலக்குவதிலேயே கழித்தவர்களுமாவர். இஸ்லாமே சத்தியமும் இயற்கையுமான மதமென்பதற்கு இவ்விளக்கமான ஆதாரங்களே போதுமன்றோ? இஸ்லாமே சத்திய சன்மார்க்கம்,

அதுவேதெய்வீகமதம் என்பது மேலே கூறப் பெற்றவைகளில்னின்று நன்கு புலனாகவில் லையா? இவ்விஷயங்களை உணர்ந்தபின், புத்தி சாதுர்யமும் நுண்ணறிவுமுள்ள எவருக் கேனும் இஸ்லாம் ஆண்டவனிடம் ஒப்புக் கொள்ளப்பெற்ற மதம் என்பதில் ஆக்ஷே பனை யிருக்க முடியுமோ? ஒருபோதுமில்லை.

இவ்வுலகின் கண் தற்காலமுள்ள மதங் களில் பொதுவாய் ஏதேனுமொரு மதம் தனது பரிசுத்த மூலக்கொள்கைகளை கொண் டும், சீரான சட்டதிட்டங்களை கொண்டும் கண்ணியம் பாராட்டிக் கொள்ளலாமாயின் அப்பெருமை இஸ்லாம் மதம் ஒன்றிற்கு மட்டுமே தான் உண்டு, ஏனெனின் இஸ்லாம் மதமானது தனது பரிசுத்த-தூயதன்மையின் காரணமாகவே மிகச் சொற்ப காலத்துக்குள் உலகமனைத்தையும் அடைய வளைந்துகொண் டது. தவிர அவ்விஸ்லாம் மதம் உலகத் தோர்க்கு மனித இயற்கைக்கு ஏற்ற முறை யில் விளக்கமான தத்துவங்களைப் போதித்த காரணத்தினால் அப்போதனைப் பிரகாச ஜ்வாலையினால், உலகின் கண்ணுள்ள சர்வ பொருட்களும் ஜோதிமயமாய் இலங்கின வென்பது உண்மையாகும். இஃது முற்றும் உண்மையேயன்றிமிகைப்பட கூறியதாகாது.

இவ்வுலகின் கண் இஸ்லாத்தின் ஜோதி பர வாத எந்த ஒரு தேசத்தையும் காணமுடி யாது. உலகத்தின் ஒவ்வொரு பகுதிகளி லும், ஒவ்வோரிடங்களிலும் இஸ்லாம் மதத் தின் ஜோதி பரவியே யிருக்கின்றது என்பது துணிபு. இதுவன்றி இஸ்லாத்தின் இனிய ஓசை ஒலிக்காத ஒரு சிறு பூபாகமுங் கிடையாதென்றே திண்ணமாய்க் கூறலாம்.

இஸ்லாத்தின் உவந்த மூலக் கொள்கை களில் "தவ்ஹீது" (ஆண்டவனை ஓர்மை படுத்திவைப்பது) ஒரு பிரதான கொள்கை யாகும். இஃது இஸ்லாத்தின் உயிர் நாடி யாய் விளங்கும் முக்கிய கடமையாகும். உண் மையில் தவ்ஹீதே இஸ்லாத்தின் உயிராக இருக்கின்றது. (இதைப்பற்றி கீழே விளக் கிக் கூறுவோம்:—)

இஸ்லாத்தின் மூலக்கருத்தானது ஆண்ட வனை ஓர்மைப்படுத்துவதாகும். இந்த தவ் ஹீதுடைய பாக்கியத்தினால் தான் இஸ்லாம் மதம் ஏனைய மார்க்கங்களை காட்டினும் தனிச் சிறப்புடையதாயிருக்கின்றது இந்த ஒருஅரிய அம்சம் இதர மதங்களில் இல்லாமலும், அப் படியிருப்பினும் மிக அற்பமாகவும் தானிருக் கிறது.

தவ்ஹீதென்னும் ஏக தெய்வத்துவக் கொள்கையின் பிரசாரத்திற்கென்றே உலக சிருஷ்டிகர்த்தனாகிய ஆண்டவன் தனது நல் லடியார்களாகிய நபிமார்களை (அலை.) இத்தர ணியின்கண் அனுப்பிவைத்துவந்தான். இது காறும் எத்தனை தீர்க்கதரிசிகளும், திருத் தூதர்களும் இவ்வுலகத்துக்கு விஜயம் செய் திருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோரும் ஏக தெய்வத்துவத்தையே பிரசாரம் செய்வ திலும் அக்கொள்கையே பரத்துவதிலும் ஈடு பட்டிருந்தார்கள். இதுதான் அவர்கள் நமக் குக் காட்டிச்சென்ற அழகிய முன் மாதிரியா கும். ஆகவே, தவ்ஹீதைப் பிரசாரஞ் செய்வ தும் அதை மக்களிடையே பரத்துவதும் ஒவ் வொரு முஸ்லிமின்மீதும் கடமையாகும். இத் திவ்விய நோக்கத்திற்காகவேதான் ஆண்ட வனது திருமொழிக் கிரந்தமாகிய பரிசுத்த குர்ஆன் ஷரீபும் அருளப் பெற்றிருக்கின்றது.

இஸ்லாத்தின் மற்றொரு முக்கிய கொள்கை நபித்துவத்தை யொப்புக் கொள்வதாகும். இவ்விரு மூலக் கொள்கைகளின்மீது தான் சன்மார்க்கம் அஸ்திவார மிடப்பட்டிருக் கின்றது. இவ்விரண்டைத் தவிரஉள்ள விஷ யங்கள் யாவும் அவ்விரண்டின் உபகரணங் களும், பிரிவுகளுமாகும்.

எனவே, பொதுவாக எந்த ஒரு மதத்தில் மேற்கூறப்பட்ட இருமூலக் கொள்கைகள் பூரணமாய் காணப்படமாட்டாதோ, அல்லது அவை மிக அற்பமாய் காணப்படுமோ அப் படிப்பட்ட மதம் பின்பற்றத் தகுதியில்லாத தாகும். அஃது ஒரு பொருட்டாக மதிக்கத் தக்கதுமல்ல. அத்தகைய மதத்தை மனி தன் பின்பற்றவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப் படவுமில்லை. உலகமெங்கும் அடையவளைந் துள்ள மதம், இஸ்லாமாயிருக்க, இதனை விட்டு வேறு மார்க்கத்தை பின்பற்றித் திரிவ து ஆண்டவனது இயற்கைத் தத்துவத்துக்கு முரண்புரிவதாகும் அச்செயல் ஆண்டவனது தத்துவக்கட்டளைக்கு மாறு செய்வதும், இறைவனால் சன்மானமாக அளிக்கப்பெற்ற பாக்கியத்தைநிராகரிப்பதற்குள்ளபாவத்தை பெற்றுக்கொள்வதுமாகும். எவனொருவன் இவ்வாறான தீயஎண்ணங்கட்கு இலக்காவனோ

அன்னவன் கடுந்தண்டனைக்கும், வேதனைக்கும் உரியவனுவான். இதற்காகவேதான் இஸ்லாத்தின் பரிபூரணம் நிறைந்த வேதமாகிய குர்ஆன்—அதாவது உலகமனைத்துக்கும் சிறந்த கிரந்தமாகிய நந்திரு வேதம்—பின்வருமாறு மனித கோடிகளுக்கு விவரித்துக்காண்பித்து எச்சரிக்கை செய்கின்றது:—

"எவனேருவன் இஸ்லாமல்லாத ஏனைய மார்க்கத்தைத் தேடிகோள்கின்ருனே, அவன் (பின்பற்றும்)மார்க்கம் அவனிடமிருந்து ஒப்புக்கோள்ளப்படமாட்டாது. அப்படிப்பட்டவன் இறுதிநாளில் நஷ்டமடைந்தவனுவான்"

உலகத்தின் ஏனைய மதங்களைகாட்டிலும் இஸ்லாம் மதம் கண்ணியம்பெற்றுத் திகழ்வது தவ்ஹீதின் மகிமையினுலேயேயாகும். தவ்ஹீதுதான் இஸ்லாத்தின் சீரிய அம்சமாகவும், அதுவே இஸ்லாத்தின் தனிச்சிறப்பின் அடையாளமாகவு மிருக்கின்றது. தவ்ஹீதுதான் இஸ்லாத்தை உலக மதங்களெல்லாவற்றைவிடச் சிறந்ததாக ஆக்கிவைத்திருக்கிறது. தவிர தவ்ஹீதுதான், இஸ்லாத்தை ஒப்புக்கொண் டொழுகுபவர்களை, ஆன்மார்த்த முன்னேற்றமடைந்தவர்களின் முன்னிலையில் சிறப்பாய் நிற்கவைக்கின்றது. ஆகவே, நாம் ஆண்டவனை தூய்மைப்படுத்தி ஒர்மையாக ஆக்கிவைப்போமாக

நஞ்சிறூர்கட்கு.

தன் சகாயமே தனக்குச் சிறந்தது

அன்புக்குரிய அருமை இளஞ் சிறுவர்காள்!

நீங்கள் "ஹாத்திம் தாயி" என்னும் பெயரை நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பெரிய செல்வந்தப் பிரபுவாயிருந்ததுடன், தனது செல்வமனைத்தையும் ஏழை எளியோர்களின் உதவிக்காகவே தருமஞ்செய்துவிட்டாரென்னும் பிரஸ்தாபம் பலமாய் உலகினிடை பரவியிருக்கின்றது. அவருடைய தானதருமக் கொடையால் அக்காலை ஒவ்வொருவரும் பிரயோஜன மடைந்ததுடன் அவ்வள்ளலைவாழ்த்திச் சென்றுர்கள்.

சிறுவர்களே! ஏழைகட்குதான் பணத்தின் அவசியம் அதிகம் ஏற்படுவது சகஜமாகயிருந்து வருகிறது. அங்ஙனமிருக்க மிக மிக ஏழ்மை நிலையிலிருந்த ஒருவர் அம்மா பெருங்கொடையாளரான ஹாத்திம்தாயீயின் சொத்தில் ஒரு பைசாக்கூட பெற்றுக்கொள்வதற்கு இச்சிக்காமல் சுயமே சம்பாத்தியஞ்செய்து வாழ்வதையே சிறந்ததெனகருதி கண்ணியமாய் நடந்துகொண்டவரின் வரலாற்றை உங்களுக்கறிவிக்கின்றேன். அஃதாவது:—ஒரு நாளன்று கொடைவள்ளலான ஹாத்திம்தாயீ தமதழகிய அரண்மனையிலிருந்துகொண்டு நித்திய வழக்கம்போல் ஏழை எளியோர்கட்கு தம் செல்வத்தை அள்ளிக்கொடுத்து தானம் புரிந்துகொண்டிருந்தார். அதுசமயம் அங்கு அவரது நேசர்களுள் சிலர் கூட இருந்தனர். ஹாத்திம் தாயீயின் தாராள சிந்தை, பரோபகாரம், பரந்த நோக்கம் ஆகியவைகளைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்து வியப்புற்று அவ்வள்ளலை நோக்கி, "ஹாத்திம் அவர்களே! இவ்வுலகில் தங்களை விட அபரிமிதமான தியாகஞ் செய்த புண்ணியவானையோ; உத்தமப் புருடரையோ தாங்கள் இதுகாறும் எங்கேனும் கண்டதுண்டோ?" என்று வினவினர்.

அதற்கு ஹாத்திம்தாயீ புன் சிரிப்புத்தவராய் "ஆம்; கண்டுள்ளேன்," என்ருர். இது கேட்டு அங்கிருந்தவர்களில் ஒருவர் ஆச்சரியமுற்று அன்னவர் யார் என்று விளக்குமாறு கோருகின்றேன் எனக் கேட்டார். அதற்கு ஹாத்திம் தாயீ பின்வரும் வரலாறென்றை கூறலானர் :—

"நண்பரே! ஒருநாளன்று யான் நாற்பது ஒட்டகங்களைக் குர்பானி செய்து நல்லுணவு சமைப்பித்து நூற்றுக் கணக்கான ஏழை எளியோர்கட்கும், பசித்தோர்கட்கும் பொது விருந்தளித்தேன். எனவே பலநூறுக் கணக்

கான மக்கள் வந்து திருப்தியாய் உணவு புசித்துவிட்டும் இஷ்டப்படி எடுத்துக்கொண்டும் போயினர். அன்றைய தினம் யான் ஓர் அராபியப் பெரியத் தலைவருடன் வனத்துக்குச் சென்றேன். அங்கொரு ஏழையாகிய பலஹீனப் புருடரொருவர் விறகுக் குச்சிகளை கஷ்டப்பட்டு ஒடித்து வந்து ஒரு இடத்தில் சேகரித்துக் கொண்டிருந்தார். அன்னவர் மெலிந்த தேகியாக யிருந்தமையால் அப்பிரயாசையில் அவருக்கு மகாக் கஷ்டசங்கடம் ஏற்படுவதுபோல் தோற்றிற்று. எனினும் அவர் தன் முயற்சியிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். யான் அவரருகே சென்று 'சோதர! நகரத்தில் ஹாத்திம் தாயீ என்பவருடைய வீட்டில் பொதுவிருந்தளிக்கப் படுகின்றதே! நீவிர் அங்கு சென்று பசியாற உண்டு வாராமல், இங்கேன் இவ்வாறு கஷ்டப்பட்டு விசாரமடைந்து கொண்டிருக்கின்றீர்? நீர் கஷ்டப்பட்டு சம்பாத்தியம் செய்யவேண்டிய அவசியமென்ன? ஹாத்திமிடம் கேட்பீராகில் அவர் உமக்கு திரவியங்களை அதிகமாய் அளிப்பார். ஏனெனில் அவரது சன்னிதானத்தில் தினந்தோறும் சாப்பாடும் திரவியங்களும் தானமாக வழங்கப் பெறுகின்றன. ஆதலின் நீரும் அங்கு சென்று வாங்கி வருவீராக! அந்த புண்ணியவான் எளியவராகிய உமக்கு நிச்சயம் கொடையளித்து உன்னை நன்னிலைப் படுத்துவார்'' என்று சொன்னேன். அதற்கந்த விறகு பொறுக்கும் பலஹீனர் என்னை நோக்கி சிறித்து "அய்யனே! யான் இந்த எளிய நிலையில் மிகச் சந்தோஷமாகவே தானிருக்கின்றேன். ("தன் கையே தனக்குதவி" என்பதே போல்) எனக்கு என் சுயமுயற்சியே சிறந்த சகாயமா யிருக்கின்றது. அம் முயற்சியைக்கொண்டு எனக்கு வேண்டியதையானே தேடிப் பெற்றுக்கொள்ள முடியும். என் கையுங் காலும் க்ஷேமமாயிருந்து, என்மெலிய தேகத்தில் சொற்ப சக்தியேனுமிருக்கும் வரை ஹாத்திம்தாயியிடம்சென்று கையேந்தி யாசகம் கோர எனக்கு சிறிதும் ஆவசியகமில்லை. ஹாத்திம்தாயீ பெரிய செல்வந்தப் பிரபுவாயிருந்தால் அஃது அவர் வீடுவரைக்குமிருக்கட்டும். யான் இந்த காட்டுக்கு அதிபனாகயிருக்கிறேன். அவர் அளிக்கும் உருசியுள்ள உணவும், தானதருமங்களும் எனக்கு அவசியமில்லை. எல்லாம் வல்ல ஆண்டவனின் கருணையும் நித்திய அற்ப உணவும், கிழிந்த பழைய இவ்வுடைகளுமே எனக்குப் போதும்!'' என்று கூறிவிட்டு விறகு பொறுக்கி எடுத்துச்சென்று விற்று ஜீவனம்சம் புரியும் தம் பிரயாசையில் மீண்டும் அவர் ஈடுபட்டுவிட்டார். இவர்தான் என்னைவிட மிகப் புண்ணியசாலியும் உத்தமருமாவார்'' என்று கூறினர்.

'அருமைச்சிறுர்காள்! தன் கையே தனக்குதவியென்றும், சுயமுயற்சியினலேயே கவுரவ ஜீவனம் புரிபவன்தான் சிறந்தவனென்றும் அவ்வாறு நடந்துகொள்பவன் தான் தன்னைவிட சிறந்த புண்ணியசீலனெனவும் அக்கொடைவள்ளலான ஹாத்திம்தாயீ கூறிவிட்டார். உண்மையில் இவ்வாறு நடந்துகொள்பவர்தான் உத்தமரும், பக்தியாளரும் சிறந்தவருமாவர் இவ்வுலகில் சுயமுயற்சியும், சொந்த சம்பாத்தனையும் தான் சிறந்த சாதனமாகும். பாடுபட்டுழைத்துத் தேடிப் புசிப்பவனை உலகம் போற்றும். கையை கட்டிக்கொண்டு சோம்பலுற்று உட்கார்ந்துகொண்டு பிறர் பொருளுக்கும் உணவுக்கும் வழி பார்ப்பவனைவிட இழிவானவன் உலகில் யாருமில்லையெனலாம். சதா சோம்பேறியாய் பிறர்ப் பொருளுக்கே ஆசை கொண்டவனைய் அலைவோனை விசுவசிப்போர் யாருமில்லை!

பரோபகாரம், தானதருமம், விருந்தோம்பல் முதலியன புரிதல் சிறந்த புண்ணியக் கைங்கரியமேயாகும். கைகால்களில் சத்தியில்லாதார்க்கும், அனாதைக் குழந்தைகட்கும், பட்டியினல் வாடுவோர்க்கும், உடையற்ற பரம ஏழைகட்கும் இயலாதார்க்கும் தேவைப் படுவோர்க்கும் உணவு உடையளித்தாதரவு புரிவது அவசியமேயாம். ஆனல் காற் கரங்கள் பலமுடையதாயும், தேகம் கட்டுடையதாயு மிருந்து தன் காரியத்தைத் தானே கவனித்துக் கொள்ள சக்தி பெற்றிருந்தும் யாஸகம் பெறுவதையே தொழிலாய்க் கொண்டு திரியும் தடியர்கட்கு உணவு உடையளித்து ஆதரிப்பது அவர்களை முழுச் சோம்பேறிகளாக்கி ஊர்த்திரியும்படி செய்வதற்கு உற்சாகப்படுத்துவதாகும்.

சிறுவர்காள்! எவனொருவன் கைகால் உடல் இவைகளில்பலமிருந்தும் யாஸகம்பெற்றுண்ணுகிறுனே அவனே இழியவனென்பதையும், சுயமே உழைத்து, பிறர்தாக்ஷண்

ணியம் பாராது பாடுபட்டுண்பவனே சிரேஷ்டனென்பதையும் நீங்கள் தெரிந்துகொண்டீர்களன்றோ? ஆகவே, இனி நீங்கள் சுயமுயற்சியின் மீதே நிலையாய் நிற்றல் வேண்டும். உடல் வலிமை யிருக்குங் காலமெல்லாம் பிறர் சகாயங் கோரலாகாது. "தன் கையே தனக்குதவி, முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார், தன் சகாயமே தனக்குச் சிறந்த" தென்னும் படிப்பினையை இதிலிருந்து பெற்று புத்திசாலிகளாய் வாழ்ந்து உய்வீர்களாக. எவனொருவன் தனக்குதானே சகாயம் செய்துகொள்ளாது இதரர்களின் முன்பாக கையை நீட்டி யாசகம் புரியும் தொழிலை மேற்கொண்டிருக்கின்றானோ அவனுக்கு உரோஷமும் மனிதத் தன்மையுமிராது. இவ்விரண்டு அம்சங்களும் எவன்பால் காணப்படமாட்டாதோ, அன்னோன் மனிதனென தன்னைச்சொல்லிக் கொள்வதற்கு தகுதியற்றவனாவான்.

மாதர் பகுதி.

(ஸ்ரீமதி ஸரஸ்வதி தேவி வரைவது)

நம் சகோதரிகளில் பலர் தங்களது கணவர் மீது குறை கூறிக்கொண்டிருப்பதைக் கேட்டிருக்கின்றேன். அவ்வாறு குறைகூறிக் கொண்டிருப்போர் இவ்வுலக வாழ்வில்புருடரில்லாமல்ஏதேனுமொரு காரியத்தை சாதிக்க முடியுமா? என்பதை அவர்களிடம் கேட்கின்றேன். எந்தப் பெண்ணேனும் புருடனில்லாது எக்காரியத்தை யேனும் சாதித்துள்ளாளென்று எந்தச் சரித்திரத்திலேனும் காணப்படுகின்றதா? ஒரு வண்டியினமொத்த இரு சக்கரங்களும் சமமாக யில்லாது எங்ஙனம் ஓடாதோ. அவ்வாறே கணவனும் மனைவியும் மனமொத்து நடந்துகொள்ளாவிடின் உலகவியலும், இல்லக் காரியங்களும் ஒரு சிறிதும் ஒழுங்காய் நடைபெறாது.

வண்டியின் இருசக்கரங்களும் சமமாயிருத்தலைபோல், மனைவியும் கணவனும் சமத்துவமாயிருக்க வேண்டுமென்பதற்கு சில பெண்கள் குதர்க்க அருத்தங் கொள்கின்றனர். அதாவது,புருடரைப்போல் சம சுயேச்சைப் பெறவேண்டுமென்பதாகக் கூறி புருடன் வீட்டைவிட்டு வெளியே போனால் மனைவியும் அவ்வாறே செல்ல வேண்டுமென்றும், கணவன் பத்து ரூபாய் செலவிடுவானாயின் மனைவியும் அவ்வாறே செலவிடல் வேண்டுமென்றும், சிலமணி நேரம் புருடன் வீட்டுக்கு வராதிருந்தால் மனைவியும் அவ்வாறே வீட்டுக்கு வராதிருக்க வேண்டுமென்றும்,கணவன் அன்னியர்களுடன் கலந்துறவாடினால் மனைவியும் (மானமிழந்து) அன்னியரோடு கலந்துறவாட வேண்டுமென்றும் கூறி தான்றோன்றித் தனமுள்ள பெண்கள் முரண்வாதம் புரிகின்றனர். இஃது அதன் உண்மைக் கருத்தன்று.

கணவனும் மனைவியும் சமத்துவம் பூண்டிருத்தல் என்பதின் உண்மையான பொருள் யாதெனின், "மனைவியானவள் கணவனுடைய சகல கட்டளையையும் சிரமேற் றாங்கி நடப்பதுடன், அவனது உலகார்த்தக் காரியங்களில் உற்றத்துணையா யிருந்து சகாயம் புரிவதுடன்,அவனது சுக துக்க மிரண்டிலும் சம பங்கு கொடுத்துக் கொண்டு ஒத்துவாழ வேண்டும்" என்பதாகும்.

பொதுவாகக் குடும்ப வியவகாரங்களில் சிக்கன வாழ்வு புரிதல், அக்காரியங்களை இலேசான விதத்தில் நடத்தல்போன்ற விஷயங்களில் ஆடவர்கட்கு அதிக அனுபவமிருப்பதில்லை. ஆதலால், அவ்விஷயங்களில் பத்தினியானவள் தன் பர்த்தாவுக்கு இதமான வழியின்னதென எடுத்துக் கூறி,இராஜனுக்கு மந்திரி ஆலோசனைக் கூறுவதே போன்று கூறி உபகாரம் புரிதல் வேண்டும். அத்துடன் குடும்பச் சிலவு விஷயத்திலும் சிக்கனத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தினரின் நன்னடத்தைக்கும் துஷ்கிருத்தியத்திற்கும் வீட்டு மனைவியே காரண பூதராகின்றாள் என்று கூறப்படுகின்றது. "இல்லத்து மாதொருவள் ஊசிமுனை யத்துணை ஒழுங்கற்று நடந்து கொள்வாளாயின் அக்குடும்பத்தில் மலையத்துணை கெடுதல்கள் நேரிடு" மென்னும் முதுமொழி பொன்மொழியாய் விளங்குகின்றது. ஏனெனின், வீட்டுப் பெண்பிள்ளைகள் எவ்விஷயத்தையும் பொருட்படுத்தாது நடந்து வருவதினுடையவும், வீண் டம்பச் செலவு செய்வதினுடையவும் துற்குணமானது புத்திர புத்திரிகளில் தோன்றிவிடுகின்றது. ஆகவே, தாயின்பால் காணப்படும் துற்குணம், துற்நடத்தை, தான்தோன்றித்தனம் ஆகிய தன்மைகள், யாவும் அவளுக்கு ஜனிக்கும் மக்களிலும் ஊடுருவி அமைந்துத் தாண்டவமாடுவதை உலக வாழ்க்கையில் கண் கூடாய் காண்கின்றோம். ஆகவே வீட்டுக் குடும்ப விஷயத்தில் பிரதான வழி காட்டியாயிருப்பவள் தாயேயாம்.

மேலும், ஒரு கணவனுக்கு நல்லறிவும் ஞானமுள்ள உத்தமி மனைவியாக அமைந்து விடுவாளாயின், அக்கணவனின் வாழ்க்கை இன்பமாக அமைந்துவிடும். இஃதன்றி துற்குணமுள்ள ஒரு துஷ்டி மனைவியாய் வாய்ப்பாளாயின் இல்வாழ்க்கையானது அக்கணவனுக்கு நரக வேதனைப்போல் தோற்றும்.

புருஷன் கெட்ட நடத்தையும் துற்குணமுமுடையவனாயிருந்தபோதிலும் அவனை உத்தம மனைவியானவள் தன் சாதுரியத்தால் எளிதில் சீர்திருத்தி உத்தமனாக்கிவிட முடியும்.

நிற்க, கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டை சச்சரவு எதற்காக ஏற்படுகிறதென்பதுதான் எனக்குப் புலனாவதில்லை. எதனால் சச்சரவு ஏற்படுகிறதென்பதை ஆழ்ந்து சிந்தித்து கவனிக்குங்கால் அக்காரணங்களில் 100ல் 80 பெண்களின் தவறினாலேயே ஏற்படுகிறதைக் காண்கின்றேன். அஃதாவது மனைவி தனக்கு நல்ல ஆபரணம் இல்லை, உயர்தர உடையில்லை, பொருளில்லையென்று கணவன்பால் அவிவேகத்தால் வீண் தொல்லை தருவதாலேயே ஏற்படுகிறதென்பது உலக அனுபவமாகும். நகைக்காகவும், உடைக்காகவும் பணத்துக்காகவும், தன் உற்ற கணவருடன் போராடும் பெண்களின் நடத்தை மௌட்டிகமும், அவிவேகமும், மூடத்தனமுமுடையதாகும். நகை யுடைகளெல்லாம் பெண்டிர்க்கு வெளிப்படையான பகட்டைத்தருவனவேயல்லாது, மனப் பரிசுத்தத்தையும் தூய வாழ்வையும் தருவனவாகாது. அவர்களுக்கு நகையும் உடையும் புருஷன் தான். உண்மையில் பெண் தன்மையில் மிளிரவேண்டிய குணங்களாகிய மனமொத்திருத்தல், பர்த்தாவுக்கு வழிப்பட்டு நடத்தல், கடுஞ் சொற்களை சகித்துக் கொள்ளல், நற்சுபாவம், நன் நடத்தை, குடித்தனப் பொறுப்பு, சிக்கன வாழ்வு, ஆகியவைகள் தான் அவர்களை அழகுபடுத்தி வைப்பனவாகும். இவைகள்தான் பெண் பாலார்க்கு சீரிய ஆபரணங்களாகும். இவற்றினால் தான் நல்வழியும், நற்கதியும் அவர்கள் பெறமுடியும்.

கணவனுக்குக் கோபம் எழுந்துள்ள சமயத்தில் எதிர்த்து வாயாடும் பெண் கொடும் நீலியாவாள். அப்படி ஏதேனும் சொல்ல வேண்டுவதாயின் கோபந்தணிந்தபின் எடுத்துக்கூறினால் அவசியம் அதனை கணவன் ஏற்று இதப்படி நடந்துகொள்வான். முக்கியமாக பெண்கட்கு சகிப்புத் தன்மையும், தெய்வ பக்தியும், ஒத்தமைந்த மனமும், அத்தியாவசியம் வேண்டற்பாலதாகும்.

நிற்க, கணவன்மீதும், மனைவிமீதும் பல கடமைகள் இல்லற வாழ்க்கையில் அமைந்து கிடக்கின்றன. அதாவது, பிள்ளைகளை ஒழுங்கானவிதத்தில் சம்ரக்ஷித்தல், கல்வி போதித்தல், நற்குண-சத்தொழுக்கம் புகட்டல், இனியோபதேசம்புரிதல், ஆகியகடமைகள் தம்பதிமார் இருசாரார்மீதும் கடமையாக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் முக்கியமாய் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தாய்க்கே அபரிமிதமாயிருக்கின்றது. தம் பெண்கட்கு கல்விக் கற்பித்து வைப்பதுடன் கல்விகற்றுள்ள மாப்பிள்ளைக்கே மணம்முடித்துக் கொடுக்கவேண்டும். பணத்துக்கோ, பெருமைக்கோ ஆசைப்பட்டு படிக்காத மூடனுக்கு பெண்மகவை மண முடித்து விடுவது இருவர்க்குமிடையே எப்போதும் சண்டைச் சச்சரவு மூண்டு கொண்டிருக்க வழிகோலுவதாகும். செல்வந்தப் பிள்ளைக்கு ஏழைப்பெண்ணை மண முடிப்பதாலும், ஏழைப்பிள்ளைக்கு செல்வந்தப்பெண்ணை மணமுடித்து வைப்பதாலுங்கூட இருசாராரி

னும் சச்சரவை மூட்டிவைப்பதாய் விடுகிறது. ஆனல், இத்தகைய நிலையிலும் இருசாராரும், அல்லது இருவரில் ஒருவரேனும் நற்குண—கல்வியறிவு ஞான அனுபவ முடையவர்களாயிருந்தால் இருசாராரும் மனமொத்து நடந்துகொள்ள வழி ஏற்படும்

வீட்டில் தன் குமார்த்தி பருவமடைந்து விடுவாளாயின் தாயானவள் தான் சிங்காரித்துக்கொள்ளல், ஆடம்பரஞ்செய்து கொள்ளல் ஆகிய வழக்கங்களை விட்டொழித்தல் வேண்டும். தாயானவள் சாதாரணவாழ்க்கையையும், நல்லொழுக்கத்தையும் மேற்கொண்டிருந்தாற் முன் குமார்த்திகளும் அவ்வம்சங்களைகிரகித்து உத்தமிகளாக விளங்குவர். மேலும் மணமுடிக்கப்படும் மாமியகத்திலும் கணவனுக்கும், மாமிக்கும், நாத்திக்கும் மனங் கோணுதவாறு இதமாக நடந்துகொள்வள்.

பெண்கள் வயதடைந்தவர்களாக யிருக்கும் நிலைமையில் மருகிமார்கள் வந்து விடுவார்களாயின் மிகவும் புத்திசாலித்தனமாகவும், நியாயமாகவும் நடந்துகொண்டு மகளுக்கும் மருமகளுக்குமிடையே பாரபக்ஷம் காட்டாது இருவரையும் இருகண்களைப்போல் பார்த்து நடத்துவதுதான் புத்திசாலியான குடும்பத் தலைவியின் கடமையாகும். இதை விட்டு புத்திரிமீது பக்ஷமும் மருமகள்மீது துவேஷமுங்கொண்டு வேற்றுமையாய் நடத்துவதானல், மாமிமருமகள் சண்டையும், மருகி நாத்தி சண்டையும் தாய் - பிள்ளை சண்டையும் சர்வ சாதாரணமாய் தானே ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே கணவனுக்குட்பட்டு நடந்துவரும் பதிவிரதையானவள் இத்தியாதி விஷயங்களையும் அனுசரித்து, புருஷன், மாமி, நாத்தி இவர்களுக்கு தக்கவாறு நடந்துகொள்வள். தன் மகளைவிட மருமகளை பக்ஷமாய்பாராட்டும் குடும்பத்தில் மாமி, மருகி, மகள் மகன் ஆகிய எல்லோரின் ஏகோபித்த சமரஸ சந்தோஷ வாழ்க்கை நிலவி சர்வசுகத்தின் நமூனுவாய் விளங்கும். இச்சமரஸ வாழ்வே நம் பெண்மணிகட்கு எஞ்ஞான்றும் வேண்டற்பாலதாகும். இதுவே குடும்பக்ஷேமச் சாதனமாகும்.

வருங்கால யுத்த முஸ்தீபுகள்.

இதுகாலை உலகமெங்கும் விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னேற்றங்களும், புதுப்புது நவநாகரிக அபிவிரித்திக்குறிய சாதனங்களும் மிக மலிந்துக் கிடப்பதோடில்லாமல், வருங்காலக் கொடிய யுத்தத்திற்காகவும் பல பயங்க்ரமான நாசகாரிப் பொருள்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் காரணமாய் அடுத்துவரும் மகா யுத்தத்தில் உலகத்திற்கே பெருந்தீங்கு விளையுமென அஞ்சப்படுகின்றது. விதவிதமான ஆயுதங்களைக் கொண்டும், விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளைக் கொண்டும் மனித வர்க்கத்தையும் அரண்களையும் அழித்தொழிப்பதற்கான பல்வகை சாதனங்களும் தயாரிக்கப்பெற்று வருகின்றன.

இதுகாலை விஞ்ஞானசாஸ்திர மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாசகாரிக் கருவிகளிலெல்லாம் மிகக் கொடியதும் அபாயகரமுமானது பற்பலவித "விஷப்புகை"களே யாகும். இத்தகைய விஷப்புகை சென்ற மகாயுத்தத்திலும் கையாளப்பட்டதுண்டு. இச்செயன் முறையால் மக்கள் பல்லாயிரக்கணக்காய் கிருமிகளைப்போல் மாளவேண்டிய தேற்படுவதால், எந்த அரசாங்கமும் இனி யுத்தத்தில் அவ்வாறுன விஷப்புகையை உபயோகித்தல் கூடாதென்று சர்வதேசசங்கம், வல்லரசுகளைக் கேட்டுக்கொண்டது. எனினும் விஞ்ஞான அபிவிருத்தி அதிகரித்துள்ள இந்நவநாகரிக மிகுந்த இக்காலத்தில் அவ்வுபதேசத்திற்குக் காது தாழ்த்துபவர்கள் யாரிருக்கின்றனர்? இதை எவர்பொருட்படுத்தப் போகின்றனர்?

நிற்க, அமெரிக்காவின் "கெமிக்கல் பௌண்டேஷன்" சபைத் தலைவர் ஓரிடத்தில் பேசும்போது கூறியிருப்பதாவது:—உலகத்துக்கு இனி அதிகமான படைகள் வேண்டுமென்ற அவசியங் கிடையாது. இனி யுத்தம் நடைபெறுங்கால் அறிவையும், விஞ்ஞானத்தையுந் தான் அதிகஞ் செலவிடவேண்டிவரும். எந்த தேசத்தார் உயர்தரபுத்தியும் நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சியு முடையவர்களா யிருப்பரோ, அன்னோர் தான் வருங்

கால யுத்தத்தில் ஜயமும், நலமும் பெறுவர் என்று நம்பப்படுகின்றது. எனவே விஷப் புகைப் பரத்துவதிலும், மிகமிகக் கொடிய விஷத்தை உபயோகிப்பதிலும் அதிக ஆராய்ச்சியும் அறிவாற்றலு முடையவர்கள் தான் மற்றோரை காட்டினும் முன்னணியில் நின்று ஜயமுங் கீர்த்தியும் பெறக் கூடும்.''

இதுகாலை உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவையும் இரசாயண முறையை யொட்டியதாய்ச் செய்துவிட வேண்டுமென்ற இயக்கம் தோன்றியிருக்கின்றது. அதாவது, மனித வாழ்க்கைக்குரிய ஒவ்வொருவிஷயமும் ரசாயண மூலமாகவே முயற்சிக்கப் பெற்றுவரும். மனிதர்களை அழிக்கக்கூடிய விஷப்புகைகள் சென்ற மகாயுத்தம்வரை முப்பது வகைகள் தான் கண்டுபிடிக்கப் பெற்றிருந்தன. தற்காலத்திலோ எழாயிரத்திற் கதிகமான அத்தகைய விஷப்புகைவகைகள் கண்டுபிடிக்கப்பெற்றிருக்கின்றன.

மனிதர்களை அழிக்கக்கூடிய விஷப்புகை நிறைந்த பீப்பாக்கள், குழாய்கள் முதலியவைகளை உலகத்திலுள்ள ஒவ்வொரு வல்லரசும் தன்னால் கூடுமான அளவு இரகசியமாகவே சேகரித்து வைப்பதுடன், உலகத்தில் நாசத்தை உண்டுபண்ணக்கூடிய பற்பலவகை விஷப்புகைகளின் செயன் முறையையும் கண்டு பிடித்து அவைகளை மிக்க இரகசியமாவே வைத்திருக்கின்றன.

இத்தகைய எதிர்கால யுத்தத்தில் அமெரிக்காதான் மிக பலம்பொருந்தியதாக யிருக்குமாம். அமெரிக்காவில் ஆங்குள்ள வாலிபர்கள் தான் இவ்விஷயங்களில் இரவுபகலாக ஈடுபட்டுழைத்து வருகின்றனர். அவர்கள் இத்தகைய விஷயங்களை விஞ்ஞான சாஸ்திர மூலம் கண்டுபிடிக்க தங்கள் சொந்தப்பொருளையே செலவுசெய்து அநேக விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். மற்ற தேசங்களிலும் பல நாசகாரிப் பொருள்களை கண்டுபிடிக்க பற்பல ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இஃதல்லாமல் கொடிய விஷ ஆவிகளினின்று தற்காத்துக் கொள்வதற்கான சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. சென்ற 1924-ம் வருடத்தில் ''டங்கி'' என்னும் ஒருவகை ரதம் பிரிட்டிஷாரால் கண்டு பிடிக்கப்பட்டது. அஃது 10 டன் எடையுள்ளதாயும் மணிக்கு 24 மெயில் வேகம் செல்லக்கூடியதாயு மிருந்தது. சமீபத்தில் அதுபோன்ற மற்றொன்றும் தயாரிக்கப்பெற்றுள்ளது. இஃது முன்னையதைவிட இருமடங்கு கனமுடையதாகவும், விரும்பிய பக்கல் திருப்பக்கூடிய பீரங்கிகள் அமையப் பெற்றதாகவுமிருக்கின்றன. (டங்கி என்பது இரும்புக் கவசம்பூண்டு, மேடு பள்ளம் மலை காடு எங்கும் தங்கு தடையில்லாமல் நாசப் படுத்திக்கொண்டு செல்லும் ஒருவித மூடு வண்டியாகும்.)

பிரான்ஸியர் சென்ற 1930ம் வருடத்தில் இத்தகைய யுத்த டங்கிகளில் 3000 தயாரித்து வைத்திருந்தனர். அமெரிக்கர் கண்டு பிடித்திருக்கும் புதிய டங்கியோ அதிக அழிவை உண்டுபண்ணிக் கொண்டே மணிக்கு 45 மைல் வேகத்தில் செல்லக்கூடியதாகயிருக்கின்றது. நிற்க பிரிட்டிஷாரும் அயர்ந்திருக்கவில்லை. மிகமிக அழிவை உண்டுபண்ணக்கூடிய நண்டைப்போன்றதோர் டங்கியைத் தயாரித்திருக்கின்றனர். எனினும் இஃது மற்றவைகளைவிட மிக கொடிய நாசத்தை உண்டாக்கக்கூடியதாக யிருக்கின்றது.

இதுவரை கூறப்பட்டு வந்தவைகளெல்லாம் இரசாயனக்கலைகளைக்கொண்டும், விஞ்ஞானத்தைக்கொண்டும், கணிதத்தை கொண்டும் இப்பூமியின்மீது நாசங்களை உண்டுபண்ண கண்டு பிடிக்கப்பெற்ற சாதனங்களாகும். ஆகவே ஆகாயத்தளவிலும் சிறிது கண்ணெடுத்துப் பார்ப்போம். தற்காலம் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் ஆகாய விமானங்களெல்லாம் பிற்காலத்தில் மனிதர்களுடைய நன்மைக்காக உழைக்காது மானிட வர்க்கத்தை அழித்துவிடவே அவைகள் மேற் பறந்து செல்லும். மனிதரன்றி ஆகாயத்தில் பறந்து தன் தன் இஷ்டப்படி வேலை செய்யக்கூடிய ஆகாய விமானங்களைக் கண்டு பிடிக்க முயற்சிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இனி வருங் கால யுத்தத்தில் ஆகாயத்தில் பறக்கும் விமானங்களில் மனிதர்களுமிருக்க மாட்டார்கள். அவைகள் தானாகவே உயரப்பறந்து சென்று பெரும் பெரும் பட்டணங்களின்மீது கழுகுகளைப்போல் வட்டமிட்டு மனிதர்களை அழித்துவிடக்கூடிய விஷ ஆவிகள் அடங்கிய பீப்பாக்கள், பைகள், பற்பல நாசகாரி ஆயுதங்கள் முதலியவைகளை அப்பட்டணங்கள்

மீது எறிந்து அங்கு வசிப்போரையும் ஊரை யும் அழித்து நாசமாக்கும்.

வருங்கால யுத்தத்தில், மனிதர்களை அழிப் பதற்கு ஜுவாலையையும் உபயோகிக்கப் படுமா? என்ற விஷயத்தைத் தற்சமயம் நாம் திட்டமாகக் கூறுவதற்கில்லை. எனினும் அது சாத்தியமாகுமென்று நிகழ்வுறும் சம்பவங் களைக்கொண்டு தெளிவாகின்றது. அவ்விஷ யத்தை கூடிய சீக்கிரம் உலக மாந்தர்கள் அனுபவப்பூர்வமாய் தெரிந்துகொள்ளத்தான் போகின்றனர். ஹா! என்னே பயங்கரம்! எத்துணை கொடுங்காதை!!

பிரிட்டிஷ் இராணுவத்தின் உயர்தர உத்தியோகஸ்தரான மேஜர் ஜனரல் E. D. சவுண்டன் என்பவர் கூறுவதாவது:—"மனி தர்கள்மீது பட்டவுடன் அவர்கள் துடித்து ஒரு நிமிஷத்தில் உயிர் துறக்கக்கூடிய பிரகா சத்தையும் நாம் கண்டுபிடித்துவிடக்கூடும். அதனை நாம் கண்டுபிடித்து விட்டால் ஏராள மான ராணுவங்களையும் இரண்டொரு நிமி ஷத்தில் அழித்துவிடலாம்" என்பதாகும்.

இவைகளைத் தவிர எதிரிகளை சமீபத்தில் நெருங்க விடாமல் தடுப்பதற்கு பற்பல அரண்களைக் கண்டு பிடிப்பதிலும் கவனம் செலுத்தப்பெற்று வருகின்றது. சென்ற மகாயுத்தத்தில் இத்தகைய அரண்கள்பல உப யோகிக்கப்பட்டன ஆகவே அத்தகைய அரண் களை இன்னும் விசேஷமான முறையில் கண்டு பிடிக்க பின்னும் கவனம்செலுத்தப் பெற்றே வருகின்றது. மின்சாரக் கம்பிகளை வேலிகள் போல் உபயோகிப்பதுடன் நாசகாரி வெடி குண்டுகளைப் புதைத்துவைத்து பரீக்ஷைபார்க் கப்பட்டதாம் அதுவும் அவர்கள் எதிர் பார்த்தபயனை வெகு திருப்திகரமாக அளித் தது.

எதிர்கால யுத்தத்தில் பற்பல விஷப்புகை களையும் ஆவிகளையும் உற்பத்திசெய்யக்கூடிய ஆயுதசாலைகள் தான் யுத்த மைதானில் பெரும்பாலும் காணப்பெறும். அதன் மூலம் விஷக்காற்று, நோய்களை உற்பத்தி செய்யக் கூடிய ஜெர்ம்ஸ் (பார்வைக்குப் புலனாகாத சிறுசிறு கிருமிகள்) முதலியவைகளை என் னேரமும் தயாரித்து வைத்து உபயோகிக்கப் பட்டுவரும். இத்தகைய சாதனங்களைக் கொண்டு ஒவ்வொரு ராணுவமும் தன்னையும் தற்காத்துக் கொள்ளும்.

தற்காலம் அவர்கள் கண்டுபிடித்திருக்கும் ஆவிகள் மிக்க விசித்திரமாக யிருக்கின்றன. அதிலொன்று மனிதன் சிறித்துக்கொண்டே மரணிக்கும்படி செய்வதாகும். மற்றொன்று, ராணுவத்திலுள்ள யாவருமே காசநோயால் பிடிக்கப்பெற்று அழியும்படி செவய்தாகும். வேறு சில வெறும் புகையாகத் தோன்றி மிக்க பராக்கிரமம் பொருந்திய வீரர்களையும் மூச்சுவிட முடியாது திணரும்படிச் செய்து ஒரே விக்கலுடன் மரண மடையச்செய்கிற தாகும். வேறு சிலவகை திரேகத்தில் கடும் நமைச்சலை உண்டுபண்ணி விடுவனவாகும். வேறுசில வாந்தியை உண்டுபண்ணுவதாகும், சில கண்ணில் மாலை மாலையாக நீர்வடியும்படி செய்துவிடுவதாகும். சில திரேகத்தில் கூச் சத்தை உண்டு பண்ணுவதாகும். சில திரேக மெங்கும் குத்தலையும் வலியையும் கொடுப்ப தாம் இவ்வாறே இன்னும் நூற்றுக்கணக்கான ஆவிகள் கண்டுபிடிக்கப் பெற்றிருக்கின்றன. இந்த ஆவிகளை உற்பத்தி செய்ய அதிகப் பொருள் சிலவு ஏற்படுவதுமில்லை, அதிக பிரயாசையும் காலதாமதமுமேற்படுவதில்லை. சொற்ப சிலவைக் கொண்டு சொற்ப நேரத் தில்மிக்க எளிதில் தயாரிக்கப்பட்டு விடு கின்றன.

ஆகவே இத்தகைய கருவிகளைக் கொண்டு எதிர்காலத்தில் நிகழக்கூடிய யுத்தம் எவ்வ ளவு பயங்கரமானதும், எத்தனை தீமை உண்டுபண்ணக் கூடியதும், எவ்வளவு அழி வைத் தரக்கூடியதுமாகும் என்பதை நாம் கவனித்தால் கியாமத்தென்று நாம் சொல்லி வந்ததையே இந்த சயின்ஸின் அபிவிர்த்தி தீவிரமாகஎண்பித்துக்காட்டுகிறதென்பதைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். எனினும் உலகம் முடிந்து கியாமம் நெருங்கி வருகிற தென நாம் கூறுவதைப்பற்றி மேனாட்டினர் நம்மை பலவாறு இழி மொழிகளால் வசைக் கூறி பரிகாசமும் செய்கின்றனர்.

———

சுகாதாரம்—தேகாரோக்கியம்

மானிடதேகம் முக்கியமாய்வனப்பும் வன்மையும் பெறுவதெல்லாம் மனுஷ்யன் உண்ணும் ஆகாரங்களின் தன்மையைப் பொறுத்ததாயிருக்கின்றது. உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணித்துப் போனபின் அதன் சத்துக்கள் சரீரத்தில் ஆரோக்கியம், வனப்பு, வன்மை ஆகியவற்றை உண்டு பண்ணுவதான அம்சங்களில்போய் சேர்ந்துவிடுகின்றன. இவ்வம்சங்களினாற்றான் உதிரம் விருத்தியாகி வனப்புண்டாகின்றது. மனித சரீரம் வன்மைப் பெற்று எலும்பு உறுதிப்படுகின்றது. நரம்புகளிலும் அவயவங்களிலும் புஷ்டி ஏற்படுகின்றது. இதுவே மனிதர்க்கு வேண்டியதாயுள்ள நோயற்றவாழ்வும், குறைவற்ற செல்வமுமாகும்.

ஆரோக்கிய விதிகள்

மனிதன் தனது தேகாரோக்கியமென்னும் உத்தியாவனத்தை செழுமை நிலவியதாய் வைத்து, பாது காத்துக்கொள்வதற்கு கீழ் காணப்படும் விதிகளை அனுஷ்டித்து வருவது அத்தியாவசியமாகும். அவையாவன:—

(1) துரிதமாய் ஜீரணித்து சரீரத்துடன் கலந்து நல்ல பயன் தரத்தக்கதான உணவுப் பொருட்களை உட்கொள்ளல் சிலாக்கியமாகும். உதாரணமாய் புதிய காய் கரிகள், கனிவர்க்கங்கள், பால், வெண்ணெய்,முட்டை நெய் முதலியனவாகும்.

(2) உணவை காலவரம்புக் குட்பட்டு குறித்தநேரத்தில் உட்கொள்ளல் வேண்டும். இருநேர உணவுக்கு இடைகாலத்தில் தின்பண்டங்களை அதிகம் உபயோகிப்பது கூடாது.

(3) உணவுப்பொருளை நன்றாய்மென்று நிதானமாய் விழுங்கவேண்டும். உணவை அவசரமாய் உட்கொள்ளுவது ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்குஞ் செயலாகும்.

(4) உணவருந்தியபின் வாய் பற்கள் கரம் ஆகியவற்றை நல்லவிதமாய்க் கழுவி சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். பற்களுக்கு பலத்தை யளிப்பதற்காகவென்று உறுதியான உணவுப்பொருளை மென்று தின்பது அவசியமாகும்.

(5) நாசிதுவாரங்களை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொண்டால் தான் சுவாசம் வாங்கவும் விடவும் சிரமமில்லாதிருக்கும். வாயினால் சுவாசிக்கும் கெட்ட பழக்கத்தை விட்டுவிட வேண்டும். அதனால் வாய் சுத்தமாயிருக்க ஹேதுவில்லாமல் வாய் அசுத்தமாய் விடுகின்றது.

(6) உணவு புசிப்பதற்குமுன் கைகள், நகங்கள், வாய் ஆகியவற்றினை நன்கு சுத்தமாய்க் கழுவிக்கொள்ளல்வேண்டும்.

(7) இராப்பகல் காலங்களில் சுத்தமான காற்றை சுவாசிப்பதையே முக்கிய நோக்கமாய்க் கொள்ளல்வேண்டும். அறையில் வெளிச்சம்வருவதற்காக ஏற்படுத்தி வைக்கப்பட்டிருப்பதை (ஜன்னலை) எப்பொழுதும் திறந்தே வைக்கவேண்டும். சருமம், நுரையீரல், ஹிருதயம் முதலியவற்றில் ஏற்படும் தீங்குகளை சுத்தக்காற்றை சுவாசித்தல் எளிதில் போக்கிவிடுகின்றது.

தற்காப்பு விதிகள்.

தேகத்திலுள்ள அசூசைகளைக் களைந்து தேகாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கீழ் காணப்படும் விதிகளை அவசியம் அனுஷ்டித்தல் வேண்டும்:—

(1) அநுதினமும் ஸ்நானஞ் செய்வதை வழக்கமாகக் கொள்ளல்வேண்டும். சருமத்துவாரங்களை சுத்தமாய் வைத்துக் கொள்வதற்கு சவுக்காரம் உபயோகிப்பது அவசியமேயாகும். குளிர்ந்த ஜலத்தைவிட சிறிது சூடான ஜலமே பிரயோசனமளிப்பதாகும்.

(2) கழுத்து நெஞ்சு இடுப்பு வயிறு ஆகியவைகளில் இறுக்கமான உடைகளை அணிதல் கூடாது. காற்று சரீரத்தில் படுதற்கு உடை சிறிது மெல்லியதாய் இருப்பது நல்லது.

(3) உணவின் இடைகாலத்தில் சுத்தமான ஜலத்தை தாராளமாய்ப் பருகவேண்டும்.

குளிர்ந்த ஜலத்தைவிட கொதித்து ஆறிய ஜலமே மிக ஏற்றதாகும்.

(4) மலங்கழிப்பதற்காக தினமும் குறிப்பிட்ட நேரங்களை ஏற்பாடுசெய்துகொண்டு தவருது மலசுத்திசெய்து வரவேண்டும்.

(5) தினமும் சரீரப்பியாஸை செய்யவேண்டும். முதியவர்கள் தேகம் வியர்க்கும் வரைக்கும் நடப்பது நல்லது.

(6) தேகம் ஆரோக்கியமாயிருப்பதற்கு அத்தியாவசியமாக தினமும் இரவில் ஆழ்ந்த நித்திரை கொள்ளல்வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படுத்துறங்கிஎழும் அப்பியாசத்தைப்பழக்கத்திற்குக் கொண்டுவருவது மேலானதாம்.

(7) சூரிய வெளிச்சம், திவ்விய உணவு, தூய்மை ஆகியவையினுல் பல்வகையான வியாதிகள் தானே நீங்கிவிடுகின்றன.

(8) சூரிய வெளிச்சமும் நல்லுணவும் திரேகத்திற்கு வலுவை உண்டுபண்ணி வியாதியைத் தடுப்பதற்குள்ள சக்தியை அளிக்கின்றன. அதனுல் தானே ஆரோக்கியம் ஏற்படுகிறது. பகற்காலத்தில் சூரியவெளிச்சம் வீட்டுள் பிரவேசிப்பதற்காக ஜன்னல் கதவுகளை நன்ருகத் திறந்து வைக்கவேண்டும்

(9) சரீரத்தில் காற்று தாராளமாய் புகுவதற்கேற்ற உடை அணையப்பெறவேண்டும். வீட்டினுள் அதிகப் பழக்கமுள்ள இடங்களை அடிக்கடிக் கழுவி சுத்தம் செய்யவேண்டும். இதனுல், விஷக்கிருமிகள் அழிந்து சுகசாதனம் ஏற்படுகின்றது.

(10) ஈக்கள், கொசுக்கள், எலிகள், மூட்டைப்பூச்சிகள் முதலியன ஆரோக்கியத்துக்குக் கொடிய சத்துருக்களாகும். ஆகவே அவற்றை ஒழிப்பதற்கு சதா பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும்.

(11) வீட்டின் பல இடங்களிலும் துப்பிக் கொண்டும், மூக்குசிந்திப் போட்டுக்கொண்டுமிருப்பதனுல் பற்பல நோய்கள் ஏற்படுவதற்கு ஹேதுவாகின்றது. இத்தீய வழக்கமானது சுகாதாரத்திற்கு மிக்க கேடு விளைவிப்பதா யிருக்கின்றது. வீட்டிற்குள் துப்பும் வழக்கமானது தானே தன் வாழ்க்கையை நாசப்படுத்துவதற் கொப்பாகின்றது

(12) காலரு, பிளேக் ஆகிய விஷநோய் பரவியிருக்குங் காலத்தில் ஜனங்கள் அதிகமாய் வசிக்கும் வீட்டில் வசித்தல் கூடாது. குறுகிய வீட்டில் அதிகமானேர் கூடி வாழ்வது பெருங்கேட்டைத் தரத்தக்கதாகும்.

குணமும். ஆரோக்கியமும்.

சுகாதரப் பாதுகாப்புக்காக மேலே கூறப்பட்ட விதிகளல்லாது மிகமுக்கியமான வேறு சிலவிதிகளுமுண்டு. அதாவது:—மனித சுகத்துக்கும், ஆனந்த வாழ்க்கைக்கும் மிக முக்கியமானதும், நலன்தரத்தக் கதுமான மற்ருென்றுண்டு. அது "களிப்பான சுபாவம்" என்பதாகும். நிம்மதியான மனத்தினுல் தான் களிப்பான நிலைமை உண்டாகிறது. கவலையற்ற உள்ளமே ஆரோக்கியத்திற்கு அரிய சாதனமாகும்.

கோபம் தேகாரோக்கியத்துக்கு மிகப் பொல்லாத பகையாகும். சின்னஞ்சிறு விஷயத்துக்கெல்லாம் பெருத்த கோபங்கொள்ளும் மாந்தரே மற்ருேரைக்காட்டிலும் அதிகமாக எப்போதும் பிணியாளராகவும் பலஹீனராகவும் காணப்படுகின்றனர். அதிகமான கவலையும் கோபமும் கொள்வோர்க்கு அநேகமாய் காசநோய் ஏற்படுகின்றது.

நிம்மதியான உள்ளமும், களிப்பான சுபாவமும் அதிகமான ஆரோக்கியத்தை இனிது அளிப்பதுடன், சரீரத்தின் இராஜக் கருவிகட்கு சுகத்தையும் பலத்தையும் அளிக்கின்றன. பொதுவாக மனிதன் எத்துணை சந்தோஷமாயிருப்பானே அத்துணை ஆரோக்கியமாயிருப்பன்.

எனவே, நேயர்காள்! ஆரோக்கியமும் சுகாதார வாழ்வும் உங்களது விருப்பமாயிருப்பின்,கோபத்தையும் விசனத்தையும் எவ்வாற்ருனும் விட்டொழியுங்கள். விசனமிருப்பினும் பொருட்படுத்தாமல் ஆனந்தத்தால் அதைப் போக்குங்கள். இவ்வாறின்றி சதா கவலையும் கோபமுங்கொண்டு உங்கள் நோய்கட்கு எம்மட்டுந்தான் நல்லுணவும் அரிய மருந்தும் புசித்தபோதிலும் அஃது ஒரு சிறிதும் சுகத்தை அளிக்கா. "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்."

பாடசாலைத் திறப்புவிழா.

காயல் பட்டணம் மத்ரஸத்துல் காஹிராவின் திறப்புவிழா வைபவம் சென்ற 20-5-31 ந்தேதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு "கமருஸ்ஸமான்" ஆசிரியர் ஜனாப் செ. யி. ம. ஸையத் அஹ்மது மௌலானா அவர்கள் தலைமையின்கீழ் சிறப்பாகநடந்தேறியது. ஆலீஜனாப் அல்ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லா ஆலிம் ஸாஹிபவர்கள் பாடசாலைக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். இவ்வைபவத்துக்கு எராளமான ஜனங்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். பல ஹிந்து, கிறிஸ்தவ சகோதரர்களும் விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

ஜனாப், செ. யி. ம. ஸையத் அஹமது மௌலானா அவர்கள் அக்கிராசனராகத் தெரிந்தெக்ககப்பட்ட பின்னர்; அப் பாடசாலை மாணவர் 13 வயதுள்ள மு. க. முஹம்மதால் கிராஅத் மிக அழகாக ஓதப்பட்டது. பிறகு ஜனாப் மு. க. அ. முஹம்மது மூஸா லெப்பை அவர்கள் கூட்டத்தினரை வரவேற்று ஒரு பிரசங்கஞ் செய்தார். அதன் பின் வக்கீல் ஸ்ரீமான் தாதாசாரியா ரவர்கள் ஊர் செல்லவேண்டிய திருந்ததால் முன்னதாகவே பேசிவிட்டுச் செல்வதற்கு இடமளிக்கவேண்டுமென கேட்டுக்கொண்டு, மனித அறிவு அபிவிருத்தி செய்யப்படவேண்டிய அவசியத்தைப்பற்றியும், தற்காலம் மார்க்கஞானமுள்ள அறிஞர்கள் அதிகம் இல்லாததைப்பற்றியும், கூறிப் பிரஸ்தாபப் பாடசாலை காயல்பட்டணத்தின் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு போதியதாக இல்லையென்றும், பொதுமக்கள் பள்ளிக்கூடத்துக்குத் தக்க உதவிசெய்து அதை அபிவிருத்திக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் கூறினார். பிறகு ஸ்ரீமான் அய்யரவர்கள் 25 ரூபாயும், ஜனாப் அ. மீ. உதுமான்பிள்ளைத் தரகனார் அவர்கள் நூறு ரூபாயும் நன்கொடையளித்தார்கள். பிறகு தலைவர் பிரசங்கஞ் செய்தார், அதன் சாரமாவது:—

"காலத்தின் போக்கையும், மனிதர்களின் விபரீத மனப்பான்மையும் அறிந்து ஒதுங்கி நிற்போரில் யானுமொருவன். எவ்வித முயற்சியும் கைகூடாமல் ஏங்சிப்போய் எல்லாம் இறைவனருளால் நடைபெறுமென எதிர் பார்த்து நிற்போருள் யானுமொருவன். நம்மிடையே காணப்படும் சில அனாச்சாரங்கள் ஒழியவேண்டுமென்ற ஆர்வங்கொண்டிருப்பதில்யான் எந்த வாலிபனுக்கும் பின் வாங்குபவனல்லேன்.

ஒருநாட்டின் மக்கள் நாகரிக அபிவிருத்தியடைந்து உலகத்தின்ஏனையமுற்போக்குள்ள நாட்டினரைப்போலாகவேண்டுமாயின் அதற்கு அறிவு அபிவிருத்தி அத்தியாவசியமாகும். அறிவு அபிவிருத்தியாகவேண்டுமாயின், இந்தக் காஹிராப் பாடசாலையைபோன்ற கல்விக் கழகங்கள் பல ஏற்படவேண்டும். ஆனால் பள்ளிக்கூடங்கள் எண்ணிக்கை அளவில் பெருகுவதால் மட்டும் நன்மை ஏற்பட்டுவிடமாட்டாது. பாடசாலையை நல்ல முறையில் நடத்தத் தேவையான பணம் வேண்டும்; அதில் மாணவர்கள் ஏராளமாகச் சேரவேண்டும்; மாணவரின் பெற்றோர்க்குத் தம் மக்கள் கல்வியறிவுள்ளவராயிருத்தல் வேண்டுமென்ற ஆர்வம் வேண்டும்; பாடசாலையின் அதிகாரிகளுக்கு அதை ஒழுங்காக நடத்தும் சாமர்த்தியம் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பள்ளிக்கூடத்தில் உள்ள உபாத்தியாயர்கள் மாணவர்களைத் தம் சொந்தக் குழந்தைகளேபோல் பாவித்து அவர்களது கல்வி அபிவிருத்தியில் கண்ணுங் கருத்துமுள்ளவராயிருத்தல் வேண்டும். இவ்வளவு அம்சங்களும் ஒருங்கே அமைந்திருந்தால்தான் பாடசாலைகள் ஸ்திரப்பட்டு அவை ஏற்படுத்தப்பட்டதற் குரிய பயனை அளிக்கும். நாம் இங்கே கூடியிருப்பது போல் பெரிய கூட்டமாகக் கூடி மகா நாட்டைச் சிறப்பாக நடத்தி, பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்து சென்று விடுதலால்மட்டும் பயனேற்படமாட்டாது. குறிப்பிடப்படும் விஷயங்கள் சித்தி பெறுமாறு முயற்சித்தல் வேண்டும். காலத்துக்கேற்ப தக்க முயற்சிகளைக் கைக்கொள்ளும் நாடுகளே இது காலை உலகில் முன்னணியில் நிற்கக் காண்கின்றோம். நாமும் அவ்வாறே செய்து ஏன் வெற்றி

பெறலாகாதெனக் கேட்கின்றேன்? சென்ற ஐந்து வருடங்களாக இந்தப் பாடசாலைக்கெனத் தனிக்கட்டிடம் ஒன்று இல்லாமையால் பூனை தன் குட்டிகளை இடம்விட்டு இடம் பெயர்த்து எடுத்துச் செல்வது போன்றே வெவ்வேறு இடங்களுக்கு மாற்றிக்கொண்டே போகவேண்டியதா யிருந்தது. ஆண்டவனருளால் இக்குறை இப்பொழுது நிவர்த்தியாய் விட்டது. இனி பெற்றோர்கள் தம் மக்களை இப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவரவேண்மென்றும், பொது ஜனங்கள் அதற்குத்தக்க பொருளுதவி செய்ய முன்வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

அக்கிராசனர் பிரசங்கத்திற்குப் பிறகு மாணவர்கள் மு. கி. அ. ஷாஹுல் ஹமீது க. மி. ஷாஹுல் ஹமீது ஆகிய இருவர்களிடையே நடைபெற்ற மார்க்க சம்பாஷணையும், மாணவர்கள் கா. தி. ஷெய்கு அலீ நஸ்கி, மு. சா. முஹம்மது ஹசன் ஆகிய இருவருக்குள்ளும் நடந்த சம்பாஷணையும் கூட்டத்தினரை உற்சாகத்திலாழ்த்தின.

பிறகு பெண் கல்வி என்ற பொருள் பற்றிப்பேசிய ஜனுப். நூ. கு. அமீர் சுல்தான் அவர்கள் வைதீக, லௌகீக வாழ்க்கை இரண்டுக்கும் பெண் கல்வி அத்தியாவசிய மென்றும், பெண்கள் கல்வி கற்பதால் தம்மளவில் நல்வழியில் நடந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவியாவதன்றியும், கணவர்களையும் குழந்தைகளையும் சரிவரப் பேணிவருவதற்கும், தம் மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் உதவி செய்வதாய் இருக்குமென்றும் நன்கெடுத்துக் கூறினர்.

ஜனுப் சே. கு. ஸையத் முஸ்தபா அவர்கள் "அறிவின் விளக்கம்'' என்ற விஷயமாகப் பிரசங்கஞ் செய்தார்கள். அறிவென்பதென்ன? அதைப் பெறுவதெங்ஙனம்? என்பவற்றைப்பற்றி விரிவாகக்கூறி மார்க்க அறிவே எல்லாவற்றினும் சிறந்ததென்றும், அதுவே மனிதனை உயர்வடையச் செய்யுமென்றும், மனித சமூகச் சீர்திருத்தமும் முற்போக்கும் மார்க்க அறிவைப் பொறுத்ததாகுமென்றும், எனவே, மார்க்க ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு சீர்திருத்தத் துறையில் இறங்கவேண்டுமென்றும் கூறினர். போர்டு பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் உ. முத்துசாமிப்பண்ணையார் அவர்கள் "அபிமானம்'' என்பதைப்பற்றிப் பேசுங்கால் அபிமானமே எல்லா நற்காரியங்களுக்கும் அடிப்படையாய் அமைந்துள்ளதென்றும், மதாபிமானம், சமூகாபிமானம், தேசாபிமானம் முதலியனவெல்லாம் பொதுஜன நலத்தை அபிவிருத்தி செய்வதாகுமென்றும், எனவே ஒவ்வொரு மனிதனும் அபிமானம் அல்லது அன்பு என்னும் உணர்ச்சி பெற்றிருத்தல் வேண்டுமென்றும் கூறினர். ஜனுப் மு. க. அ. முஹம்மது மூஸா லெப்பையவர்கள் "கல்வி'' என்ற விஷயமாகப்பேசினர். ஜனுப் ஹாஜீ நூ. த. அப்துல் ஹை சாஹிப், பாடசாலையைத் திறந்துவைத்தஆலீ ஜனுப் அல்ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லா ஆலிம் சாகிப் அவர்கட்கும் அக்கிராசனர் அவர்கட்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்த பிறகு, பாடசாலையை ஸ்தாபிக்கும் விஷயத்தில் தாம் மேற்கொண்ட முயற்சிகளையும், பட்ட சிரமங்களையும்பற்றி விரிவாகக் கூறினர். ஜனுப் அல்ஹாஜ் பா. சு. முஹம்மது அப்துல்லா ஆலிம் சாகிப் அவர்கள் பாடசாலைக்கு 25 ரூபாய் நன்கொடை யளித்துவிட்டுத் தாம் சிறிய தொகையே கொடுப்பதற்காக வெட்கமுறுவதாகவும், இதற்கு முன் தோன்றி மறைந்த மற்ற பாடசாலைகளைப்போல் இந்தப் பாடசாலையையும் க்ஷீணிக்கவிடாமல் எல்லாக் கனதனவான்களும் தத்தமாலியன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அக்கிராசனரவர்கள் கூட்டத்தை முடிக்கையில் பொதுமக்கள் முன்போலில்லாமல் இனியாவது கல்வி அபிவிருத்தி செய்வதில் ஊக்கமுள்ளவர்களாக வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

இறுதியாக ஆலீ ஜனுப் அல்ஹாஜ் அ. உ. நூஹு தம்பி லெப்பை ஆலிம் அவர்கள் வந்தோருபசாரங் கூறிய பின்னர் மாணவர்கள் வாழ்த்துக்கவிகள் பாடியதும் பாத்திஹா துஆ ஓதப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

ஹாஜிகள் வருகை.

பம்பாயில் குதூகல வரவேற்பு.

கூத்தானல்லூரிலிருந்து, ஹஜ்ஜை நிறைவேற்றுவான் வேண்டி மக்கமாநகர் சென்றிருந்த வியாபாரப் பிரபுக்களும், கனவான்களுமாகிய ஜனாப்களான ஹாஜி அ. ம. அப்துல்லாஹ் சாஹிப், ஹாஜி ஆ. மு. காதிர் முஹையித்தீன் ருவுத்தர், ஹாஜி ந. அ. ஷேக்தாவூத் ருவுத்தர், மௌலவி ஹாஜி ச. அ. முஹம்மது அலீ சாஹிப், ஹாஜி அ. மு. முஹம்மது ஷரீப் ஆலிம் சாஹிப், ஹாஜி ஆ. நெ. அப்துஸ்ஸலாம் ருவுத்தர், ஹாஜி ஆ. நெ. நூர் முஹம்மது ருவுத்தர், ஹாஜி தி. ப. முஹம்மது ஷரீப் ருவுத்தர், ஹாஜி க. மு. முஹம்மது அலீ சாஹிப், ஹாஜி அ. அ. நூர் முஹையித்தீன் சாஹிப், கத்தீப் ஹாஜிசா. மு. முஹம்மது இப்ராஹீம் சாஹிப், ஹாஜி க. மு. அப்துர் றஹீம் ருவுத்தர், ஆகியவர்களும் மற்றும் 10 பெண்டிர்களும், மல்லிபட்டணம் ஹாஜி சா. மு. காஜா அலாவுத்தீன் சாஹிப் முதலியவர்களும் 1-6-31 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்தனர். அன்னோர்களை வரவேற்பதெற்கென்று சென்னையிலிருந்தும் கூத்தானல்லூரிலிருந்தும் விஜயஞ் செய்திருந்தவர்களும் ஜனாப் பா. சு. ஹாஜி முஹம்மது அப்துல் ...ஹ சாஹிப் கம்பெனி ஜனாப் திவான் முஹையித்தீன் சாஹிப், ஜனாப் ஹாஜி H. A. M. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் முதலியவர்களும் துறைமுகஞ் சென்று அவர்களை வரவேற்றுப் பூமாலைசூட்டி விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். ஹாஜிகள் இரண்டு தினங்கள் வரை அங்கு தங்கியிருந்து 4ந்தேதி பகல் 12-15 எக்ஸ்பிரசில் சென்னைக்குப் பிரயாணமானார்கள். அதுபொழுதும் வழி யனுப்ப ஸ்டேஷனுக்கு ஏராளமான நண்பர்கள் விஜயஞ் செய்திருந்ததுடன் ஹாஜிகள் யாவர்கட்கும் (கூத்தானல்லூர்) ஹாஜி H. A. M. அப்துல் காதிர் ஆலிம் சாஹிப் அவர்களால் புஷ்பஹாரம் சூட்டப்பெற்று குதூகலமாக வழியனுப்பி வைக்கப்பட்டது.

சென்னையில் ஆடம்பர வரவேற்பு.

5-6-31 யன்று பகல் எக்ஸ்பிரசில் ஹாஜிகள் வருகிறார்களென்ற சமாசாரம்பத்திரிகை மூலமாகப் பரவிவிடவே, கூத்தானல்லூர் வேலூர், நெல்லிக்குப்பம், திருச்சினாப்பள்ளி முதலிய ஊர்களிலிருந்து வந்திருந்தோர்களும், சென்னையின்கண் வதியும் பல பெரியார்களும், தனவந்தர்களும், வியாபாரப் பிரபுக்களும் ஏராளமாய் மாலை 3 மணிக்கே சென்டிரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வந்து கூடிப் புகைவண்டியின் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர். சரியாக எக்ஸ்பிரஸ் 3-45 க்கு பிளாட்பாரம் வந்து சேர்ந்ததும் அங்குக் கூடியிருந்தோர் யாவரும் வெகு ஆவலோடு ஹாஜிகளிருக்கும் வண்டிக்குச் சென்று முஸாபஹா, (கைகொடுத்து) முஆனக்கா (கட்டிதழுவுதல்) செய்து சந்தோஷமாக வரவேற்றார்கள். "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தின் சார்பாக மௌலானா மௌலவி அல்ஹாஜ் முஹம்மது கமாலுத்தீன் ஹஸரத்அவர்களால் ஹாஜிகள் யாவர்க்கும் புஷ்பஹாரஞ் சூட்டப்பட்ட பிறகு ஹாஜிகள் அவர்களுக்கென்று தயாரித்து வைக்கப்பெற் றிருந்த மோட்டார்களில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். மறுநாள் பகல் 1 மணிக்கு சென்னை பிரபல வர்த்தகராய மெஸர்ஸ் எஸ். இ. எஸ். அப்துல்கரீம் அண்டு பிரதர்ஸில் எல்லா ஹாஜிகளுக்கும், அவர்களை வரவேற்பதற்கெனப் பல ஊர்களிலிருந்து வந்திருந்த சகல நண்பர்களுக்கும், சென்னையிலுள்ள பல முக்கியஸ்தர்கட்கும் அழகிய விருந்தொன்று அளிக்கப்பட்டது. அவ் விருந்தில் ஜனாப் எஸ். இ. எஸ். முஹம்மது இஸ்மாயில்கனி அவர்கள் விருந்தினர்கள் யாவர்களையும் அழகிய முறையில் வரவேற்று தக்கஉபசாரம் புரிந்தார்கள். அன்று மாலை 9 மணிக்கு இண்டோ-சிலோன் மெயிலில் கனம் ஹாஜிகள் எல்லாரும் சுயபதி செல்வதற்கரக ஸ்டேஷன் சென்றனர். அது சம

யம் பலர் ஸ்டேஷனுக்குச் சென்று அவர்களை வழியனுப்பிவைத்தார்கள்.

கோரடாச்சேரியில் வரவேற்பு.

6-ந் தேதி மாலை மெயிலில் ஹாஜிகள் புறப்பட்டு வருகிருர்களென்பதை யறிந்த கூத்தானல்லூர் வாசிகளி லனேகர் முன் எச்சரிக்கையாகவே மாயவரம், தஞ்சாவூர் முதலிய ஸ்டேஷன்களுக்கு வந்திருந்தனர். அன்று பஜ்ர் தொழுகைக்குப்பின் கூத்தானல்லூர் வாசிகள் பலரும் மற்றஊர்வாசிகளும் கொரடாச்சேரி ஸ்டேஷன் நிரம்ப குழுமி விட்டனர். ஹாஜிகள் பிரயாணமாகிவந்த புகைவண்டியில் விழுப்புரத்தில் மெயில் வண்டியில் தீபிடித்துக்கொண்டதால் குறிப்பிட்டநேரத்தில் அவ்விடமிருந்து பிரயாணமாகாமல் 4-மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது. அதனுல் வரவேற்பதற்காகப் பல ஸ்டேஷன்களுக்கும் வந்திருந்தோர்கட்கு மிகவும் சிரமமேற்பட்டது. கொரடாச்சேரி ஸ்டேஷனில் காத்திருந்தோருள் அநேகர் அவ்விடமுள்ள காபி கிளப்புகளுக்குச் சென்று பசியாறி வந்தனர். சிலர் ரயில் தாமதமாக வருமென்பதைத் தெரிந்துகொண்டு ஊர்சென்று பசியாறிவந்தனர். அனேகருக்கு யாதொன்றும் கிடைக்காமலிருந்தும் ஊர்சென்று வருவதற்குள் ஹாஜிகள் வந்துவிட்டால் தாம் அவர்களைச் சந்திக்க முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தால் யாதொன்றும் புசியாமலே ஸ்டேஷனிலேயே காத்திருந்தனர். 7-ந் தேதி பகல் $11\frac{1}{2}$ மணிக்குத் தஞ்சையிலிருந்து புகைரதம் கொரடாச்சேரி ஸ்டேஷன்வந்து சேர்ந்தது. கனம் ஹாஜிகள் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டு மோட்டார் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

கூத்தாநல்லூரில் வரவேற்பு.

ஊர் மகாஜனங்கள் கிராம எல்லைப்புறத்திலேயே ஹாஜிகளை வரவேற்ருர்கள். கனம் ஹாஜிகள் மேலப் பள்ளிவாசலில் இறங்கி 'தஹிய்யத்துல் மஸ்ஜித்' தொழுகை நிறைவேற்றினுர்கள். அதன் பின் முஸ்லிம்கள் புடைசூழ மாணவர்கள் கீதங்கள்பாட அங்கிருந்து ஊர்வலமாக சின்னப்பள்ளிக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஆங்கு "வித்ரிய்யா மஹாலி"ல் கனம் தங்கிய ஹாஜிகள் யாவர்க்கும் ஊர் ஜமாஅத்தார்கள் சார்பாக ஜனுப் சே.ப.முஹம்மது அலீருவுத்தர் பெருந்திரளான கூடடத்தினிடையே உபசார சொற்பொழிவாற்றினுர். மதரஸா 'மன்பஉல்உலா' மாணவர்கள், மதரஸாவின் சார்பாக தயாரிக்கப்பெற்றிருந்த உபசாரக்கீதங்களைப்பாடினுர்கள். அவ் வுபசாரங்களுக்கு மௌலவி ஹாஜி ச. அ. முஹம்மது அலீ சாஹி அவர்களால் ஹாஜிகளின் சார்பாகப் பதில் கூறப்பட்டது. ளுஹர் தொழுகை அங்கு நிறைவேற்றி யானபின்னர் ஹாஜிகள் அவரவர்களின் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

[குறிப்பு:—ஜனுப் மௌலவி ஹாஜி எஸ். ஏ. முஹம்மது அலீசாஹிப் அவர்களை நாம் நேரில் கண்டு அவர்களது ஹிஜாஸ் பிரயாண சம்மந்தமாக விசாரித்ததில் அங்கே எல்லா வசதிகளும் கிடைத்தனவென்றும் மிகவும் சௌகரியமாக இருந்ததென்றும் தங்களது பிரயாண சம்பந்தமானவிபரங்கள் அடங்கிய ரிபோர்ட்டு ஒன்றைக் கூடியசீக்கிரம் தருவதாகவும் சொன்னுர்கள். இன்ஷா அல்லாஹ் அதை நமது அடுத்த மாசிகையின்கண் பிரசுரிப்போம். ப—ர்.]

சிங்கையில் மௌலானு அவர்களின் பிரசங்கமும், காதியானிகளின் சஞ்சலமும்.

(J. M. A. மரைக்காயர் வரைவது)

இந்திய மீரட் நகரவாசியாகிய மௌலானு மவுலவி, அல்லாமா, ஹாபீஜ், காரி, அல்ஹாஜ், ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் சித்தீகி யுல்காதிரிய்யி, லிஷ்தி, இத்ரீஸி சாஹிபு அவர்கள் முதல்முறை இச்சிங்கைக்கு விஜயம் செய்த சுமார் மூன்று நான்கு வருஷங்களுக்குப்பின் தற்பொழுது இரண்டாம் முறையாக விஜயம் செய்துள்ளார்கள்.

சென்ற வருகையில் மூன்று ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் மௌலானா அவர்களின் செங்கமல கரங்களைப்பற்றி இஸ்லாம் மதத்தைத் தழுவினரென்பதும், இதற்குப்பின் சிலோனுக்குச் சென்ற சமயம் சிலோன் சர்வகலாசாலை புரொப்ஸர் ரெவரெண்ட் கிங்க்ஸ்பிறே பி. எ. என்ற ஒரு பாதிரி, மௌலானா அவர்களின் கரங்களைப்பற்றி இஸ்லாமைத் தழுவினர் என்பதும் பத்திரிக்கை வாயலாய் நேயர்கள் அறிந்திருக்கலாம்.

இம்முறை இவண் விஜயம் செய்த இந்த ஒரு மாத காலவரை யரைக்குள் மவுலானா அவர்கள் இவ்விடமுள்ள சகல (மஸ்ஜிது) பள்ளி வாயல்களிலும், பள்ளிக்கூடங்களிலும் (டவுன் ஹால்) நகரமாளிகையிலும் இங்கிலீஷ், அரபி, உர்தூ, முதலிய பிரபல்ய பாஷைகளில் அரிய உபந்யாசம் புரிந்தார்கள். இதுகளைக் கேட்ட ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தரும் பிரபல்ய அட்வகேட்டுமான மிஸ்டர் சச்சந்தரநாத டட் (S.N. Dutt) M.A. L. L. B. பாரிஸ்டர்-அட்-லா அவர்களும் மவுலானா அவர்களின் கரங்களைப்பற்றி பரிசுத்த இஸ்லாமைத் தழுவினர். மேலும் ஒரு காதியானிதான்முன் செய்த பாவத்திற்கு வருந்தி தௌபாச் செய்து ஸுன்னத்து ஜமாஅத்தைப் பற்றினர்.

மௌலானா அவர்கள் தங்கியிருக்கும் இல்லத்திற்கு பிற சமயவாதிகளும் விபரீதக் கொள்கையுள்ளவர்களும் மற்றும் பலரும் சென்று பல கேள்விகளைக்கேட்டும், சந்தேகங்களைக் கேட்டு தெளிந்தும் வருகின்றனர். சகல மதஸ்தர்களையும், காதியானி, வஹ்ஹாபிகளையும் அறைகூவி யழைத்து பரிசுத்த இஸ்லாத்தின் ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் கொள்கையில் திருப்பி நேர்வழி காட்டிவருவதை நித்திய கடமையாய்க் கொண்டுள்ளார்கள். காதியானி, வஹ்ஹாபி, முதலிய விபரீத விஞ்ஞானிகள் அஞ்ஞான மிருளிலகப்பட்டுக் கிடந்துழலும் இக்காலை மௌலானா அவர்களின் மாபெருஞ் சுடரின் மெஞ்ஞான ஒளிப்பிரசங்கமானது புத்துணர்ச்சி யூட்டுகிறதென்பது மிகையாகா.

ஒவ்வொரு மஸ்ஜிதுகளிலும் நடைபெற்ற மௌலானா அவர்களின் பிரசங்கத்தை மலாய் பாஷையில் ஜனாப் டாக்டர் எச்.எஸ். முன்ஷி ஜே. பி. அவர்களால் சுருக்கமாய் மொழி பெயர்க்கப்பட்டது. நமது தென் இந்திய முஸ்லிம்களின் தாய் பாஷையாகிய தமிழில் அப்பிரசங்கத்தை மொழி பெயர்க்காதது ஒரு குறையாகவே இருந்துவந்தது. சென்ற மாதம் 24, 25-ந் தேதிகளில் சவுத் பிரிட்ஜ் ரோடு பெரிய பள்ளிவாசலில் உர்தூ பாஷையில் நடந்த மௌலானா அவர்களின் பிரசங்கத்தை கனம் ம. கா. மு. காதிர் முகியத்தீன் அவர்களால் இயன்றவரை தமிழில் சுருக்கமாய்க் கூறப்பட்டது. கல்மனமும் கரைந்துருகுமாறு பிரசங்கிக்கப்பட்ட அப்பிரசங்கத்தில் சில முக்கிய விஷயங்கள் அடங்கப்பெற்றிருந்தது. அதாவது:—நமது நபிகள்கள் பிரான் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்துப் புறப்பாட்டில் றப்புல்ஆலமீன் அவர்களைக்காப்பாற்றிய விதமும், பூமியானது விரோதியின் கால்களைபிடித்துக்கொண்ட விதமும், அவர்கள் ஸ்தூலசரீரத்துடன் புறாக்கில் சவாராகி (மிஃறாஜ்) விண்ணுலகு ஏகினதும், புறாக்கு என்பதுக்குறிய அருமையான அர்த்தங்களும், விஞ்ஞானிகளின் தடுமாற்றங்களும், முஹம்மது அலீ M.A., LL.B. மிஃறாஜை கனவு என்று தனது இங்கிலீஷ் (குறான்) மொழி பெயர்ப்பில் எழுதியிருக்கும் மௌட்டியங்களும், மிர்ஜாகுலாம்அஹ்மது காதியானியின் பொய் இல்ஹாம்களும் அவரின் முக்கிய சிஷ்யர்களாகிய காஜாகமாலுத்தீன் முஹம்மதலி முதலிய பிறட்டர்களைப்பற்றிய விஷயங்களும் தக்க ஆதாரத்துடன் சவிஸ்தாரமாய் விளக்கிக் கூறப்பெற்றிருந்தது.

மௌலானா அவர்களின் கருத்துக்களைக் கூடியவரையில் அழகாய் வெளியிட்ட நண்பர் ம. கா. மு. காதிர்முஹையித்தீன் சாஹிப் யார் என்பது தங்களுக்கு நன்கு தெரியும். அன்னவர் மௌலானாவின் அருகில் நின்று தன் வாயாலேயே காதியானிகளின் புரட்டை வெளியிடவும் சந்தர்ப்பம் நேர்ந்ததுபற்றி எல்லாம் வல்ல இறைவன்பால் ஷுக்கூர் செய்வதுடன் அன்னவரின் வாக்கைப்போல் மனமும் மாறிவிடும் என நம்புகிறோம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், அவர்களின் முதல் தோழராகிய அபூபக்கர்ஸித்தீக் (ரலி.) அவர்களும் விரோதிகளிடம் சிக்குண்டிருப்பார்களாகில் நிட்சயமாய்க் கொல்லப்பட்டேபோயிருப்பர் என்று "அபூபக்கர் ஸித்தீக்" என்னும் நூலில் ரிகார்டு காப்பி யடித்து எழுதிய பா. தாவூதுசாவின் அறியாமையை உலமாக்

கள், ஸை. இ. வாயிலாய் எடுத்து விளக்கி அறிவுறுத்தியபோது என் அப்பன் குதிருக்குள் இல்லை யென்பதற்கொப்ப மார்தட்டி வெளி வந்து தா. இ. வில் பா. தா. வை ஆதரித்து, உண்மையை எடுத்துக் காட்டிய உலமாக்களை எதிர்த்துப்பல கட்டுரைகள் எழுதிவந்து இறுதியில் லாங் மென்ஸ் கிறீன் & Co., க்கு ரூ. 1015ம், சிலவு தொகையும் நஷ்ட ஈடாக பா. தா. தண்டம் கொடுக்க காரணராயிருந்த பா. தா. வின் அத்தியந்த மித்திரர் (ஒரு சமயம் சிஷ்யர்) கனம் ம. கா. மு. காதிர் முகிய்யித்தீன் அவர்கள் மௌலானா அவர்களை இதற்குமுன் சந்தித்திருந்தால் இவ்வித நஷ்டம் பா. தா. வுக்கு ஏற்பட்டிராதென்றும், அன்னவர் தானே ரிகார்டு காப்பி யடித்துக் கொண்டு மற்றோர்மீது வீண் புகார் செய்திருக்கமாட்டாரென்றும் கருத வேண்டியதாயிருக்கிறது.

கிறிஸ்துவப் பாதிரிகளே மவுலானா அவர்களின் முகாதாரவிந்தத்தையும், சொல் வன்மையையும் பார்த்து, கேட்ட, மாத்திரத்தில் தன்னிலை மாறி இஸ்லாமிய (நூர்) ஒளி இருதயத்தில் துலங்கப் பெறுகிறார்களென்றால், மற்ற விபரீத தாத்பரிய விஞ்ஞான நடன அஞ்ஞானிகள் எம்மாத்திரம்! என்னே மவுலானா அவர்களின் அருள் வாக்கு!! என்னே அவர்களின் பேரூழியம்!!

வல்ல இறைவா! மௌலானா அவர்களை இவ்வுலக யாத்திரையில் வெற்றிபெறச் செய்து அவர்களுக்கு சரீர வன்மையையும் நீண்டஆயுளையும் தந்தருள் பாலிப்பாயாக. வஸ்ஸலாம். (கனம்மௌலானா அவர்கள்காதியானிய அஹ்மதிய்யாக் கொள்கைகளை சம்ஹாரஞ் செய்வதில் மிக பிரக்யாதி பெற்றவர்களென்பது வெள்ளிடை. அன்னோரை நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தினர் இவ்விடத்திற்கழைத்து நமது நாட்டில் தோன்றி வரும் வழி கெட்ட காதியானிக் கொள்கைகளைக் கண்டித்து தக்க பிரசாரம் செய்விக்க முயற்சித்து அதற்குள்ள நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றனர். இவ்வாறே நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு சங்கங்களும் மௌலானா அவர்களை வரவேற்று அவர்களது இனிய உபதேசங்களைக் கேட்டு வழி கெட்ட கொள்கையை போக்குவதற்குள்ள தக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமென எதிர்பார்க்கின்றோம். ப—ர்)

ஹிபாஜத்துல் இஸ்லாம், பொதுக் கூட்டம்.

25-6-31 வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின் முத்தியால்பேட்டை ஜும்ஆ மஸ்ஜிதில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்க சார்பாக பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அத்சமயம் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். அதற்கு சங்கத்தின் வைஸ் பிரசிடெண்டு மௌலானா காஜீ ஹாஜீ பலீஹுத்தீன் சாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆரம்பத்தில் அக்கிராசனரர் அவர்கள் சபையின் நோக்கத்தை எடுத்துச்சொல்லி "ஸைபுல்இஸ்லாம்" உதவி ஆசிரியர் L. M. குலாம் அஹ்மத் சாஹிப் அவர்களை பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர் திரிப்போலி முஸ்லிம்களுக்கு இட்டாலியர்களால் இழைக்கப்பட்டு வரும் தீங்குகளையும் திரிப்போலியின் நிலைமையையும் அங்கு இஸ்லாம் மார்க்கத்தையே அழித்துவிடுவதற்காக செய்யப் பெற்ற சூழ்ச்சிகளையும் நல்ல முறையில் விளக்கிக் காட்டி கீழ்கா ணும் தீர்மானத்தை பிரேரணை செய்தார்:—

1. நிரபராதியாகவும், எதிர்த்துத் தாக்குவதற்குச் சக்தியில்லாமலு மிருக்கிற திரிப்போலி அராபிய முஸ்லிம்கள்மீது இத்தாலியர்கள் புரிந்துவரும் மிருகத்தனமான செயல்களை, சென்னை நகர முஸ்லிம்கள் அடங்கிய இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கின்றது.

இத்தாலியர்களின் இக்கொடுமைகளை விசாரணை செய்து நீதி வழங்கும்படியாக இக்கூட்டம் சர்வதேச சங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இத்தாலியர்களின் அதிக்கிரமச் செயல்களைக் கண்டிக்கும் அறிகுறியாக இத்தாலிய தேச சாமான்களெதையும் வாங்காமற் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று அகில இந்திய கிலாபத் மகாநாடு செய்த தீர்மானத்தை இக்கூட்டம் முழு மனதுடன் ஆதரிப்பதோடு இத்தாலிய சாமான்களைப் பகிஷ்கரிக்கும்படியும் முஸ்லிம் சகோதரர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாஹிப் (பாக்கவீ) அவர்கள் ஆதரித்துப் பேசுகையில் துருக்கி சுல்த்தான் அப்துல் ஹமீதுகான் அவர்கள் காலத்தில் திரிப்போலியானது ராணுவங்கள் வைக்கப்பட்டு தக்க முறையோடு பாதுகாக்கப்பெற்று வந்தனவென்றும், அதற்குபின் அதன் தலைநகரை இட்டாலியர்கள் கைப்பற்றி ஆதிக்கங்கொண்டு நாளுக்கு நாள் இஸ்லாத்தையே அழித்துவிடவேண்டும் அல்லது யாவரையும் கிறிஸ்துவ மதத்தில் சேர்த்துவிடவேண்டும் என்னும் நோக்கத்தோடு மதயுத்தம் ஆரம்பித்து முஸ்லிம்களுக்கு சொல்லொண்ணு கஷ்டமிழைத்து வருவதை விளக்கமாக எடுத்துக்கூறி தீர்மானத்தை ஆதரித்தார்கள். தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

2. லாகூரின் பிரபலபுஸ்தக வியாபாரியாகிய மிஸர்ஸ் சனத்சிங் கம்பெனியார் குர்ஆன் ஷரீபின் பிரதிகளை அச்சிட்டு அதில்(இன்னீஜாயிலுன்பில் அர்ளிகலீபா) நான் பூமியில் ஓர் பிரதிநிதியை உண்டாக்கப்போகிறேன் என்ற வ[illegible]க்கியத்திலுள்ள கலீபா (பிரதிநிதி) என் [illegible]தத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் கபீதா (கெட்ட[illegible] வஸ்து-ஷைத்தானை) படைக்கப் போகிறேன் என்னும் வாக்கியத்தை புக வைத்துப் பிரசுரித்திருப்பதை ஜனுப் மௌலவி ஹாஜீ S.A. முஹம்மது அலீ சாஹிப் (பாக்கவி) அவர்கள் விளக்கிக்காட்டி வேண்டுமென்றே அல்லது தவறுதலாகவோ இவ்விஷயம் நிகழ்வுற்றிருக்கலாம் ஆனல் (இஅராப்) ஜபர், ஜேர், புள்ளி முதலியவைகளில் தான்சாதாரணமாக தவறுதல் ஏற்படுவது சகஜம். அதுவன்றி முக்கியமான கருத்தையே புரட்டக்கூடிய இடத்தில் தவறிழைக்கப் பெற்றிருப்பதால் வேண்டுமென்றே அவ்வாறு செய்திருக்கலாமென்றே கருதவேண்டியதிருக்கின்றது. ஆதலின் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பிரதிகளை பறிமுதல் செய்துவிடும்படிக்கும், இனி முஸ்லிம் அல்லாதார் குர்ஆன் ஷரீபை அச்சிடும் தொழிலில் ஈடுபடாமல் தடுத்துவிட ஓர் சட்டம் இயற்றிவிட வேண்டு மென்பதற்குள்ள தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் உருக்கமாகப் பேசினர்கள். ஜனுப் மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாஹிப் (பாக்கவீ) அவர்கள் இதை ஆதரித்துப் பேசுகையில் குர்ஆன் ஷரீபானது 13 நூற்றாண்டுகளாக எத்தனையோ இலக்ஷக் கணக்கான பிரதிகள் பிரசுரமாயும் அவை யாதொரு மாறுதலுமின்றி ஒழுங்கான முறையிலேயே யிருந்து வருகின்றன. இம்மாதிரி தவறுதல்கள் பரவுமாயின் பிற்காலத்தில் எத்தகைய விபரீதம் விளையுமென்பதற்கு நாம் அஞ்சவேண்டியதாக யிருக்கின்றது. இப்பிரயத்தினம் பரிசுத்த வேதத்தையே அழித்துவிடுவதற்கு முயற்சி செய்வது போலாகின்றது. ஒரு அக்ஷரத்தையும்கூட கூட்டவோ குறைக்கவோ திருத்தவோ உள்ள எவ்வித மாறுதலுக்கும் இடமளிக்கப்படாதிருந்த பரிசுத்த குர்ஆன், இற்றைக்கு அதன் கருத்தையே தலைகீழாய்ப் புறட்டக்கூடிய வாக்கியங்களைக் கொண்டு மாற்றப்படுகின்றது. இவைகளை முஸ்லிம்கள் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பது முறையன்று. ஆதலின், அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது அத்தியா அவசியமாகுமென சவிஸ்தாரமாய்ப் பேசினர்கள். இத்தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேறியது.

மேற்கூறப்பெற்ற இரண்டு தீர்மானங்களையும் இந்தியா கெவர்ன்மெண்டாருக்கும் சென்னை கெவர்ன்மெண்டாருக்கும் அறிவித்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு சபை கலைந்தது.

———